ஒகஸ்ட் 05, 2001 ரூபா 14.00 அறிமுக விலை ரூபா 12.00


REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்

## விமானக் குண்டினால் வீடு சேதம்!

வடக்கில்



## புலிகள் தாக்கி விமானம் நாசம்!

தெற்கில்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத் துறைப் படிப்பகம்

சர்வஜன வாக்கெடுப்பால் பலன் உண்டா?

கட்டுநாயக்கா தாக்குதல்!

பூலான் தேவி படுகொலை!

# கறுப்பு ஜூலையில் நெருப்புடன் கட்டுநாயக்காவில் விசேட பூஜை

## 14 வானூர்திகள் ஆகுதி; அரசியல் நெருக்கடியே மிகுதி

1983 கறுப்பு ஜூலையின் அவலங்களை நாட்டு மக்கள் அலாதியாக மறந்திருப் பார்கள்.

ஆனால் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனோ அதனை வெடி மற்றும் வான வேடிக்கைகளுடன் கொண்டாட ஏற்கனவே தீர்மானித்திருக்கிறார் போலும்.

ஜூலை 23ஆம் திகதியுடன் கறுப்பு ஜூலையின் 18ஆவது ஆண்டு பூர்த்தியாகிறது.

மறுநாள் அதிகாலை சுமார் 3.56 மணியளவில் புலிகளின் ஒரு தொகுதி கரும்புலிகள் மற்றும் கமாண்டோ உறுப்பினர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வடமேற்காக அமைந்திருக்கும் இலங்கை விமானப் படையினரின் பிரதான முகாம் மீது தாக்குதலை தொடுத்தனர்.

நீர்கொழும்பு – மினுவாங்கொடை பகுதியில் குரான என்ற இடத்தில் அமைந்திருந்த விமானப் படையினரின் மின்சார பாதுகாப்பு வேலிகளை ஊடறுத்து உட்சென்ற புலிகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இஸ்ரேலியத் தயாரிப்பு கிபிர் மற்றும் ரஷ்யத் தயாரிப்பு மிக் – 27 ரக ஜெட் குண்டு வீச்சு விமானங்களையும், எம்.ஐ– 17 ரக ஹெலிக்கொப்டர்களையும், ஆர்.பி.ஜி. மற்றும் டொம்பா என்று அழைக்கப்படும் 40 மி.மீ கிரனேட் லோஞ்சர்களின் துணையுடன் தகர்த்தனர்.

அதிகாலை சுமார் 3.46 மணியளவில் அருகில் இருந்த உயர் வலு கொண்ட மின்மாற்றியை தகர்த்ததுடன் புலிகளின் உறுப்பினர்கள் தாக்குதலில் இறங்கினர்.

இலங்கை விமானப் படையின் தாக்குதல் பிரிவுக்குச் சொந்தமான வான்கலங்களின் இருப்பிடமாக இருந்ததாலும் இலங்கையின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் இருந்ததாலும் இந்தத் தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்போதும் அதி உச்சத்திலேயே இருந்து வந்தன.

இதனை நன்கு தெரிந்திருந்தும் புலிகள் அதனையே தமது தாக்குதல் இலக்காக தெரிந்தெடுத்திருக்கிறார்கள் என்றால் அது உண்மையிலேயே புலிகளின் அபார சக்தியையே புலப்படுத்தியிருக்கிறது.

நிசப்தமாக உட்புகுந்த புலிகளை பங்கர்களுக்குள் இருந்து விமானப் படை வீரர்கள் தாக்கத் தொடங்கினர். இரு தரப்பினருக்கும் இடையில் கடுமையான துப்பாக்கி சண்டை மூண்டது.

ஆனாலும் புலிகள் அவர்களை ஆர்.பி.ஜி மற்றும் ஜி.பி.எம்.பி போன்ற ஆயுதங்களை கொண்டும் தன்னியக்க துப்பாக்கி கொண்டும் மூர்க்கமாகத் தாக்கினர்.

தொடர்ந்தும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டால் வந்த காரியம் கெட்டுவிடும் என்று புலிகள் எண்ணினரோ என்னவோ சிறு தொலைவில் இருந்தே ஆர்.பி.ஜி மூலம் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கிபிர் ஜெட்களையும், ஒரு மிக் – 27 ரக ஜெட்டையும், இரண்டு எம்.ஐ –17 ரக ஹெலிக்கொப்டர்களையும் முற்றாக தாக்கி அழித்தனர்.

இத்தாக்குதலில் சுமார் 15 தொடக்கம் 20 வரையான புலிப் போராளிகள் பங்குபற்றியிருக்கலாம் என படைத்தரப்பு கணிப்பீடுகள் ஊகம் தெரிவிக்கின்ற போதிலும் உண்மையாக உட்புகுந்த புலிகளின் எண்ணிக்கை இதுவரை கண்டறியப்படவில்லை.

அங்குள்ள நிலைவரங்களை நேரில் சென்று பார்த்த போது, உள் நுழைந்த புலிகள் 'V' வடிவமாக முன்னேறியிருக்கிறார்கள்.




புலிகளில் ஒரு பிரிவினர் விமானப்படை விமானங்களைத் தாக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட மற்றைய பிரிவினர் விமான ஓடு பாதைக்கு அப்பாலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் பிரதேசங்களை நோக்கி நகர்த்தியிருக்கிறார்கள்.


இதன்படி புலிகளின் தாக்குதல் திட்டம் வெறுமனே விமானப்படைக் கலங்களை அழிப்பது மட்டுமன்றி ''ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்''க்குச் சொந்தமான பயணிகள் விமானங்களையும் அழிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

மேலதிக ஆயுத விநியோகங்கள் எதுவுமற்ற இந்த தனித்த தாக்குதல் திசைமாறிப் போய் விடக் கூடாது என்பதிலும் கரிசனையாக இருந்த புலிகள் விமானப் படைத் தளம் மீதான தாக்குதலை கைவிட்டு சர்வதேச விமான நிலையத்தை நோக்கி தமது கவனத்தை திருப்பினர்.

இவ்வாறு விமான நிலையத்தை நோக்கி முன்னேறிய புலிகள் இருவர் அந்த விமான ஓடு பாதையை அடைய முன்னரே விமானப் படையினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிர் இழந்தனர். ஏனையோர் தமது தாக்குதலைத் தொடர்ந்தவாறு முன்னேறினர்.

அவர்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு ஏ– 336 ரக எயார்பஸ் விமானங்களை முற்றாகத் தாக்கி அழித்தனர். இவ்விரு விமானங்களின் அருகிலும் இரு போராளிகளின் சடலங்கள் கடுமையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டன.

பின்னர் விமான நிலையத்தின் பிரதான கட்டிடத்திற்குள் புலிகள் நுழைய முயன்றிருக்கிறார்கள். இம்முயற்சியில் ஒரு புலி வீரர் கொல்லப்பட எஞ்சியர்வகளில் இருவர் பிரதான கட்டட அறைகளுக்குள் புகுந்து கொண்டனர். ஏனைய இருவர் அக்கட்டடத்தின் மேல் ஏறிக் கொண்டனர்.



இதற்கிடையில் புலிகள் விமான நிலையத்தையும், விமானப்படைத் தளத்தையும் தாக்குவதை அப்போது அப்பகுதிக்கு பொறுப்பாகவிருந்த கட்டளை அதிகாரி எயார் கொமடோர் ஆர்.ஏ.ஆனந்த தனது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

முப்படைத் தளபதிகளுக்கும் விடயம் அறிவிக்கப்பட்டது. இவ்வாறான தாக்குதல்களைச் சமாளிக்கவென தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க பயிற்சி பெற்ற இராணுவ கொமாண்டோக்கள் நிலைமையை சமாளிக்கும் பொருட்டு அங்கு அனுப்பப்பட்டனர்.

விசேட கொமாண்டோக்களின் வருகையை எதிர்பார்த்திருந்த புலிகளின் அதிரடிப்படைப் போராளிகள் அவர்கள் மீதும் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

புலிகள் விமான நிலையத்தின் பிரதான கட்டுப்பாட்டுக் போபுரத்தை (Main Control Tower) கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் அதனை முதலில் விசேட இராணுவ கொமாண்டோக்கள் முற்றுகையிட்டனர்.

அதற்குள்ளும் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அதாவது பிரதான கட்டுப்பாட்டுக் கோபுரத்தை முற்றுகையிட முனைவது இராணுவக் கொமாண்டோக்கள் என்பதனை அறியாத விமானப்படை வீரர்கள் அவர்கள் மீது கடுமையான துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

எதிரிகளின் எதிர்ப்புக்களுக்கு மட்டுமே முகம் கொடுக்க பயிற்றப்பட்டிருந்த இந்த இராணுவ கொமாண்டோக்கள் தமது நண்பர்களின் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகினர். இவர்களில் நால்வர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு சில மணியத்தியாலங்களில் இறந்தார்.

தாம் இராணுவக் கொமாண்டோக்கள்தான் என்பதை தமது சகாக்களுக்கு அறியப்படுத்திக் கொண்ட அவர்கள் பிரதான கட்டட சாலைக்குள் புகுந்த புலிகளைத் தேட முயற்சித்தனர்.

இதில் சிக்கிக் கொண்ட இரு கரும்புலி வீரர்கள் தம்மைத் தாமே வெடிக்க வைத்து உயிரை மாய்த்துக் கொண்டனர். இந்த வெடிப்பின் அதிர்வினால் அங்கு பொருத்தப்பட்டிருந்த விலையுயர்ந்த கண்ணாடி, ஜன்னல்கள் நொறுங்கிச் சிதறின.

கீழே கொமாண்டோக்களின் கையோங்குவதை ஊகித்துக்கொண்ட கட்டடத்தின் மேலிருந்த புலிகள் சுமார் 8.20 மணியளவில் அங்கு சற்று முன்னர்தான் சிங்கப்பூரில் இருந்து வந்து பயணிகளை இறக்கவிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏ–340 எயர்பஸ் விமானம் மீது குண்டு மாரி பொழிந்தனர்.

இதனால் விமானம் கடும் புகையுடன் தீயுடன் சங்கமித்தது.

அத்துடன் அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏனைய மூன்று ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமானங்கள் மீதும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து அதன் பாகங்கள் எங்கும் சல்லடை போட்டனர். இவ்வாறு சுமார் நாலரை மணித்தியாலச் சமரில் எட்டு வினாப்படை விமானக்கலங்களையும் ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸுக்குச் சொந்தமான ஆறு பயணிகள் விமானங்களையும் புலிகள் சேதப்படுத்தினர். இவற்றில் மூன்று முற்றாக எரிந்து சாம்ராகின. ஏனைய மூன்றும் திருத்தப்படக்கூடியவையா என்பது சந்தேகமே. மொத்தமாக தேசிய விமான சேவையின் அரைப் பங்கைப் புலிகள் அழித்திருக்கின்றார்கள். இவற்றின் பெறுமதி சுமார் 350 கோடி அமெரிக்க டொலர்களாகும் என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே கூறினார்.

புலிகள் இவ்வாறான பாரியதொரு தாக்குதலை தலை நகரின் இதயப் பகுதியிலேயே மேற்கொண்டிருப்பது அரசினதும் பாதுகாப்பு உயரதிகாரிகளினதும் அடிவயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

அதாவது புலிகள் தாம் கூறுவது போல் காற்றுப் புகாத இடங்களில் எல்லாம் கூட நுழைந்து தாக்குதலை நடத்தக்கூடியவர்கள் என்பதை மறுபடியும் நிரூபித்திருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை இத்தாக்குதல் அதன் முக்கிய வருமானத்துறையான சுற்றுலா விமானப் பயணத்துறையை மிக மோசமாகப் பாதித்துள்ளதுடன் தேசிய பாதுகாப்புச் சம்பந்தமாகப் பல சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.

ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக பொருளாதார ரீதியாக மோசமான நிலையைத் சந்தித்துள்ள சந்திரிகா அரசு இந்த இழப்புகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

புலிகள் குறைந்தபட்சம் ஆறு தொடக்கம் எட்டு மாதங்கள் வரையான காலப்பகுதியில் இத்தாக்குதலுக்கான திட்டத்தையும் தயார்ப்படுத்தலையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

பல நூற்றுக்கணக்கான வீதித்தடைகளையும் இராணு பொலிஸ் சோதனைகளையும் தாண்டிப் புலிகள் ஆர்.பி.ஜி. மற்றும் ஜி.பி.எம்.ஜி. டொம்பா போன்ற கனரக ஆயுதங்களை கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், இனிமேலும் இந்த வீதிச் சோதனைகள் தேவை தானா என்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்கிறது.

இராணுவ உயர் அதிகாரிகளின் கருத்துப்படி, மேற்படி விமான தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடும், மிதிவெடிகள், ராடார் நிலைகள் போன்ற துல்லியமான தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே புலிகள் இவ்வாறு வெற்றிகரமாக தமது தாக்குதல் திட்டத்தினை முடித்திருக்கிறார்கள். அவ்வாறாயின் அவர்களுக்கு அவற்றினை வழங்கியது யார்?

சாதாரணமாக விமானப் படையின் கட்டளையதிகாரிக்கும், பாதுகாப்புக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிக்கும் அத்தளம் சம்பந்தமான பூரண அறிவு இருக்கும்.

அத்துடன் அது சம்பந்தமான வரைபடங்கள், வான் படங்கள் என்பன அவர்களின் பயன்பாட்டிலேயே இருக்கும். அப்படியாயின் அவர்களில் யாராவது கொடுத்திருப்பார்களா?

அல்லது வெளிநாட்டு விமான பயிற்றுவிப்பாளர்கள் உதவியாளர்கள் என்பவர்களின் உதவியைப் புலிகள் பெற்றனரா? என்பனவற்றை அறிய விமானப்படையின் புலனாய்வு உயரதிகாரி எயர் வைஸ் மார்ஷல் விஜித்த தென்னக்கோன் தலைமையிலான உயர்மட்ட விசாரணைக் குழு ஒன்றை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி அமைத்திருக்கிறார். அக்குழு விரைவில் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் தாக்குதலிற்கு முதல் நாள் இரவு 9.30 மணியளவில் பஸ்ஸில் வந்த சுமார் 20 பேர் கொண்ட குழுவொன்று குரான பகுதியில் அமைந்துள்ள மேஜர் ராஜா பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் வந்தமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த வேளை அவ்வூர் மக்கள் சந்தேகப்பட்டு அருகிலுள்ள விமானப் படை வீரர்களிடம் முறையிட்டதாகவும், அவர்கள் அதனை உதாசீனம் செய்துள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பொறுப்பான முறையில் செயற்பட்டிருந்தால் இப்பேரழிவைத் தவிர்த்திருக்கலாம் என்று சில உயரதிகாரிகள் அவ்விரு விமானப்படை வீரர்களை பலிக்கடாக்களாக்கி தாம் தப்பிக்க முயல்வதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் விமானப்படையின் தாக்குதலரால் சற்று பாதிக்கப்பட்ட புலிகள் அவர்களின் வான்கலங்களுக்கு அவர்களது கோட்டையில் வைத்தே சமாதி கட்டியிருப்பது விமானப்படையின் வரலாற்றில் என்ன, இலங்கை வரலாற்றிலேயே மிக முக்கிய இடத்தை பிடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## தமிழ் மக்களை அழித்ததுக்கு பழிவாங்கவே தகர்ப்பு

கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீதான புலிகளின் அதிரடித்தாக்குதல் பற்றிப் பரவலாகப் பேசும் இந்த நேரத்தில், கடந்த காலங்களில் இந்தத் தாக்குதல் வானூர்திகள் தமிழ் மக்கள் மீது நடத்திய கொடூர தாக்குதல்களையும் அவற்றால் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியானதையும் நினைவு கூர்ந்தால் பொருத்தமாக இருக்கும்.

மேற்கண்டவாறு விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உரிமை கோரிய புலிகள், முப்படைகளதும் இதயமாக விளங்கும் கட்டுநாயக்க வான்படைத்தளம் மீதான தொடர் தாக்குதலில் வான்படையின் 8 வானூர்திகளும் 3 போக்குவரத்து ஊர்திகளும் நிர்மூலமாக்கப்பட்டன என்று அறிவித்துள்ளனர்.

புலிகளின் அணிகள் சம்பவம் இடம்பெற்ற அன்று அதிகாலை 3.25 மணியளவில் தாக்குதலை ஆரம்பித்தனர். தொடர்ந்து விமானப்படையின் உயர் தாக்குதல் வலு உடைய வானூர்திகளின் தரிப்பிடத்தின் மீதான தாக்குதலைத் தீவிரமாக்கினர். காலை 5.30 மணிக்குள் 8 வானூர்திகள் அழிக் கப்பட்டன. ஒரு எரிபொருள் தாங்கி தகர்க்கப்பட்டது.

நாற்பது ஏக்கர் பரப்பளவை உடைய விமானப்படைத்தளத்தினுள் ஊடுருவிய புலிகளின் விசேட படை அணிகள் அதிகாலை முதல் முற்பகல் வரை கடும் சமரில் ஈடுபட்டன.

எரிபொருள் தாங்கியின் அருகில் நின்று தாக்குதல் மேற்கொண்டிருந்தவரை நோக்கி படையினர் தாக்கியபோது அவர் எரிபொருள் தாங்கியைத் தாக்கி அழித்தார். வான்படை வானூர்திகளைத் தாக்கி அழித்த புலிகள் ஓடு பாதையில் நின்று கொண்டிருந்த ஆறு போக்குவரத்து ஊர்திகளின் மீதும் தாக்குதல் தொடுத்தனர்.

இவற்றில் மூன்று எயார் பஸ்கள், அக்கினியில் சங்கமமாகி அழிந்துப் போயின. மிகுதி மூன்று எயார் பஸ்கள் கடும் சேதங்களுக்கு உள்ளாகின.

இவை ஒவ்வொன்றும் 890 கோடி ரூபா பெறுமதியானவை. முற்றாக அழிக்கப்பட்ட எயார் பஸ்களின் பெறுமதி மாத்திரம் மூவாயிரம் கோடி ரூபா ஆகும்.

சேதத்துக்குள்ளானவை தொடர்பான விவரங்கள் இதில் சேர்க்கப்படவில்லை. வான் படையினர் இழந்த வானூர்திகளின் பெறுமதி 160.2 கோடி ரூபா.

ஒரு மிக்–27 ரக மீ ஒலி விமானம், கிபிர் வேகத் தாக்குதல் விமானம், ஒரு எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர், ஒரு எம்.ஐ.17 ரக துருப்புக்காவி ஹெலிக்கொப்டர், மூன்று கே–8 பயிற்சி விமானங்கள் ஆகியவை முற்றாக அழிக்கப்பட்டன.

இந்த வானூர்திகள் தமிழ் மக்களின் பிரதேசங்களில் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களை எவரும் மறந்துவிட நியாயம் இல்லை.

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் 122 அப்பாவி மக்கள் பலியானார்கள். நாகர் கோவில் பாடசாலை மீது நடத்திய தாக்குதலில் 30 க்கும் அதிகமான பாலகர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. யாகப்பர் தேவாலயம் மீதான தாக்குதல் பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வவுனியா தேவாலயப் படுகொலைகள், அரியாலை நாவலடிக்கிராம படுகொலைகள், மந்துவில் படுகொலைகள், சாவக்கச்சேரி நகரம் – சங்கத்தானை படுகொலைகள், மாத்தளம் படுகொலைகள், நாச்சிக்குடா படுகொலைகள், சுந்தரப்புரம் படுகொலைகள், நல்லதண்ணி தொடுவாய் படுகொலைகள் என தமிழ் மக்கள் மீதான வான் படையின் தாக்குதல்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

இப்படிப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# அதிரடி விசாரணைகளில் சி.ஐ.டி.! அதிகாரிகள் பலருக்குக் 'கல்தா'!!

அக்கினியில் சங்கமமாகி அழிந்து போன வானூர்திகளை நினைத்து நினைத்து அரசு இன்னும் அழுது தீரவில்லை. அரசின் அடுத்தடுத்த நடவடிக்கைகள் அதன் உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அழிவுக்கு நீ காரணம்; நான் காரணம் என்று அடிபட்டு இறுதியில் அரசு கட்டு நாயக்க விமானப் படைத்தள அதிகாரிகளைத் தூக்கி எறிந்துவிட்டு கடந்த 28ஆம் திகதி புதிய அதிகாரிகளை நியமித்திருக்கிறது.

கட்டுநாயக்க விமானப் படைத்தளக் கட்டளை அதிகாரி எயார் கொமடோர் ஆர்.ஏ.ஆனந்த பதவி நீக்கப்பட்டு அவரது இடத்துக்கு எயார் கொமடோர் சண்ணா குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் விமானப் படைத் தலைமையகத்தின் பொறியியல் பகுதிப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். விமானத் தளத் தரைப் பாதுகாப்பு அதிகாரியாக கிரிஷான் ஜஹம்பத் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நடவடிக்கைகள் பணியகத்தின் பிரதானியாகப் பணியாற்றியவர்.

இரத்மலானை விமான நிலையப் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் மேலதிக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரத்மலானை விமான நிலையத்தின் தரைப் பாதுகாப்பு அதிகாரியாக உள்ள ஸ்குவாட்ரன் லீடர் ரொஹான் சில்வாவுக்கு உதவியாளராக விங்கொமாண்டர் பாலித ஒபய சேகரவை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் வீரக்கொடி நியமித்துள்ளார். இவர் கொழும்பு நகரின் பாதுகாப்பு பொறுப்புக்களின் தலைமை அதிகாரியாகச் செயற்பட்டு வந்தவர்.

இவை இவ்வாறிருக்க—

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பல்வேறு பக்கங்களாலும் முடுக்கிவிடப் பட்டுள்ளன. இந்த விசாரணைகளின் பிரகாரம் மேலும் பல பதவி மாற்றங்கள், பதவி நீக்கங்கள் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிரேஷ்ட பொலிஸ் அதிபர் ஏ.என்.எஸ். மெண்டிஸ் தலைமையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு (C.I.D) விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இவருக்குக் கீழ் ஆறு குழுக்கள் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

இந்தக் குழுக்களில் நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும், ஆறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அடங்குவர். இவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் இருநூறு இரகசியப் பொலிஸார் துப்புத் துலக்கத் தொடங்கியுள்ளனர்.

இராணுவ புலனாய்வு (Military intelligence), கடற்படைப் புலனாய்வு (Naval intelligence), வான்படை புலனாய்வு (Airforce intelligence), சர்வதேச புலனாய்வு (International intelligence), தேசிய புலனாய்வு (National intelligence Bureau), பயங்கரவாத புலனாய்வு (Terrorist intelligence) பிரிவுகளும் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை விஸ்தரித்துள்ளன.

சி.ஐ.டியின் முதற்கட்ட விசாரணைகளின் பேரில் இதுவரை ஐந்து விமானப்படையினர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் தாக்குதல் நடைபெறுவதற்கு முதல்நாள் கிராமவாசிகள் கொடுத்த தகவலை அசட்டை செய்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

புலிகளை ஏற்றிவந்து கட்டுநாயக்காவுக்கு அருகில் இறக்கி விட்டுச் சென்றதாகக் கூறப்படும் 'றோஸா' பஸ் எனச் சந்தேகித்து இரண்டை கைப்பற்றி சி.ஐ.டியிடம் ஒப்படைத்துள்ளனர் பொலிஸார். வென்னப்புவவிலும், கொட்டாஞ்சேனையிலும் வைத்து இந்த பஸ்கள் கைப்பற்றப்பட்டன.

செல்லமுத்து ரவிராஜ் (வயது 29), கோபால் செல்வகுமார் (வயது 23), பெருமாள் ஜீவவி (வயது 24) ஆகியோர் வென் னப்புவவில் கைப்பற்றப்பட்ட பஸ்ஸில் இருந்து கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.



எயா மார்ஷல் ஜயலத் வீரக்கொடி

விமானத் தளத்தைச் சூழ இலத்திரனியல் வேலிகள் (Elect-ronic fences) அமைக்கவும், விசேட கமராக்களை வேலிகளில் பூட்டி றேடார் வசதிகள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளவும் 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கேள்விப் பத்திரம் விடுக்கப்பட்டது. முடிவுத் திகதியான 1999ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதிக்கு இடையில் ஒன்பது நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் பெறப்பட்டன.

பின்னர் 2000ஆம் ஆண்டும் ஜனவரி மாதம் அந்த நிறுவனங்களிடம் சில விளக்கங்களைக் கேட்டு விட்டு மூன்று மாதங்களின் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது.

விமானத் தளத்தின் பாதுகாப்பு விடயத்தில் இவ்வளவு தூரம் 'ஏனோ தானோ' என்ற போக்குடன் நடந்து கொண்டது தொடர்பாகவும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீதும் சி.ஐ.டியினரின் கழுகுப் பார்வைகள் விழுந்திருக்கின்றன.

இதே வேளை—

விமானப் படைத் தளம் மற்றும் பயணிகள் விமானத் தளங்கள் மீதான தாக்குதலில் 28 வானூர்திகள் தாக்கப்பட்டதாக புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னியில் வெளியாகும் 'ஈழநாதம்' தினசரி செய்தி வெளியிட்டிருக்கிறது. இவற்றில் 18 வானூர்திகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டன என்று 10 வானூர்திகள் கணிசமான சேதத்துக்குள்ளாகியிருக்கின்றன என்றும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

A-340-300 எயார் பஸ்கள் இரண்டு, A- 330 -200 ஒன்று, கிபிர் தாக்குதல் விமானங்கள் நான்கு, K-8 பயிற்சி விமானங்கள் மூன்று, மிக்-27 தாக்குதல் விமானங்கள் இரண்டு, MI-17 தாக்குதல் ஹெலிக்கொப்டர்கள் இரண்டு, பெல் 412 ஹெலிக் கொப்டர்கள் இரண்டு, VVIP-412 ஹெலிக் கொப்டர்கள் இரண்டு ஆகியவை முற்றாக தகர்த்துஅழிக்கப்பட்டன.

A-320 ஏயார் பஸ் ஒன்று, A-330 எயார் பஸ் ஒன்று, நான்கு கிபிர் தாக்குதல் விமானங்கள், MI-24 தாக்குதல் ஹெலி கொப்டர் ஒன்று, ஒரு அன்ரனோவ் போக்குவரத்து விமானம், இரண்டு பெல் 412 ரக ஹெலி கொப்டர் ஆகியவை கணிசமான சேதங்களுக்குள்ளாயின என்றும் தெரி விக்கப்பட்டது. விமானப்படை தனது வானூர்திகளின் வலுவில் 45 சத வீதத்தை இழந்து விட்டது. விமானப்படையில் புதிதாக ஆரம் பிக்கப்பட்ட 'ரென் ஸ்குவாட்ரண்' (Ten Squatron) தனது அணியில் ஆறு தாக்குதல் விமானங் களை இழந்து விட்டது. அரசாங்கம் தாக்குதல் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான தரவு களை வழங்கி தென்னிலங்கை மக்களை ஏமாற்ற முயல்கிறது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் விசேட கொமாண்டோப் பிரிவான 'சிறுத்தைகள் அணி'யே விமானத் தளங்களின் மீதான தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

விமான களஞ்சியத்திலேயே கை வைத்த புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கொள்வனவு விடயத்திலும் சளைத்தவர்களாக இல்லை என அரசின் ''புலனாய்வுத்'' தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படியோ வான்வழியை தனது கைவந்த மார்க்கமாகப் பேணி வந்த அரசின் திட்டத்தில் இடி வீழ்ந்து விட்டது என்பது மட்டும் உண்மை.

—எறியன்

## பித்தன் பதில்கள்

ஏ.ஆர்.மசூர், மருதானை.
கே : பித்தனே.... தற்போதைய நெருக்கடிகளில் இருந்து மீள்வது குறித்து ஆராய ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்திருக்கிறாரே!
ப : எதிர்க்கட்சித் தலைவர்கள் வெறும் ஏமாளிகளா? தேவைக்கு மட்டும் பயன்பட.

வி.சந்திரன், பொறளை.
கே : தற்போது நடைபெறும் கொகாகோலா கிண்ணச் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி சாம்பியனாகுமா?
ப : லீக் போட்டிகளில் இலங்கை அணி ஆடும் ஆட்டத்தைப் பார்த்தால் 'ஆகும்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.



பா.மீனவேணி, நல்லூர்.
கே : இனப்பிரச்சினை தீர்ந்தவுடன் என்னைக் கல்யாணம் பண்ணுவதாக என் காதலர் சத்தியம் செய்திருக்கிறார். பித்தா!
ப : சரியாப் போச்சு. கல்யாணம் நடவாது என்பதை ரொம்ப நாசூக்காக எடுத்துச் சொல்லியிருக்கிறார் உமது காதலன்.

ச.ஆனந்த், ஸ்கந்தபுரம்.
கே : புலிகள் எவ்வளவுதான் விட்டுக் கொடுத்து சமாதானத்துக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தும் அரசு சண்டித்தனத்துக்கு இழுக்கிறதே...!
ப : பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பார்கள். அதுதான் கட்டுநாயக்காவில் தெரிந்து போச்சே...!

எஸ்.ராகுலன், உவர்மலை.
கே : பித்தா கட்டுநாயக்கா விமானத் தளத்திற்குள் எவ்வாறு புலிகள் புகுந்தனர்?
ப : கட்டுநாயக்கா விமானத்தளம் காற்றுப் புகக் கூடிய இடம் தா னே? ராகுலா.

சுமதி, வெள்ள வத்தை.
கே : பித்தா....! ஜனாதிபதி மீதான குற் றப் பிரேரணையில் 12 குற்றச் சாட்டுக்கள் இடம்பெற உள்ளன வாமே. ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார்?
ப : நிச்சயமாக அவர் தன்னுடைய சபாநாயகர் தம்பி அனுராவைப் போல் வெளி நாட்டுக்கு ஓடி விடமாட் டார். ஜெய லலிதா போல் சந்திரிகாவும் துணிச்சல்காரி. நின்று தாக்குப்பிடிப்பார்.



ரி.என்.ஷாகிர், மருதானை.
கே : பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம் சில ஆண் பிள்ளைகளுக்கு பிடிப்பதில்லையே?
ப : தனயனுக்குக் கவர்ச்சியில் கண். தகப்பனுக்குக் கரன்ஸியில் கண்.

பி.பிரேம், வவுனியா.
கே : இலட்சியமே இல்லாத இளைஞர் களை எதனுடன் ஒப்பிடலாம்?
ப : தண்டவாளம் இல்லாத ரயிலுடன் ஒப்பிடலாம்.

பி.சீலன், வெள்ளவத்தை.
கே : பறக்கும் தட்டும் இப்போதும் இருக்கிறதா?
ப : திருமணமான பின்பு பறக்கும் தட்டின் அனுபவம் ஏற்படும்.

வி.செங்கதிர், கரவெட்டி.
கே : புலிகளுக்கு எவ்வாறு தம்மைத்தாமே குண்டு வைத்து தற்கொலை செய்து கொள்ளும் துணிவு வருகின்றது?
ப : அவர்கள் இலட்சியப் புலிகள் என்பதால்.

த.ப்ரியா, மட்டக்களப்பு.
கே : தாடியுள்ளவரைக் காதலிக்கலாமா?
ப : முகத்திலே தாடிமுளைத்தவர் என்றால் பரவாயில்லை. தாடியில் முகம் முளைத்தவர் என்றால் யோசித்துச் செயற்படும்.



தீபன், வத்தளை.
கே : ஹரிஸ் ஜெயராஜ் இசையில் மஜ்னு பாடல்கள் எப்படி?
ப : மஜ்னுதான் அவரது முதல் படம். மின்னலே அதை முந்திக் கொண்டு வந்து விட்டது.

இ.வசந்தன், தெஹிவளை.
கே : ஆண்கள் 'ஷேர்ட்'டை உள்ளே விட்டாலா? வெளியே விட்டாலா அழகு?
ப : ஆண்கள் உள்ளே விட்டால்தான் பார்ப்பதற்குக் கம்பீரமாகத் தெரிவார்கள்.

ப. அச்சுதன், புளியங்குளம்
கே : பேரினவாதிகளால் தமிழர்கள் துன்புறுத்தப்பட்ட முக்கியமான நாட்களிலே புலிகள் தாக்குதலை நடத்துகின்றனர் ஏன் பித்தா?
ப : நடந்த கொடுமைகளை உலகம் மறந்து விடக்கூடாது என்பதை விட, ஆடம்பர வாழ்வுவாழும் சொந்தத் தமிழினம் என்றுமே மறக்கக் கூடாது என்பதற்காகத் தான்.

எஸ்.ராஜன், பாண்டிருப்பு.
கே : சரிந்த இமயத்துக்காக மக்கள் சொரிந்த கண்ணீரை டி.வி.இல் பார்த்ீரா பித்தனே?
ப : சரிந்தது இமயம் என்றால் பொருட்டல்ல விட்டிடலாம். மறைந்தது நடிப்பின் இதயமல்லவா.

ம.ஞான செளந்தரி, மட்டுவில்.
கே : பித்தா எங்கள் கணவர்கள் மதுக்கடைக்குப் போகிறார்கள் தடுப்பதற்கு வழி என்ன?
ப : மங்கையரே ஒரு மதுக்குடம் தானே! மந்திரம் தெரியாதா உங்களுக்கு!



வி.சாந்தி, வெள்ளவத்தை.
கே : நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகமா?
ப : ஐயையோ அங்கேயும் ராகிங் இருக்குமா....?




GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018

என்டெனா பொருத்துதல்



Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018

அவசர திருத்தங்கள்



Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

05 ஒகஸ்ட் 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## கட்டுநாயக்கா தாக்குதல்

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவம் முழு உலகத்தின் கவனத் தையும் ஈர்த்துள்ளது.

இலங்கையில் எல்லோருக்கும் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகள் நடத்திய தாக்குதல் காரணமாகப் பல போர் விமானங்கள் முற்றாக எரிந்தும் படுமோசமாகச் சேதமடைந்தும் விட்டன.

விமானப் படைத்தளத்துக்கு அருகில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான சில பிரயாணிகள் விமானங்களும் எரிந்து போய்விட்டன.

பல கோடி ரூபா நட்டம். பொருளாதாரக் கஷ்டத்தால் நாடு அவதியுறும் இவ்வேளையில் ஏற்பட்டுள்ள இந்த நட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

பண நட்டத்தைவிட மற்றொரு விடயம் எல்லோருடைய மனதையும் அதிகமாகக் குடைகிறது.

கட்டுநாயக்காவில் இருப்பது தான் இலங்கையின் பிரதான விமானப் படைத்தளம். அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இந்த விமானப் படைத்தளம் அமைந்திருக்கிறது. இதற்குள் கரும்புலிகள் எப்படி ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தினார்கள்?

இதைச் செய்வதற்கு எவ்வளவு துணிச்சலும் மன உறுதியும் உயிரையே துச்சமாக மதிக்கும் தன்மையும் வேண்டும்! புலிகளுக்கு அவ்வளவு கொள்கைப்பற்றா, இலட்சிய வேட்கையா என்று பலரும் வியக்கிறார்கள்.

இப்போது கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தினுள் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தியது போல் கரும் புலிகள் இனிமேல் தென் இலங்கையிலும் மற்றும் பகுதிகளிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எந்த இடத்திலும் விரும்பிய நேரத்தில் தாக்குதல் நடத்தலாம் அல்லவா? இந்த அச்சம் எல்லோரையும் பீடித்து இருக்கிறது.

அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொண்டிருக்கவில்லை. அதனால் தான் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திலும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் புலிகளின் தாக்குதல் சம்பவம் நடந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி போன்ற அரசியல் கட்சிகள் அரசாங்கம் மீது குற்றம் சுமத்துகின்றன.

அரச படைகளின் உளவுப் பிரிவுகள் கடமையில் கண்ணாக இல்லாமல் தூங்குகின்றன என்றும் குற்றச்சாட்டு.

விமானப் படைத்தளத்துக்குள் நுழைந்த புலிகள் சுட்டார்கள். சத்தம் கேட்கவில்லை. விமானங்கள் தீப்பற்றி எரிந்தன. அந்த அளவுக்கு நவீன மயப்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள்.

எங்கிருந்து இந்த ஆயுதங்களை எப்படி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்? இதுபற்றி இராணுவ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இப்படி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி விங் கொமாண்டர் வி.டி. அபேசூரிய, தாக்குதல் சம்பவம் தொடர்பான மஜிஸ்திரேட் விசாரணையில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருடம் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கு நடத்திய தாக்குதலின்போதும் புலிகள் இராணுவத்திடம் இல்லாத புதுப்புது ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள் என்று படையினரே கூறினார்கள்.

அதை அடுத்து அரசாங்கம் நவீன ஆயுத தளபாடங்களைப் பெருந்தொகையான பணச் செலவில் கொள்வனவு செய்தது.

அப்படியிருந்தும் கடந்த ஏப்ரலில் படையினர் புலிகளுக்கு எதிராக வடக்கில் மேற்கொண்ட ''அக்கினிச் சுவாலை'' பாரிய தாக்குதலில் படுதோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

அதுவேறு விஷயம். புலிகள் தாம் கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தைத் தாக்கியதன் காரணம் என்ன என்று விளக்கியிருக்கிறார்கள்.

விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் அடிக்கடி தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள் முதலானவற்றின் மீது குண்டு மாரி பொழிந்து தமிழ் மக்களைக் கொல்கின்றன. கட்டடங்களையும் அழிக்கின்றன. இதை எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியும் என்று புலிகள் கேட்கிறார்கள்.

ஏற்கெனவே தனித்தனியாகச் சில விமானங்களைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் பல விமானங்களை அழிப்பதற்காகவே கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் தாக்குதல் நடத்தியதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதைவிடுத்து பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்று அரசு கச்சை கட்டிக் கொண்டு போரைத் தொடர்ந்து நடத்துகிறது. ஆயின் புலிகள் நடப்பது நடக்கட்டும் என்று சும்மா பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

இரு தரப்பும் தாக்குதல்களை நிறுத்திப் பேசத் தொடங்கினால்தான் போர் நிற்கும்; பிரச்சினை தீரும்; சமாதானம் ஏற்படும்; நாடு சுபிட்சம் அடையும்; மக்கள் ஐக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வார்கள்.

### சமாதானத்துக்கு அரசு சமாதி

# சர்வஜன வாக்கெடுப்பால் உருப்படியான பலன் உண்டா?

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன 1978இல் கொண்டு வந்த இன்றைய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நாட்டிலே நிலையான அரசாங்கம் — ஸ்திரமான அரசாங்கம் — தனிக் கட்சி அரசாங்கம் ஏற்பட அறவே வாய்ப்பு இல்லை.

நாட்டின் இன்றைய கேடுகளுக்கும் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் எல்லாம் இந்த அரசமைப்புச் சட்டம்தான் காரணம்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்தின் மீது குற்றம் சாட்டுகிறார் — பழி சுமத்துகிறார்.

இந்த அரசமைப்பைத் தூக்கி எறிந்து விட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய விதத்தில் அரசாங்கங்கள் அமைவதற்கு வழி செய்யத்தக்க புதியதொரு அரசமைப்பை உருவாக்க வேண்டும். இப்படி ஜனாதிபதி வலியுறுத்தி வருகிறார்.

நடைமுறையில் உள்ள அரசமைப்பு விதிகளின்படிதான் புதிய அரச அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மைப்பலம் இல்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ன சாதாரண பெரும்பான்மை கூட இன்று இல்லை.

இந்தப் பரிதாபகரமான நிலையில் தான் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை விட்டுவிட்டு நேரடியாக மக்களிடம் செல்கிறார். அதாவது மக்களின் கருத்தறிந்து அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்பச் செயற்படப் போவதாகச் சொல்கிறார்.

அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்ததும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரைச் செப்டம்பர் 7 வரை ஒத்திவைத்துவிட்டு இம்மாதம் 21ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்.

புதிய அரசமைப்பு வேண்டுமா, வேண்டாமா? இந்தக் கேள்விக்கு மக்களின் பதிலை அறியவே சர்வஜன வாக்கெடுப்பு.

புதிய அரசமைப்பு எப்படி இருக்கும்? அதில் என்னென்ன விஷயங்கள் அடங்கியிருக்கும்? அவற்றை அறியாமலே பொதுமக்கள் சர்வஜன வாக்களிப்பில் தமது பதிலைத் தெரிவிக்க வேண்டும். இது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இல்லையா?

அது ஒருபுறம் இருக்கட்டும். நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கும் அவல நிலைக்கும் நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டந்தான் காரணம் என்று ஜனாதிபதி கூறுகிறாரே, அது உண்மையா?

கொடிய யுத்தம் வருடக்கணக்காகத் தொடர்கிறது. அநியாயமாக உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. பலர் ஊனம் அடைகிறார்கள். பொருள்கள் அழிகின்றன. வடக்கு — கிழக்கு மக்கள் அகதிகளாகிறார்கள். அவல வாழ்வு வாழ்கிறார்கள். யுத்தச் செலவுகளும் அழிவுகளும் வடக்கு கிழக்கை மட்டுமன்றி நாடு முழுவதையும் பாதிக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் இன்றைய அரசமைப்புச்சட்டந்தான் காரணமா?

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தினால் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணலாம். நல்லபடியான அரசியல்தீர்வு ஏற்பட்டால் யுத்தம் பழங்கதையாகி விடும். சமாதானம் ஏற்படும். இனங்களின் சகவாழ்வு மீண்டும் உதயமாகும். நாட்டில் சுபிட்சம் கொழிக்கும். அரசு பேச்சுவார்த்தை நடத்தாமல் இருப்பதற்கும் இன்றைய அரசமைப்புத்தான் காரணமா?

பொருள்களின் விலை ஏற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றால் மக்கள் அன்றாடம் அவதிப்படுகிறார்களே — இதற்கும் 1978 அரசமைப்புத்தான் காரணமா?

பேரினவாதச் சார்புக் கொள்கைகள், வீண் பிடிவாதம், வீறாப்பு, அரசியல் கட்சிப் போட்டா போட்டி இவற்றால் ஏற்பட்டுள்ள பலவீனத்தை அரசமைப்புத் திரைபோட்டு மறைக்க முயல்கிறது அரசு. அதுதான் உண்மை.

அதற்காகப் புதிய அரசமைப்பு வேண்டுமா என்று மக்களிடம் கேட்டு ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பிழை என்றோ அல்லது சட்ட விரோதமான காரியம் என்றோ சொல்வதற்கு இல்லை.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இம்மாதம் 21ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையாளருக்குத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிச் சிலர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

சட்ட விரோதமான காரியத்தைத்தான் நீதிமன்றம் தடை செய்யும். சட்டரீதியான காரியத்தை எப்படி நீதிமன்றம் தடை செய்யும்?

தேர்தலோ சர்வஜன வாக்கெடுப்போ நடத்துவதற்கு நாடாளுமன்றம் நிதி ஒதுக்க வேண்டும். நடைபெற இருக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கு நாடாளுமன்றம் நிதி ஒதுக்கவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கு நாடாளுமன்றம் ஒதுக்கிய பணம் இருக்கிறது. அது தவிரத் திரட்டிய நிதி என்றும் ஒன்று இருக்கிறது. இவற்றிலிருந்து பணத்தைப் பெற்றே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட இருக்கிறது. இப்படிச் செய்வது முறையற்றது என்று ஒருவேளை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கலாம். மற்றப்படி சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவது தவறு என்று நீதிமன்றம் சொல்லப்போவதில்லை.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள்

**காண்டீபம்**

கருத்து அறிவதற்கு இப்போதுள்ள அரசமைப்பே ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. அரசமைப்பின் 85ஆம் 86ஆம் பிரிவுகளைப் பார்த்தால் தெரியும்.

சர்வஜன வாக்கெடுப்புகள் மூன்று விதம். இம்மாதம் 21ஆம் திகதி நடைபெற இருக்கும் சவர்வஜன வாக்கெடுப்பு அரசமைப்பின் 86ஆம் பிரிவுக்குள் அடங்குவது.

இந்தப் பிரிவின் கீழ் நடக்கும் சர்வஜன வாக்கெடுப்பு எந்த ஒரு சட்ட வரைவும் சம்பந்தப்படாதது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயம் பற்றி நடத்தப்படுவது. அந்த விஷயத்தில் மக்களின் கருத்து என்ன என்பதை அறிவதுதான் இந்தச் சர்வஜன வாக்கெடுப்பின் நோக்கம்.

குறிப்பிட்ட ஒரு விஷயம் பற்றிப் பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிவது பயனுள்ளது என்று ஜனாதிபதி கருதினால் அவர் அரசமைப்பின் 86 ஆவது பிரிவின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தேர்தல் ஆணையாளரைப் பணிக்கலாம்.

இந்தச் சர்வஜன வாக்கெடுப்பில் பொதுமக்கள் தங்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அளிக்கும் பதில் அரசாங்கம் தனது கொள்கையை வகுத்துக் கொள்ள உதவும். அவ்வளவுதான்.

இதற்கு, கட்டுப்படுத்தாத சர்வஜன வாக்கெடுப்பு (Non binding referendum) என்று பெயர். சட்ட வலு இதற்குக் கிடையாது.

அடுத்து, தற்போதுள்ள அரசமைப்பின் 85ஆவது பிரிவில் இரண்டு சர்வஜன வாக்கெடுப்புகள் பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டும் சட்ட வரைவுகள் சம்பந்தப்பட்டவை.

85ஆவது பிரிவின் முதலாவது சரத்தில் அரசமைப்பை நீக்குவது அல்லது திருத்துவது தவிர்ந்த ஏனைய சட்ட வரைவுகள் சம்பந்தமான சர்வஜனவாக்கெடுப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகையதொரு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் நிராகரிக்கப்பட்டால் அந்தச் சட்டவரைவை ஜனாதிபதி மக்களின் தீர்ப்புக்காகச் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடலாம்.

அரசமைப்பின் 85ஆவது பிரிவின் முதலாவது சரத்தில் அரசமைப்பை நீக்குவது அல்லது திருத்துவது சம்பந்தமான சட்ட வரைவைச் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படியான ஒரு சட்ட வரைவை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவது என்றால் அந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பில் அந்தச் சட்ட வரைவுக்கு மக்களின் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமானால் அதற்கு ஒரு நிபந்தனை உண்டு.

அதாவது, மொத்த வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறைவானவர்கள் சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களித்திருந்தால், வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேல் ஆம் என்று வாக்களித்திருந்தால் தான் அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால்தான் சட்டவரைவு மக்களால ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

மொத்த வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேல் சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களித்திருந்தால் அவர்களில் அரைப்பங்கினருக்கு மேல் ஆம் என்று வாக்களித்தால் அதாவது சாதாரண பெரும்பான்மை கிடைத்தால் போதும். சட்ட வரைவு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். இப்படி அரசமைப்பின் 85ஆவது பிரிவின் 3ஆவது சரத்துக் கூறுகிறது.

ஆக, இம்மாதம் 21ஆம் திகதி நடைபெற இருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு புதிய அரசமைப்பு வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்களா, அல்லது அதை அவர்கள் விரும்பவில்லையா என்பதை அறிந்துகொள்ள மட்டுமே உதவும். மற்றப்படி புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு எந்த விதத்திலும் உதவமாட்டாது.

புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு நாடாளுமன்றத்தில் சட்ட வரைவை கொண்டு வரவேண்டும். அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்ம வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் அந்தச் சட்ட வரைவை சர்வஜன வாக்கெடுப்புக்கு விட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

நாடாளுமன்றத்துக்குப் புறம்பாகவும் நடைமுறையில் உள்ள அரசமைப்புக்கு முரணாகவும் மக்களின் அங்கீகாரத்துடன் புதிய அரசமைப்பைக் கொண்டு வரமுடியும் என்று ஜனாதிபதி நம்புகிறார்.

இப்படியான கருமங்கள் வெளிநாடுகளில் நடந்த முன் உதாரணங்கள் உண்டு என்கிறார்.

எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் 1863இல் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த ஆபிரஹாம் லிங்கன் அடிமை விலங்கு அறுக்கப் பிரகடனம் செய்ததைத் துணைக்கு இழுத்திருக்கிறார் ஜனாதிபதி.

பழையன கழிந்து புதியன புகுந்து விட்ட இந்நாட்களில் சட்டத்துக்கு முரணான காரியங்களைச் செய்ய இடமுண்டா?

மக்கள் இறைமையுடையவர்கள். அவர்களின் இறைமையை அவர்களாலேயே தெரிவு செய்யப்பட்டுப் பதவியில் இருப்பவர்கள் முறைகேடாகப் பயன்படுத்துவற்கு இடமில்லை.

அமெரிக்கத் தேர்தல் முறை இங்கே இல்லை. அமெரிக்காவில் ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படுவதில்லை.

இங்கே ஜனாதிபதி நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படுகிறார். அப்படித்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டு மக்களாலேயே தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இந்த அடிப்படை உண்மையை மனதில் கொண்டால் நாடாளுமன்றம், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடயங்களில் அத்துமீறல்கள் தவிர்க்கப்படலாம்.

மொத்தத்தில் புதிய அரசமைப்பு வேண்டுமா, வேண்டாமா என்று வெறுமனே மக்களின் கருத்தை அறிவதற்கு பணக்கஷ்டத்தால் அவதிப்படும் அதே மக்களின் சுமார் 60 கோடி ரூபாவைக் கரியாக்கிச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டுமா? அதுவும் பெரும்பான்மைப் பலத்தை இழந்து நித்திய கண்டத்தில் தடுமாறிக் கொண்டிருக் கிறது அரசு!

இது மக்களுக்கு ஆற்றும் சேவையா? அவர்களுக்குச் செய்யும் வதை அல்லவா இது!

நீண்ட காலமாக வாயளவிலேனும் சமாதானப் பல்லவி பாடி வந்த அரசு ஆட்டம் கண்டுவிட்ட பின்னர் சர்வஜன வாக்கெடுப்புச் சரணம் பாடுகிறது. விந்தைதான்!

# ஒரே பாடசாலை மாணவர்கள் 4 பேர் அடுத்தடுத்து தற்கொலை!

**அதிபர் ஆசிரியர்களுக்கு எதிராக பெற்றோர் போர்க்கொடி!**

மலையகக் கண்ணோட்டம்
இரா. புத்திரசிகாமணி

பாடசாலைகளில் பிரச்சினைகள் ஏற்படும்போது பாடசாலைகளை மூடி விடுவதால் எந்தவித பயனும் இல்லை.

பிரச்சினைகளின் அடித்தளம் ஆராயப் பட வேண்டும். பிரச்சினைகளுக்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலய மாணவனின் தற்கொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்கிறார்கள் பெற்றோரும் நலன் விரும்பிகளும்.

தற்பொழுது இடம் பெற்றுள்ள சம்பவத்துடன் கடந்த எட்டு வருடகாலத்தில் இதே பாடசாலையில் நான்கு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களுக்குள் ஒருவர் மாணவி.

பாடசாலையில் நிலவும் அடக்கு முறைகளான ஆசிரியர்களின் ஹிட்லர் தனமும், குத்தல் பேச்சுக்களும், மற்றும் பொலிஸாரின் அச்சுறுத்தல்களுமே மாணவர்களின் மரணங்களுக்கு காரணமாக இருந்துள்ளன என்று கூறப்படுகிறது.

மாணவர்களை வழி நடத்த வேண்டிய ஆசிரியர்கள் வேலியே பயிரை மேய்வது போன்று நடக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

''பாடசாலையில் கடமை நேரத்தில் மாணவர்கள் முன் சிகரெட் பிடிக்கின்றனர். பாடசாலை வளவுக்குள் மது அருந்திவிட்டு அட்டகாசம் புரிகின்றனர். வளர்ந்த மாணவ மாணவிகளின் முன் ஆசிரியைகளிடம் 'A' ஜோக் விடுகின்றனர்.''

''இந்த அட்டகாசங்களை பெற்றோர்களிடமோ அரசியல் வாதிகளிடமோ அல்லது கல்வி அதிகாரிகளிடமோ முறையிட்டால், முறையிட்ட மாணவர்களை தனி அறையில் வைத்து நையப் புடைக்கின்றனர்''

இப்படி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

ஒரு சில அரசியல் வாதிகளின் கையாட்களாக இருக்கும் ஆசிரியர்களில் சிலர் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஐந்து வருடங்களுக்கும் மேலாக இதே பாடசாலையில் இருந்து கொண்டு அட்டகாசம் புரிகின்றனர் என்கிறார்கள் இப்பாடசாலை மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும்.

''ஆரம்பம் முதலே இந்தப் பாடசாலையில் பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன. இவற்றைப் பொறுக்க முடியாத நிலையில் தான் நாங்கள் பாடசாலைச் சுவர்களில் எழுதினோம். எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. முறைப்பாடு செய்தால் விசாரணை இல்லை. எல்லாம் மூடி மறைக்கப்படுகின்றன. எங்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. நாங்கள் சுவர்களில் எழுதியது தவறுதான். ஆனால் அதிபரினதும் ஆசிரியர்களினதும் அணுகுமுறை சரியானதா?''

பாடசாலைக்குச் சென்ற கல்வி அதிகாரிகளிடம் நேரடியாகவே மாணவர்கள் இப்படி கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

பாடசாலைச் சுவர்களில் எழுதியது பிழை என்றாலும் கூட, எழுதப்பட்டவை வெளிப்படுத்தி உள்ள தகவல்கள் முக்கியமானவை. அந்தத் தகவல்களின் அடிப்படையில் பூர்வாங்க விசாரணைகளை மேற் கொண்டால் பாடசாலையில் அமைதியின்மைக்கான உண்மைக் காரணத்தை அறியலாம். அமைதியின்மைக்கான காரணகர்த்தர்கள் யார் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

மாணவர்கள் சுவர்களில் எழுதிய வாசகங்கள் எவை? ''பாடசாலை கண்டீனில் சிகரட் விற்காதே'' ''மாணவர் முன் புகை பிடிக்காதே'' ''மது அருந்தி மானம் இழக்காதே'' ''A ஜோக் விடாதே'' ''பாடசாலையில் மன்மதன் ஆகாதீர்''

பாடசாலையில் அதிபர் ஒருவர் இருக்கின்றார். உப அதிபர்கள் இருக்கின்றார்கள். பாடசாலை ஒழுக் காற்றுக் குழுவினர் இருக்கின்றார்கள். இவர்கள் வாசகங்களை வாசித்து விட்டு மாணவர்களை விசாரிக்க வில்லை. அவர்களுக்கு அறிவுரை கூறவில்லை.

இவற்றை விட்டு விட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பாடசாலைக்கு வந்த பொலிஸார் நாகரட்ணம் இளையகண்ணா, நமசிவாயம் நவகாந்தன். சிவபாலன் ஜெயகிருஷ்ணா, புஷ்பராஜ் சென்லிஸ் ராஜ், ஜெயரட்ணம் மதன் ஆகிய ஐந்து மாணவர்களையும் கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்டு போவது போல் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றனர். பொலிஸ் நிலையத்தில் கடுமையாக எச்சரிக்கை செய்து அவர்களை விடுதலை செய்தனர்.

பாடசாலை திரும் பிய இந்த மாணவர்கள், ஆசிரியர் களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பரீட்சை எழுத விடாமல் வீட்டுக்கு விரட்டி விடப் போவதாக அச்சுறுத்தப் பட்டனர். சக மாணவர்கள் முன் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டனர்.

உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்கள், வெட்கமும் வேதனையும் அடைந்தனர்.

இதனால் ஏற்பட்ட விரக்தி காரணமாகவே இரண்டு மாணவர்கள் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தனர் என்று கூறப்படுகிறது.

மாணவன் இளையகண்ணா தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்டான். சகமாணவன் ஜெயகிருஷ்ணா உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றான் என்ற செய்திகள் தலவாக்கலை பிரதேசத்தில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டன.

கல்வி அதிகாரிகள் ரட்ணாயக்க, அல்விஸ், மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். சிவலிங்கம் ஆகியோர் பாடசாலைக்குச் சென்று மாணவர்களையும், பெற்றோரையும் அமைதிப்படுத்தினர்.

ஐந்து ஆசிரியர்கள் பாதுகாப்புக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸாரும் ''விசாரணை செய்கிறோம். இந்த ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றோம்'' என்று கூறினர்.

இப்போது ஐந்து ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

பொலிஸாரின் இச்செயலுக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே அங்கு இடம் பெற்ற மூன்று தற்கொலைச் சம்பவங்களில் இரண்டில் உயர் வகுப்பு மாணவர்கள் சம்பந்தப்பட்டனர்.

மாணவிகளுக்கு கடிதம் எழுதியதாக அவர்கள் சக மாணவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தப்பட்டதால் தற்கொலை செய்து கொண்டனர் என்று கூறப்பட்டது. மற்றவர் மேல் வகுப்பு மாணவி. அந்த மாணவி பரீட்சையில் சித்தி அடைய வில்லை. ஆசிரியைகளின் குத்தல் பேச்சுக்களை சகித்துக் கொள்ளாத நிலையில் அவர் விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

தற்பொழுது இடம் பெற்றிருப்பது நான்காவது சம்பவம்.

மாணவர் போராட்டத்தைக் கட்டுப்படுத்த மத்திய மாகாணத் தமிழ்க் கல்வி அமைச்சர் 30 ஆம் திகதி திங்கட்கிழமை வரை பாடசாலையை மூடிவிட்டார்.

பாடசாலையைத் தற்காலிகமாக மூடி விடுவதும், வெறுமனே விசாரணைகளை நடத்துவதும், இப்பாடசாலையில் தொடரும் தற்கொலைகளைத் தடுத்து விடுமா?

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சிறந்த கல்வி அறிவு ஊட்டுவதோடு உதாரண புருஷர்களாக நடந்து நல்வழி காட்டவும் வேண்டும்.

இனிமேலாவது இரண்டும் இங்கு நடக்குமா? இதுதான் இன்று அனைவரினதும் ஆதங்கம்.

## 'வாழ விடமாட்டார்கள் ஆதலால் சாகிறேன்' — மாணவன்

''எனது பெற்றோர் பாடசாலைக்கு வந்து பொது மன்னிப்புக் கேட்கும் அவலக் காட்சியை என்னால் பார்த்துக் கொண் டிருக்க முடியாது. இதனாலேயே அதற்கு முன் எனது உயிரைப் போக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு உயிர் இழந்த மாணவன் இளைய கண்ணா தற்கொலை செய்வதற்கு முன் தனது பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இளைய கண்ணாவின் மரண விசாரணையின் போது இரண்டு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஒன்று அவரது பெற்றோருக்கும் மற்றது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் எழுதப்பட்டிருந்தன.

பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் ''எனது அன்புத் தெய்வங்களுக்கு

நான் செய்த பிழைக்காக என்னை மன்னித்துவிடுங்கள். நான் செய்த பிழைக்கு ஆசிரியர்களிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் உங்க ளையும் பாடசாலைக்கு வரவழைத்து பொது மன்னிப்பு கேட்க வைப்பதாகக் கூறினார்கள். எனது படிப்புக்காகவும் எனக்காகவும் நீங்கள் எதையும் செய் வீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் பொது மன்னிப்பு கேட் கும் அவலக் காட்சியை என்னால் பார்த் துக் சகிக்க முடியாது. எனவே அதற்கு முன் நான் எனது உயிரைப் போக்கிக் கொள்கிறேன். தவறு செய்த என்னை மன்னித்து விடுங்கள்''

இப்படிக்கு உங்கள் அன்பு மகன் இளைய கண்ணா.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எழுதிய கடிதத்தில், ''ஆசிரியர்களின் பிடிக்குள் சிக்கி இருக்கும் மற்றைய மூன்று நண்பர்களையும் காப்பாற்றுங்கள். அவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்.

''நாங்கள் பாடசாலையில் தவறுகள் விட்டிருக்கலாம். அதற்காக அதிபரிடமும் ஆசிரியரிடமும் மன்னிப்பு கேட்டுள்ளோம்.

''பொலிஸில் இருந்து திரும்பிய எங்களை குறிப்பிட்ட ஆசிரியர் தாக்கினார். அதிபர் தடுத்தும் அவர் கேட்க வில்லை. எங்கள் பெற்றோரை தரக்குறை வாகப் பேசினார். இதனால் மனமுடைந்த நிலையிலேயே நாங்கள் தற்கொலை செய்து கொள்கிறோம். மேலும் எமது நண்பர்கள் மூவர் ஆசிரியர் களின் பிடிக்குள் சிக்கி உள்ளனர். எப்படியாவது அவர்களைக் காப்பாற்றுங்கள்.''

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

# குற்றவாளிகளுக்குப் பிணை! நிரபராதிகளுக்குச் சிறை!!

**இதுதான் நீதியா? — கேட்கிறார் வேலம்மாள் செல்லச்சாமி**

குற்றவாளிகளுக்குப் பிணை; நிரபராதிகளுக்குச் சிறை; உயிர்களை வாட்டியவர்களுக்கு விடுதலை; உணர்ச்சிகளைக் காட்டியவர்களுக்குத் தண்டனை. ஏன் இந்தப் பாரபட்சம்? சட்டமும் நீதியும் கூட இந்த நாட்டில் இரட்டை வேடமா?

நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனுக்கு இப்படிக் கடிதம் எழுதியுள்ளார் திருமதி மாணிக்க வேலம்மாள் செல்லச்சாமி.

மருதானை பள்ளிவாசல் முன் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இரு முஸ்லிம் இளைஞர்களின் விடுதலை கோரி நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனுக்கு வேலம்மாள் செல்லச்சாமி கடிதம் எழுதி உள்ளார்.

மேல்மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் செயலாளருமான வேலம்மாள் செல்லச்சாமி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

மாவனல்லைச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என கைது செய்யப்பட்ட அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. மனிதாபிமானமற்ற, அநாகரீகமான அந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கள் அனுதாபங் களை பகிர்ந்து கொள்ளவும், தங்கள் உணர்ச் சிகளைக் காட்டவும் மருதானை பள்ளிவாச லுக்கு முன்பாக குழுமியிருந்த கூட்டத்தில் இருந்து கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளை ஞர்கள் சிலர் இன்னும் தடுப்புக் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பிணை வழங்குவதற்கும் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டம் 'சாதி' பார்த்து சாமரம் வீசுகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

மதவழிபாட்டுத் தலங்களோ — பைபிள், குர்ஆன், பகவத் கீதை, பௌத்த சாசனம் போன்ற வேதநூல் களோ தீவைத்துக் கொளுத்தப்படும்போது, ''இது தான் வாழ்க்கை'' என வேடிக்கை பார்த்துக் கொண்டு எவரும் வாளாவிருக்க முடியாது. அதைப் பார்த்து உணர்ச்சிவசப்படாதவனும் மனிதனாக இருக்க முடியாது. உணர்ச்சிவசப் படுவதை எல்லாம் குற்றமாக எடுக்க முற்பட்டால், நாட்டிலுள்ள ஒவ்வொரு வீடும், சிறைக் கூடமாக மாறும்.

அப்படி இருக்கும்போது, வியாபார ஸ்தலங்களையும், கடைத் தொகுதிகளையும் எரித்துச் சாம்பலாக்கியும், பள்ளிவாசல்களையும் — புனித குர் ஆனையும் அசிங்கப் படுத்தியும் அக்கினிக்கு இரையாக்கியும், உயிர்களையும் உடைமைகளையும் அடித்தும் சேதப்படுத்தியும், அப்பாவி மக்களை துன் புறுத்தியும் அச்சுறுத்தியும் பல்வேறு வகைகளில் பலவிதமான குற்றங்களைப் புரிந்தவர்களில் ஒரு ''சில்லரை'' மட்டும் பிடித்து பின்னர் பிணையில் வெளியே விட்டுள்ளனர்.

ஆனால், ''குற்றவாளிகளை கண்டியுங்கள்; தண்டியுங்கள்'' எனக் குரல் எழுப்பியவர்களின் குரல்வளையை நெரிப்பதுபோல், பிணை மறுக்கப்பட்ட நிலையில் இவர்களைக் கூண்டில் அடைத்து வைத்துள்ளனர்.

'சமத்துவம் — சமநீதி' என்ற அரசியல் சித்தாந்தத்துடன் கட்சி அரசியலில் தடம் பதித்த தாங்கள், அந்த அடிச்சுவட்டில் இருந்து விலகிச் செல்ல மாட்டீர்கள் என்ற நம்பிக்கையிலும், நீதி அமைச்சர் என்ற வகையிலும், மருதானை பள்ளிவாசல் முன் கைதான முஸ்லிம் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம்.

குறைந்த பட்ச கருணையாக, அவ் விளைஞர்களை பிணையில் விடுவிப்பதற்கான அதிகாரத்தையாவது பிரயோகிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரும்பிய மலரிலிருந்து தேன் அருந்தும் பரவசம்!

மலருக்கு மலர் தாவி வண்டுகள் தேன் அருந்தும் என்பது தெரியும். தேனீக்களோ மலர்களிலிருந்து தேனை உறிஞ்சுவதுடன் தமது கூட்டிலும் தேனைச் சேமித்து வைக்கின்றன. சின்னஞ்சிறிய பறவைகளும் மலருக்கு மலர் தாவி தேன் அருந்தும் தன்மை கொண்டவை. ஒரு சிறு பறவை மலரில் தேன் அருந்தும் காட்சியைப் பிரான்ஸ் லன்டிங் என்னும் புகைப்பட நிபுணர் படமாக்கி அதன் மூலம் கௌரவ விருது பெற்றிருக்கிறார்.

# நாகரிக நாட்டிலும் நாடோடிக் கூட்டம்

பின் தங்கிய கீழைத் தேய நாடுகளில்தான் நாடோடிக் கலைஞர்கள் இருக்கிறார்கள் என்று கூறி விடமுடியாது. வளர்ச்சி அடைந்த மேல் நாடுகளிலும் நாடோடிக் கலைஞர்கள் தமது கலைத் திறமைகளைக் காட்டி வருகிறார்கள். டென்மார்க் வீதியொன்றில் நாடோடிக் கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தும் காட்சி இது.





# "சுப்பர் சொனிக்" விமானியை பாதுகாக்கும் விசேட அங்கி

மின்னல் வேகத்தில் பறக்கும் விமானங்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் காலம் இது. ''சுப்பர் சொனிக்'' விமானம் இந்தக் கனவேக விமானங்களில் முக்கியமானது. ''சுப்பர் சொனிக்'' விமானங்களைச் செலுத்தும் விமானிகள் மிகவும் சிறப்பான தொழில் நுட்ப அறிவைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு அங்கியை அணிந்து விமான மோட்டும் பணியை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பாதுகாப்பு அங்கியுடன் இங்கே காட்சி தருகிறார்கள் இரு ''சுப்பர் சொனிக்'' விமானிகள்.



# விலங்குகள் மத்தியில் கொம்புக்கு மதிப்பு

விலங்குகளுக்கு அழகு அவற்றின் கொம்புகளே என்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். விதம் விதமான அமைப்பில் விலங்குகளுக்கு கொம்புகள் அமைந்திருக்கும். அதே நேரத்தில் கொம்புகள் இல்லாமல் வாழும் விலங்குகளும் இருக்கின்றன. மார்கோ எனப்படும் காட்டில் வாழும் ஆடு மிகவும் விசித்திரமான தோற்றம் கொண்டது. ஒரு மார்கோ இன ஆட்டின் கொம்புகளை இந்தக் கலை மான்களே விசித்திரமாக நோக்குவதை இங்கே காணலாம்.



# கடல் வாழ் உயிரினம் கவர்ந்திழுக்கும் அதிசயம்

கடலில் வாழும் உயிரினங்கள் சுதந்திரமாக வாழும் தன்மை கொண்டவை. பல்லாயிரக் கணக்கான மீன்கள் ஆழ் கடலில் மையம் கொண்டிருக்கின்றன. ஆயினும் அவற்றை உணவாகக் கொண்டு அக மகிழ்வதுடன் எத்தனையோ பேரின் வேலை முடிந்து விடுகிறது. ஆனால் கடலுக்குள் கண்ணாடி அறை நிறுவி மீன்களின் நடமாட்டத்தை அவதானிக்க வாய்ப்புக் கிடைத்தவர்கள் எவ்வாறு அக மகிழ்வார்கள் என்பதற்கு இந்தப் படமே சான்று.

ஜுலை 22, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை சௌந்தர்யாவினுடையது. சரியான விடையைக் க்ண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. என். துஷ்யந்தி, அக்கரப்பத்தனை.
2. வீ. ஸ்ரீரஜனி, மல்லிகைத்தீவு.
3. எம்.ஏ. சாஜித், அக்கரைப்பற்று.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள்..அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.



கடந்த வாரம் (29.07.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? நடிகர்களில் இவர் சுப்ரீம். அதனால் டில்லி மன்றம் செல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



# ஒளிந்திருக்கும் முகம் எது?






# ராமதாஸ் 'கிரக' இடமாற்றம் கருணாநிதிக்கு நல்ல பலன்



கருணாநிதி

தமிழக அரசியல்வாதிகளில் குத்துக்கரணம் அடிப்பதில் மிகவும் திறமைசாலி என்று பெயர் எடுத்தவர் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ்.

திடீர் திடீர் என்று கட்சி மாறித் தமது கட்சிக்கு இலாபம் தேடிக்கொள்ள முயலுவார். அவருடைய கட்சி மாறல் கிரக இடமாற்றம் என்றும் சொல்லப்படும். இந்தக் கிரக இடமாற்றங்கள் அநேகமாக அவருக்கு நன்மையைத் தேடித் தந்துவிடும். சிலவேளைகளில் ஏமாற்றம் ஏற்படுவதும் உண்டு.

ராமதாஸின் தற்போதைய கிரகமாற்றம் இந்திய மத்திய அரசில் தமது கட்சியை மீண்டும் இணைத்துக்கொண்டது எனலாம்.

ராமதாஸின் இந்தக் ''கிரக'' இடமாற்றம் கருணாநிதிக்கு நல்ல பலனைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழக சட்டசபைத் தேர்தலின்போது ஜெயலலிதா அணிக்கு மாறினார் ராமதாஸ். கருணாநிதி சற்றும் எதிர்பார்த்திராத வேளையில் இவ்வாறு குத்துக்கரணம் அடித்தவர் அவர்.

வாஜ்பாய் அரசில் பங்குகொண்டு தமது கட்சிக்கு இரண்டு அரை மந்திரிப் பதவிகளைப் பெற்றிருந்தவர் ராமதாஸ். அந்த இருவரையும் பதவி விலகச் செய்து எதிர் அணிக்குப் பாய்ந்தார் ராமதாஸ்.

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதாவை வெற்றி பெறச் செய்வேன் என்று சூளுரைத்தார் ராமதாஸ். அதற்குப் பிரதி உபகாரமாக பாண்டிச்சேரியைத் தமக்குத் தரவேண்டும் என்று பேரம் பேசிக் கொண்டார்.

தமிழகத்தில் ஜெயலலிதா அமோக வெற்றி பெற்றார். ஆனால் பாண்டிச்சேரியில் ராமதாஸுக்குக் கிடைத்தது படு தோல்வியேதான். அவருடைய கட்சியில் ஒருவருக்குக் கூட வெற்றி கிட்டவில்லை.

தமிழகம் — பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர் ராமதாஸின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. ஜெயலலிதாவுக்கு எதிரான மனப்போக்கை அவர் கொள்ளத் தொடங்கினார்.

முதலமைச்சர் பதவியில் ஏறி அமர்ந்து கொண்ட ஜெயலலிதாவுக்கு மூப்பனாரும் ராமதாஸும் முக்கியமானவர்களாகப்படவில்லை. ஆனால் ஜெயலலிதாவுக்கு வெற்றி கிட்டத் தமது வாக்கு வங்கியே பக்கத் துணையாக இருந்தது என்று ராமதாஸ் கூறினார்.

ராஜ்ய சபைக்குப் புதிதாக ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் வாய்ப்பு தமிழக சட்டசபைக்குக் கிடைத்தது. அ.தி.மு.க. அணிக்கு ஐந்து பேரைத் தேர்ந்தெடுக் கக்கூடிய வலு இருந்தது. தி.மு.க ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெற்றது.

அ.தி.மு.க அணியின் நட்புறவுக் கட்சிகளுக்கு ஒரு உறுப்பினர் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த வாய்ப்பு தமது கட்சிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார் ராமதாஸ். தமது மகனையும் அதற்குத் தயார் படுத்தினார். ஆனால் கிடைக்க வில்லை. மூப்பனார் கட்சிக்கே அது கிடைத்தது.

இதற்கிடையில் கருணாநிதி மீது ஜெயலலிதா தாக்குதல் நடத்தினார். இந்த வேளையில் ராமதாஸ் கருணாநிதிக்கு சார்பாகக் கருத்து வெளியிட்டார். அடுத்த குத்துக்கரணத்துக்கு ராமதாஸ் தயாராகிவிட்டார் என்பது அப்போது தெளிவாகியது.

பாண்டிச்சேரியை முதலில் பிடிக்க வேண்டும். பின்னர் தமிழகத்தையும் பிடித்து விடலாம் என்று கோட்டை கட்டியவர் ராமதாஸ். ஆனால் பாண்டிச்சேரியே காலைவாரி விட்டுவிட்டது. எனவே ராமதாஸ் தமது கட்சியைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்க வேண்டியிருந்தது.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தமிழக சட்டசபையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் தமிழக அமைச்சர்களாக இன்னும் எவரும் வரவில்லை.

ஆயினும் லோகசபைத் தேர்தலில் தி.மு.க அணியில் போட்டியிட்டு தமிழ்நாட்டில் ஐந்து உறுப்பினர்களைப் பெற்றதனால் மத்திய அமைச்சரவையில் இடம் கிடைத்தது. ராஜாங்க அமைச்சர்களாக பா.ம.க எம்.பிக்கள் இருவர் தெரிவாகினர்.

ஆயினும் பாண்டிச்சேரியைப் பிடிப்பதற்காக அந்த இரு அமைச்சர் பதவிகளையும் உதறி எறிந்தவர் ராமதாஸ். ஆனால் பாண்டிச்சேரி தந்த அடி தாங்கமுடியாமல் மீண்டும் வாஜ்பாயின் காலில் வீழ்ந்து விடும் நிலை ஏற்பட்டுவிட்டது.

மத்தியில் சிறிதளவு பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருக்கும் வாஜ்பாய்க்கு பா.ம.கவின் ஐந்து எம்.பிக்களின் ஆதரவு தேவைப்படுகிறது. எனவே ராமதாஸ் கோஷ்டியை மீண்டும் இணைத்துக் கொள்ள அவர் பின்நிற்கவில்லை.

**புகுந்த வீடு**

''போன மச்சான் திரும்பி வந்தார் பூமணத் தோடு ...'' என்று சேர்த்துக் கொண்டார்.

ஆயினும் பா.ம.க முன்னர் தியாகம் செய்த அரை மந்திரிப் பதவிகள் மீண்டும் கிடைக்குமா? என்பது தெரியவில்லை. அது பற்றி ராமதாஸும் நிர்ப்பந்திக்கவில்லை.

வாஜ்பாய் அரசில் மீண்டும் சேருவது குறித்து ராமதாஸ் கருணாநிதியுடன் கலந்துரையாடவில்லை. ராமதாஸை மீண்டும் வாஜ்பாய் சேர்த்துக்கொண்டது பற்றி கருணாநிதி எதிர்ப்புத் தெரிவிக்கவும் இல்லை.

தமிழகத்தில் எதிரிகளாக இருக்கும் கருணாநிதியும் வை.கோபாலசாமியும் மத்தியில் வாஜ்பாய் அரசின் பங்காளிகள். அதே அடிப்படையில் மத்திய அரசில் கருணாநிதியும் — ராமதாஸும் நடந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு தமிழக சட்டசபையில் 20 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொண்டால் தி.மு.கவின் பலம் அதிகரிக்கவே செய்யும். ஜெயலலிதாவின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பவும் வசதி ஏற்படும்.

ஆயினும் ராமதாஸைச் சேர்த்துக் கொள்வதற்கு கருணாநிதி சற்று நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டியிருக்கிறது.

தி.மு.க. அணியிலிருந்து ராமதாஸ் ஜெயலலிதா அணிக்குக் குத்துக்கரணம் அடித்தபோது கருணாநிதிக்குச் சார்பாக வந்தவர் திருமாவளவன். தலித் பிரிவைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன். ராமதாஸின் எதிரியாகத் தம்மைக் காட்டிக் கொள்பவர்.

ராமதாஸ் மீண்டும் தி.மு.க. அணிக்குள் வந்து விட்டால் திருமாவளவன் வெளியேறிவிடுவார். அதனை கருணாநிதி விரும்பவில்லை.

ஜெயலலிதாவுக்கு 88 தொகுதிகளில் வெற்றியைத் தேடித் தந்தது பா.ம.க என்பது ராமதாஸின் நிலைப்பாடு. ஆனால் 4 பா.ம.க உறுப்பினர்கள் இருந்த தமிழக சட்டசபையில் இன்று 20 உறுப்பினர் களைத் திரட்டித் தந்தது அ.தி.மு.கவே என்பது ஜெயலலிதாவின் நிலைப்பாடு.

தமிழகத்தில் சூட்டோடு சூடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்திவிடத் துடிக்கிறார் ஜெயலலிதா. எனவே ராமதாஸின் குத்துக்கரணம்



ராமதாஸ்

புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதில் ஐயம் இல்லை.

ராமதாஸைப் பொறுத்த மட்டில் அவர் கருணாநிதியின் அன்பைப் பெறுவதில் அதிக அக்கறை காட்டுவார் என்பது நிச்சயம்.

— கதாசி

# துப்பாக்கி ஏந்திப் பழி தீர்த்தவர் துப்பாக்கியால் முடிந்த கதை!



பூலான் தேவி

''கத்தியைத் தூக்கியவன் கத்தியாலேயே அழிவான்'' என்றொரு முதுமொழி இருக்கிறது. கடந்த மாதம் 25ஆம் திகதி பிரபல முன்னாள் கொள்ளை ராணியும் சமாஜவாதக் கட்சியின் எம்.பியுமான பூலான்தேவி கொல்லப்பட்ட சம்பவம் பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

துப்பாக்கி ஏந்தி உத்தரப் பிரதேசத்தையே கலக்கிய கொள்ளை ராணி பூலான் தேவி. அவரின் உயிரை அந்த துப்பாக்கியே பறித்து விட்டது.

உத்தரப் பிரதேச மாநிலம் — மிர்சாபூர் தொகுதி எம்.பியான பூலான்தேவி சமாஜவாத கட்சி சார்பில் எம்.பியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு காலத்தில் உத்தரப் பிரதேசத்தை மட்டுமல்லாது அண்டை மாநிலங்களையும் கலக்கியவர்.

எவரும் கெட்டவர்களாகப் பிறப்பதில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் அவர்களை மாற்றுகின்றன. இதற்கு பூலான் தேவியும் விதிவிலக்கு அல்லர். சொந்த வாழ்வில் சந்தித்த சோதனைகளே அவரைக் கொள்ளைக்காரியாக்கின.

உத்தரப்பிரதேசத்தில் 1963ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமூகமான படகோட்டி சமூகத்தில் பூலான்தேவி பிறந்தார். தனது 11ஆவது வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டார். கணவன் இவரை விட 20 வயது அதிகமானவர்.

இவர் புயலாக மாறியதற்கு இவர் கற்பழிக்கப்பட்டதுதான் காரணம். உயர் ஜாதி இந்துக்கள் இவரைக் கற்பழித்தனர். பொலிஸாரும் இவரை பாலியல் ரீதியாக வதைத்தனர்.

தன்னைச் சீரழித்த கயவர்களை வஞ்சம் தீர்ப்பதற்காக துப்பாக்கி தூக்கினார் பூலான்தேவி.

1981ஆம் ஆண்டு 22 இந்து உயர் ஜாதியினரை இவர் சுட்டுக் கொன்று பழிதீர்த்தார். இந்தச் சம்பவம் 'பெகாமி படுகொலை' என்று அப்போது வர்ணிக்கப் பட்டது.

அதன் பின்னர் தான் பூலான்தேவி கொள்ளைக்காரியாக மாறினார். செல்வந்தர்களிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு வழங்கினார். 'சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரி' என்ற பெயரில் பிரபலமானார்.

காவல் துறைக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய பூலான்தேவி தனது எல்லையை அண்டை மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தினார். கான்பூர், பதேபூர், எடவா, ஜலன், யமுனை நதிக்கரையோரங்களில் இவரது பெயர் கொடி கட்டிப் பறந்தது.

1983ஆம் ஆண்டு மனம் திருந்தி அப்போதைய மத்திய பிரதேச முதல்வர் அர்ஜுன்சிங் முன்னிலையில் பூலான்தேவி சரண் அடைந்தார்.

11 வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்த அவருக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு 1994ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

அதே ஆண்டில் உமத்சிங் என்பவரை இரண்டாவது தடவையாக மணந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு டெல்லியில் வசித்து வந்தார்.

பூலான்தேவியின் கதை 'பண்டிட் குயின்' என்ற பெயரில் திரைப் படமாகி அவரை உலகறியச் செய்ததும் இதே ஆண்டிலேயே.

பூலான்தேவியை அரசியலுக்கு அழைத்து வந்தவர் சமாஜவாதக் கட்சியின் தலைவர் முலாயம்சிங்.

1996ஆம் ஆண்டு முதல் முறையாக பூலான் தேவி எம்.பி. ஆனார். பின்னர் 1998ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்து 1999ஆம் ஆண்டு மீண்டும் வெற்றி பெற்றார்.



கொலை நடந்த இடத்தை ஆராயும் பொலிஸார்

மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த அவருக்கு அடிக்கடி கொலை மிரட்டல்கள் இருந்து வந்தன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் எந்நேரமும்



கொலையாளிகள் விட்டுச்சென்றதாகக் கூறப்படும் கார்.

பூலான்தேவியின் மெய்க்காப்பாளர்கள் அவருடன் இருந்தனர். பூலான்தேவியின் உயிருக்கு உலை வைத்த துப்பாக்கிச் சூட்டில் அவருடைய மெய்க்காப்பாளரும் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவதினம் பூலான்தேவியின் வீட்டுக்கு காவல் இருந்த பொலிஸ் அதிகாரி தெரிவிக்கையில்:—

''எங்கள் வீட்டுக்கு அருகில் நின்ற காருக்குள் மூன்று பேர் இருந்தனர். ஏன் இங்கே நிற்கிறீர்கள் என்று கேட்டதற்கு பூலான்தேவியைப் பார்க்க வந்ததாகக் கூறினார்கள். சில நிமிடங்களின் பின்னர் பூலான்தேவி வந்து இறங்கியதும் அந்த ஆசாமிகள் மங்கித் தொப்பியணிந்து முகத்தை மூடிக் கொண்டனர். கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கியினால் சுட்டனர். துப்பாக்கியினால் சுட்டுக் கொண்டே அந்த ஆசாமிகள் தப்பி விட்டனர்'' என்றார்.

கொலையாளிகள் விட்டுச் சென்றதாகக் கூறப்படும் கார் ஒன்று டெல்லி நகரத்தின் பகுதியொன்றில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் காரின் டிரைவர் கடந்த மாதம் 27ஆம் திகதி பொலிஸாரிடம் சரணடைந்தார். இதனைத் தொடர்ந்து பூலான்தேவியால் ஆரம்பிக்கப்பட்ட ஏகலவ்ய சேனா (Ekalavya sena) என்ற அமைப்பின் தலைவர் உமா கஷ்யப்பிடமும் பொலிஸார் விசாரணை நடத்தியிருக்கிறார்கள்.

பூலான்தேவி சுடப்பட்டமைக்கு பழைய பகைதான் காரணமா? அல்லது அரசியல் பகையா? என்பதற்கு இதனை எழுதும் வரை விடை தெரியவில்லை.

— சஹானா

# 'இம்பீச்மண்ட்'டின் கதி என்ன? சபாநாயகரோ நாட்டில் இல்லை



அனுரா பண்டாரநாயக்க

**நா**டு அரசியல் நெருக் கடியில் தொடர்ந்து சிக்கிக் கொண்டுள்ளது. இந்நிலையில் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவும் நாட்டில் இல்லை. அவர் கடந்த 27ஆம் திகதி வெளி நாடு சென்று விட்டார்.

தான் வெளிநாடு செல்லவிருப்பதை சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரிடம் ஏற்கனவே தெரிவித்திருந்தார். ஹொங் கொங் பயணமான அவர் அங்கிருந்து கலிபோர்னியா செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றவியல் பிரேரணையை (இம்பீச்மண்ட்) தயார்ப்படுத்துவதில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் சபாநாயகரிடம் அப்பிரேரணையைக் கையளிக்க அவை திட்டமிட்டிருந்தன. இச்சந்தர்ப்பத்திலேயே சபாநாயகர் வெளிநாடு சென்றுள்ளார்.

அமைச்சர் மஹிபால ஹேரத் மீதான குற்றவியல் பிரேரணை, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை, அதனைத் தொடர்ந்து சர்வஜனவாக்கெடுப்பு, நாடாளுமன்ற ஒத்தி வைப்பு தொடர்பான சர்ச்சைகள் என நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு மாதகாலமாக ஒரே அமளி துமளி.

இவற்றுள் சிக்கித் தத்தளிக்க விரும்பாமலே சபாநாயகர் வெளிநாடு சென்று விட்டார் எனக் கருதப்பட்டது.

ஆனால் தற்போது வேறு பல புதுச் செய்திகள் வந்திருக்கின்றன.

சபாநாயகராக அனுரா பண்டாரநாயக்கா பதவியேற்க முன்னர், திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதம் ஒன்றை அவர் ஜனாதிபதியிடம் கையளித்தார் என்று கூறப்படுகிறது.

இது ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட நிபந்தனை ஒன்றின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டது என்றும் பேச்சு பேசப்படுகிறது.

இராஜினாமாக் கடிதம் வழங்கும் சம்பவம் சுனேத்ரா பண்டாரநாயக்கா, ஹரி ஜயவர்த்தன, கிறிஷாந்த குரே ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது என்று கூறப்படுகிறது.

இவர்கள் மூவருமே அனுராவை சபாநாயகராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டிருந்தனராம்.

இந்தத் தகவல்கள் சபாநாயகரின் பிரத்தியேகசெயலர் லஜ் விக்ரமசிங்ஹவின் நெருங்கிய நண்பர்கள் மூலம் கசிந்துள்ளன.

விஷயம் ஐக்கிய தேசியக் கட்சியினரின் காதுகளுக்கு எட்டி விட்டது. அப்புறம் கேட்க வேண்டுமா? கட்சிப் பிரதிநிதிகளுக்கிடையில் சர்ச்சை.

சபாநாயகர் முன்னர் தங்கள் விடயங்களைக் கையாண்ட முறைகளை எதிர்க்கட்சிகள் இரைமீட்டு இந்தத் தகவலுடன் தொடர்புபடுத்திப் பார்த்தன. கொதிப்புத்தான் வந்தது.

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. அவர் சட்டப் புத்தகத்தை மேலும் கீழும் பார்த்துவிட்டுக் கையை விரித்து விட்டார்.

கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டுமாறு கேட்க எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் சிலர் அனுராவைச் சந்திக்கச் சென்றனர். என்றாலும் காரியம் நடைபெறவில்லை.

தற்போது இந்தச் சம்பவங்களையெல்லாம் எதிர்க்கட்சிகள் சீர்தூக்கிப் பார்த்து நிலைமையை புரிந்து கொண்டுவிட்டன.

சபாநாயகரின் வெளிநாட்டுப் பயணம் நீண்ட காலப் பயணமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சபாநாயகர் அனுரா நாடு திரும்பாவிடில் ஐ.தே.க புதிய திட்டம் ஒன்றை நிறைவேற்றப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தைக் கூட்டி புதிய சபாநாயகரை பெரும்பான்மை ஆதரவுடன் தெரிவு செய்வது முதற் கட்டம். அடுத்து இடம்பெறப்போகும் நாடாளுமன்ற அமர்வில் புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்தல். இது இரண்டாம் கட்டம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் வெளிநாடு செல்ல முடிவு செய்த பின்னர் ரணிலைச் சந்தித்து அனுரா பேசினார். தனது வெளி நாட்டுப் பயணம் நீண்டது எனவும் அதனால் சபாநாயகர் பதவியிலிருந்து தாம் இராஜினாமா செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால் அதை மேற்கொள்ளத்தாம் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

— சேனாவரையன்

# இலங்கையில் தனி நாடா? இந்தியாவில் பூச்சாண்டி!

'ஈழத் தமிழர்' என்று சொன்னாலோ, எழுதினாலோ, பேசினாலோ அது 'தேசத்துரோகம்' என்று பொல்லாங்கு பேசுகிற போக்குத் தமிழ் நாட்டில் திட்டமிட்டு வளர்க்கப்பட்டுவிட்டது.

## இஸ்ரேல் — சைப்பிரஸ்

யேசுபிரானைச் சிலுவையில் அறைந்து கொலை செய்ததை ஒட்டி, அவர் இனத்தவரான யூதர்கள், தம் தாயகமான இஸ்ரேலை விட்டு கி.பி முதல் நூற்றாண்டிலேயே வெளியேற்றப்பட்டனர். பல்வேறு நாடுகளில் குடியேறித் துன்பப்பட்டனர்.

1948இல், இங்கிலாந்தும் பிற மேற்கு ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து, அவர்களுக்குப் புது நாட்டை உயிர்ப்பித்தன.

அராபியர் அனைவரும் ஒருங்கிணைந்து அதை எதிர்த்தனர்.

எதிர்ப்பைப் பொருட்படுத்தாது உலகம் முழுவதும் பரவிக் கிடந்த யூதர்கள், தங்கள் புண்ணிய பூமிக்கு திரும்பிவந்து 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாட்டைப் பிரகடனம் செய்தனர்.

துருக்கிக்குப் பக்கத்தில் உள்ள சைப்ரஸ் நாட்டின் கிறிஸ்தவர்கள் மீதும், இந்தோனேசியாவில் உள்ள கிழக்குத் திமோர் கிறிஸ்தவர்கள் மீதும் பாட்பாண்டவரும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான நாட்டினரும் அக்கறை காட்டினர்; காட்டுகின்றனர். அந்நாட்டு மக்களைக் காப்பது தங்கள் கடமை என்று போராடினர்; வெற்றியும் பெற்றனர்.

## வங்காள தேசம்

இந்தியாவில் இருந்து 1947இல் பாகிஸ்தான் பிரிந்த வரலாற்றை இங்கே நினைவிலே கொள்ள வேண்டும்.

இந்தியாவின் வடமேற்குப்பகுதி மேற்குப் பாகிஸ்தான் என்றும், நில அடிப்படை யில் பல நூறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்தியாவின் வடகிழக்குப்பகுதி, கிழக்குப் பாகிஸ்தான் என்றும் மத அடிப்படையில் பிரிந்தன. 1947 முதல் 1971 வரை பாகிஸ்தான் என ஓர் அரசின் கீழ் இரு பகுதிகளும் இருந்து வந்தன.

1971 இல் கிழக்குப் பாகிஸ்தானை தனிநாடாக்குவதற்கு முஜிபூர் ரகுமான் போராடினார். அவர் போராட்டத்திற்கு இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் மேற்குவங்காள அரசும், வங்க மக்களும் உரத்த ஆதரவுக் குரல் கொடுத்தனர். வெளிப்படையாக ஆதரித்தனர்.

அதுமட்டுமில்லாமல், வங்காளத்துடன் நேரடித் தொடர்பு இல்லாத தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களும் வங்க தேசம் தனியாக ஒரு நாடு ஆவதில் பின்னணியில் இருந்து செயற்படுமாறு மத்திய அரசால் கேட்கப்பட்டன.

அப்போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். மேற்குவங்காளக் காங்கிரஸ் தலைவர் சித்தார்த்த சங்கர் ரே மத்திய அரசில் அமைச்சராக இருந் தார். மேற்கு வங்காள மக்களும், அரசியல் அறிஞர்களும், மத்திய அரசில் பதவி வகித்த வங்காள அமைச்சர்களும் எம்.பி.களும், அதிகாரிகளும், ஒட்டு மொத்தமாக நின்று இந்திரா காந்தியை, அயல்நாடான பாகிஸ்தானின் உள்நாட்டுப் போரில் முழுப்பங்கேற்பு எடுக்குமாறு செய்தனர். வெற்றியும் பெற்றனர்.

இதுபோன்ற ஒரு கருத்து உருவாக்கம் தமிழரிடையே நிகழவில்லை?

> இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் (இந்திய அரசின் உதவியுடன்) வங்காளதேசம் உருவானது. இலங்கையிலும் அத்தகையதொரு நிகழ்வு ஏற்பட்டுவிட்டால் இந்தியாவில் உள்ள தமிழர்களும் தனிநாடு கேட்பார்கள் என்று சிலர் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.
>
> அதில் உண்மை உண்டா? விளக்குகிறார் நெல்லை சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் க.ப.அறவாணன்
>
> அவருடைய கட்டுரையின் சுருக்கத்தை இங்கே படியுங்கள்.

## ராஜிவ் கொலை

டில்லி மைய அரசிடம் நாம் பின்வருமாறு எமது கருத்தை முன்னிறுத்த முடியும்.

இலங்கை வாழ் தமிழர்களின் சிக்கலை ராஜிவ்காந்தி கொலையோடு தொடர்புபடுத்துவது முழுத்தவறு இந்திராகாந்தியை ஒரு சீக்கியர் கொன்றார் என்பதற்காகச் சீக்கிய இனத்தையே வெறுக்க முடியுமா? விலக்க முடியுமா?

மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சேயுடன் இந்து மக்களையும், பா.ஜ.கவையும் தொடர்புபடுத்துவதை ஒப்புக் கொள்வோமா?

எனவே அது வேறு, தமிழர்கள் இன்று இலங்கையில் படும் இன்னல் வேறு.

சுதந்திர இந்தியா சோதனைக்கு உள்ளான காலங்களில் எல்லாம் இலங்கையின் சிங்களத் தலைவர்கள் இந்தியாவின் தலை வர்கள் பக்கம் இருந்ததே இல்லை. இந்திய சீனப் போர் 1961இல் நடந்த போது, புத்த மதச் சார்பைச் சாக்காக வைத்துக் கொண்டு சிங்கள அரசு இந்தியாவிற்குத் துரோகம் செய்தது. சீனாவின் பக்கம் இருந்து செயல்பட்டது.

1965இலும் 1971இலும் இந்தியா — பாகிஸ்தான் போர்கள் நடந்த போது, சிங்கள அரசு இந்தியாவிற்கு எதிராகப் பாகிஸ்தான் பக்கம் இருந்தது.

இந்தியாவும், இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களில் ஒன்றைக்கூட மதித்துச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தியது இல்லை. இந்தியாவைப் பயன்படுத்திக் கொண்டதே தவிர, அது எந்தக் காலத்திலும் இந்தியாவிற்குப் பயன்பட்டதே இல்லை.

இந்த நிலையில் இந்தியாவிற்குப் பயன்படத் தகும் நிலையில், வங்கதேசம் வடக்குப் பகுதியில் இந்திய அரசின் துணையோடு உருவானது போல, இலங்கைப்பகுதியிலும் அத்தகையதொரு நிகழ்வு ஏற்பட்டால் இந்தியாவில் உள்ள தமிழர்களும் தனி நாடு கேட்பார்கள் என்று சிலர் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

1971இல் இந்திரா காந்தி வங்க தேசத்தை உருவாக்கிய போது இங்குள்ள மேற்கு வங்காள மக்களும், வங்கதேச மக்களும் ஒன்றாகச் சேர்ந்து 1905க்கு முன்பிருந்த பழைய வங்காளத்தைக் கேட்டார்களா? கேட்பார்களா? எனவே இந்த அச்சம் முழுக்க முழுக்கத் தவறானது. அப்படி ஒரு நாளும் நிகழ வாய்ப்பே இல்லை.

நன்றி — ராணி


# SPOKEN ENGLISH

By **K.M.N. NALRAVI**

யாருக்காக?

★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வகுப்பில் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை **9.30** மணி முதல் மாலை **5.30** மணி வரை (சனிக்கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

**NALRAVI**
**ENGLISH LANGUAGE CENTRE**
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

TALENT

# ஒளி தரப்போவது விளக்கா? பொங்கி வழியப்போவது குடமா?

## இரண்டாவது சர்வஜன வாக்கெடுப்பில் மற்றொரு பலப்பரீட்சை!

அரசியலில் இன்று மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருப்பது சர்வஜன வாக்கெடுப்பு. இந்த வாக்கெடுப்புக்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. வாக்கெடுப்பை ஒத்தி வைக்கும் கோரிக்கைகளும் பல தரப்பில் இருந்து விடுக்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 21 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு இரண்டாவது வாக்கெடுப்பாகும். முதலாவது சர்வஜன வாக்கெடுப்பு 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி நடத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடிப்பதற்காக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன முதலாவது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார். புதிய அரசியல் சட்டம் வேண்டுமா, வேண்டாமா? என்ற கேள்வியை முன்வைத்து இரண்டாவது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கிறது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் முறை இலங்கையின் முதலாவது அரசியல் சட்டத்தில் இருக்கவில்லை. 1978 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்திலேயே முதல் முறையாக சர்வஜன வாக்கெடுப்பு முறை ஏற்படுத்தப்பட்டது.

### முன்னர் எதிர்த்தவர்கள்

நாடாளுமன்ற ஆயுட்கால நீடிப்புக்கு 'ஆம்' என்று பதிலளிப்பவர்கள் 'விளக்கு' சின்னத்துக்கு வாக்களிக்க அன்று கோரப்பட்டனர். 'இல்லை' என்று பதிலளிப்பவர்கள் 'குடம்' சின்னத்துக்கு வாக்களிக்க கோரப்பட்டனர். விளக்கு—குடம் விளையாட்டு என்று அந்த வாக்கெடுப்பு அன்று வர்ணிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து பிரசாரம் செய்தது. சுமார் 81 இலட்சம் பேர் வாக்காளர்களாக இருந்தனர். அதில் சுமார் 57 இலட்சம் பேர் வாக்களித்தனர். 'விளக்கு சின்னத்துக்கு 31 இலட்சத்து 41 ஆயிரத்து 223 வாக்குகள் கிடைத்தன. 'குடம்' சின்னத்துக்கு 26 இலட்சத்து 05 ஆயிரத்து 983 வாக்குகள் கிடைத்தன.

அரசாங்கம் தனது அதிகார பலத்தை அத்தேர்தலில் பிரயோகித்ததாக பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டது. இப்பொழுது 19 ஆண்டுகளுக்குப் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மீண்டும் நடத்தப்படவிருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தையே எதிர்த்து வருகிறது. ஏனைய அரசியல் கட்சிகளும் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படுவதை எதிர்க்கின்றன.

எவ்வாறாயினும் இந்த வாக்கெடுப்பில் 'குடம்' சின்னத்தை வெற்றி பெறச் செய்வதென ஐ.தே.க., ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ், சிஹல உருமய ஆகிய ஐந்து கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகிய கட்சிகளும் கலந்து கொண்டன. ஆனால் தங்களின் நிலைப்பாட்டை ஆகஸ்ட் 4ஆம் திகதி அறிவிப்பதாக அவ்விரு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதை இந்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன. நாடாளுமன்றம் ஜனாதிபதியினால் உடனடியாக மீண்டும் கூட்டப்பட வேண்டும் என்பதையும் அவை வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடித் தாங்களாகவே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்பதில் அக்கட்சிகளிடையே இன்னமும் இணக்கம் ஏற்படவில்லை. மக்கள் விடுதலை முன்னணி இதற்கான முயற்சியை ஆரம்பம் முதலே எதிர்த்து வருகிறது. நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் தாமாகக் கூட்டும் முயற்சி அரசியல் சட்ட ரீதியானதல்ல என்ற நிலைப்பாட்டையே ஜே.வி.பி. கொண்டுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதில் ஜனாதிபதி சந்திரிகா உறுதியாக இருப்பதால் 'விளக்கு—குடம் விளையாட்டு' மீண்டும் நடைபெறுவது நிச்சயமாகும். அதனால் இந்த விளையாட்டு நேர்மையானதாக அமையுமா என்பதே எதிர்க்கட்சிகளின் முக்கிய கவலையாக உள்ளது.

கடந்த கால தேர்தல்களின் பொழுது ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் அரசு நேர்மையாகச் செயற்படுமா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளன.

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை தெரியவரும். அதாவது அத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் மொத்தமாக 51 சதவீதத்துக்கு கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்டன. அரசாங்கம் பெற்ற வாக்குகளை விட எதிர்க்கட்சிகள் சுமார் ஐந்து இலட்சம் வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றிருந்தன.

எதிர்க்கட்சிகள் தமது பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற அதேயளவு வாக்குகளையோ அல்லது அதை விடக் கூடுதலான வாக்குகளையோ பெற முடியுமா?

அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்படவோ அல்லது புதிய சட்டம் கொண்டு வரப்படவோ வேண்டும் என்பதில் அரசியல் கட்சிகளிடையே இது வரை மாற்றுக்கருத்து இருக்கவில்லை. அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றே கட்சிகள் கோரிவந்தன. ஜனாதிபதி ஆட்சி முறை, இனவிகிதாசார தேர்தல் முறை ஒழிக்கப்பட பொதுநல அமைப்புகளும் இயக்கங்களும் குரல் கொடுத்து வந்துள்ளன.

### ரணில் நம்பிக்கை

எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு எதிர்த்தாலும் சர்வஜன வாக்கெடுப்பு வெற்றியில் ஜனாதிபதி உறுதியாகவே இருந்து வருகிறார். அமைச்சரவைக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளையும் அவர் பொருட்படுத்தவில்லை. அண்மையில் அமைச்சரவையின் விசேட கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது "சர்வஜன வாக்கெடுப்பில் அரசு வெல்லும். எதிர்வரும் நவம்பர் மாதமளவில் புதிய அரசியல் சட்டநகல் தயாராகி விடும். அரசியல் சட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதை அரசு முன்னுரிமையாக கொண்டிருக்கும்" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறே சர்வஜன வாக்கெடுப்பில் அரசைத் தோற்கடிப்பதில் எதிர்க்கட்சித் தலைவரும் நம்பிக்கை கொண்டுள்ளார். அண்மையில் ஸ்ரீகொத்தாவில் ஐ.தே.க. நாடாளுமன்ற குழுவினதும் செயற்குழுவினதும் கூட்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உரையாற்றிய ரணில், ஜனாதிபதி சந்திரிக்காவை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் இந்த சர்வஜன வாக்கெடுப்பை முதல் நடவடிக்கையாக கருதி செயற்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

சர்வஜன வர்க்கெடுப்பில் ஒளிதரப் போவது விளக்கா? நிறைந்து வழியப் போவது குடமா? வாக்காளர் தீர்மானிப்பார்கள்.

— அவதானி



### பனம்பழம்

பழுக்கவில்லை...
ஒற்றைக்கண் அணிலரித்துப்
பற்றைக்குள் விழுந்த "நுங்கு"
மற்ற இரண்டு கண்களுக்கும்
சண்டைவரும்
எனக்கும் அனுவுக்கும்...
அம்மா இட்டும் "தரித்திரங்கள்"

***

அனுவுக்கு நல்ல மனசு..
அவள் பொறுக்கிய
சுற்தேக்கங்காய்களின்
முதல் பருப்பு எனக்குத்தான்!

***

புழுக்குத்தாத புதுப்பனம்பழம்
அனுவுக்குத் தெரியும்
மணந்து பார்த்தே சொல்லுவாள்
"உது நேற்றையான்!"
கன்னி பொறுக்குவது நான்
கட்டெடுப்பது அவள்..

***

தின்னக் கூடத் தெரியாதெனக்கு!
வாயில் அரைவாசி, மூக்கில் அரைவாசி..
அனு சொல்லும் "மாடு!"

***

உண்ட மிச்சத்தை
நான் தாட்டு வைப்பேன்
கிழங்கெடுக்க! அனு சிரிக்கும்
சுட்டது முளையாது என்று யாரும்
சொல்லித் தரவுமில்லை!

***

பனம்பழத்துக்கு ஆசை
இப்போ மரமேயில்லை...
தறிச் சா[illegible]!

***

இறைவா, மறுபடி நான்
பத்து வயதுப் பாலகனாக வேண்டும்

கி. குருபரன்

### நம்பிக்கை

எழுந்திரு தோழி எழுந்திரு!
முயற்சி என்பது உன்
மூச்சுக் காற்றாக இருக்க
வேண்டும்
நேரம் வரும் என்று காத்துக்
கிடக்காதே...
அது சோம்பேறிகளின் கனவு
அதிஷ்டம் வரும் என்று
தூங்காதே
அது வீணர்களின் பேச்சு
சேவல் விடியலுக்காக
காத்திருப்பதில்லை
அது விடியலைக் கூவி
அழைக்கிறது
தோழியே எழுந்திரு
நம்பிக்கையோடு
வெற்றி நிச்சயம்.

பி. பிறேம், வவுனியா.

### இருப்பிழந்து போனவர்கள்

சொந்த மண்ணினையிழந்து
சொத்துக்களையெல்லாம் துறந்து
சோகத்தை மட்டுமே சுமந்து
சோற்றுக்குக் கூட வழியேதுமின்றி
சேற்றுக்குள் அமிழ்ந்து
நாற்றமடிக்கும் நரகமாய்
நம் வாழ்க்கை நகர்கின்றது.
நேற்றைய பொழுதுகளில்....
செல்வத்திரள் நடுவேதான்
நாங்கள் வளமாய்
செழித்து நின்றிருந்தோம்.
தென்னங்காணிகள், அதனிடையே
பென்னம்பெரிய வீடுகள்
முன்னம் செய்த நல்வினையால்
முற்றம் முழுதும் காயும்
பனம் பொருட்கள்!
சாக்கு நிறைய நெல் மணிகள்!
மனையும், மனமும்
மகிழ்ச்சி வெள்ளத்தில் நீச்சலடிக்கும்!
இத்தனையும் கொண்டவர்கள்
செத்துப் போன பூவாய்
வாடி வதங்கி உதிர்ந்து
போனதெப்படி? எப்படி.....?
ஆம்!
நாங்கள்
நெருப்பு யுத்தத்தால்
கருக்கப்பட்டு
தெருவோரத்துப் புழுதியாய் வீசப்பட்ட
இருப்பிழந்து போன அகதிகள்!

— த.பிரபாகரன், சுழிபுரம்.

### சத்தியத்தின் வழியினிலே...!

நாடொன்று காடாக மாறிவிட்டது
நரிகளெல்லாம் விருந்துண்டு களிக்கின்றது
மாடிகளும் குடிசைகளும் மண்மேடானது
மனித உரிமைகளும் உணர்வுகளும் சிலையானது

உரலுக்கு ஒருபக்கம் இடியெனச் சொல்வர் — இங்கு
உலவுகின்ற மனிதர்க்கது பலபக்க மென்பர்
விரலே நம் கண்களுக்கு விலை பேசுது — இது
விதியென்று கண்கள் நீர் சொரிகின்றது

சிறைக்கூடம் அறியாத மனிதர்கள் நாடு
சிறையாகக் கண்டு மனம் வாடித் துயின்றார்
உரைக்கின்ற வார்த்தை பெரு மூச்சானது வாய்
உண்பதற்கு மட்டும் என்று பொருளானது
பாடுபட்டு உழைப்பவனே வீதியின் மேலே அதைப்
பறித்துண்டு சுவைப்பவனே மாளிகை மேலே
கேடுகெட்ட இனவெறியர் கேளிக்கையாலே
நாடு நாடாய் அலைகிறது நீதியின் கோலே

கத்தரியில் வெண்டைக்காய் காய்த்துக் குலுங்கும்
கதை தொடர்ந்தால் சமாதான வேட்கை மழுங்கும்
சத்தியத்தின் வழியினிலே ஆட்சி நகர்ந்தால்
சரித்திரத்தில் வெற்றியெனும் வரிகள் துலங்கும்

—நெடுந்தீவு லக்ஸ்மன்.

### முட்களே மீண்டும் முளை விடும்

மலர்கள்
மஞ்சள் செம்மஞ்சள் சிவப்பு என
மனங்களில் நிறையும்
மலர்களின் வாசம்
அதன் நிறங்களிலில்லை
மலர்களின் மணம்
காற்றுடன் கைகோர்த்துலா வரும்
ஆனால்
மலர்களை நான் நேசிப்பவனல்ல
மலர்கள் சந்தியில் சிரித்து
அந்தியில் மடிகின்றன பூக்களுடன்
கூடவே பிறந்திருக்கும் கூர் முட்கள்
இரவிலும் பகலிலும் விழி திறந்து
முட்கள் தன் உறவுகளின் வட்டம் காக்கும்
முறிந்து உதிர்ந்த முட்களும்
முறுக்கேறி சிலிர்த்திருக்கும்
முன்னெப்போதையும் விட
மலர்களோ வாடிச் சருகாகி மண்ணாகும்
மானம் காக்க
முட்களே மீண்டும் முளை விடும்
இனி வரும் பொழுதுகளில்
செடிகளும் கொடிகளும் மலர்களை விடுத்து
முழுதுமாய் முட்களையே பிரசவிக்கட்டும்

—பிரியா ஜெயக்குமார், கிளிநொச்சி

### காதல்

ஜாதி பேதம்
பாராமல்
மலரும்
அழகிய
மொட்டு.....!

### சந்தேகம்

காதலின்
முடிவை
நிர்ணயிக்க
முடியாத
அச்சாணி....!

### தவிப்பு

தான் நோக்கின்
தன்னை
நோக்கும்
வரையில்
ஏங்குவது....!

### சோகம்

காதலின்
பிரிவினால்
முளைத்திருக்கும்
தாடியின்
வெளிப்பாடு....!

—எம்.பைஸல்,
அலுபொத

### "முத்தா" வா... முடிவுரைப்பார்!

கிடங்குகள் கிண்டிக் குண்டுகள்
விழ்ந்தன!
செந்நீர் சிந்திடச் செழித்தன பயிர்கள்!
மூச்சுக் காற்றுகள் முடிவு கட்டின!
புல் நிலங்களும் போர்க்கோலம்
பூண்டன!
பாதி வயதுகள் சாதனை படைத்தன!
கல்லறைச் சுவர்களால் காவியம்
எழுந்தன!

***

காக்கவென வந்தோரால்— காமச்
சதிராட்டம் நடந்தது காண்!
கதிராடும் நிலப்பரப்பில் —குருதி
வெறியாட்டம் நடந்தது காண்!
செம்மணிகள் பறந்தது காண்!
பரபரப்பும் பிறந்தது காண்!

***

கண்கெட்டாள் தலைமையிலே
சகுனிமார் கூடுகிறார்
பாரதத்தில் விதுரனின் தூதுபோல்
வெளிநாட்டுத் தூதுகளும் வேகாது
பாரதப்போர் நடந்தால் தான்
அறம் வெல்ல இடமுண்டு!

***

மகிந்தரின் வழியினிலே
வெறுந்தலைகள் வந்தது பார்!
அரச மரத்தடியில்
ஞானம் பிறந்திடும் பார்!
கூடி நின்று கூத்தாடி
காரியத்தை குழப்பிடும் பார்!
பெரும்பாலும் தீர்ப்பிற்கு
'மாதளமுத்தா' தான் வருவார் பார்!

லோ. துஷிகரன்




# இரத்த நண்பன்



டொனால்ட் மெக்ஸ்வான் ஒரு துடிப்பான இளைஞன். இளம் பொறியியலாளனான அவனுக்கு பணம் சேர்ப்பதில் பெரும் ஆர்வம். இத்தனைக்கும் அவனது தந்தை பெரும் செல்வந்தர். பரம்பரையாக வசதி படைத்து வாழ்ந்து வந்த அவர்களது குடும்பச் சொத்துக்களைக் கொண்டு பல தலைமுறைகளுக்கு டாம்பீகமாக வாழலாம். ஆனாலும் தான், தனக்கென்று செல்வம் சேர்க்க வேண்டும் என்பதில் டொனால்ட் தீவிரமாக இருந்தான்.

புதிதாகத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, மக்களைக் கவரக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்து பணம்சேர்க்க வேண்டும் என்பது அவனது கனவு.

அன்று அவன் மிகவும் பரபரப்பாக இருந்தான். சிறுகச் சிறுகத் தான் சேர்த்து வைத்திருந்த ஒரு லட்சம் டொலர்களைப் பையில் எடுத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டவனை அவனது தந்தையின் குரல் தடுத்தது.

''எங்கே அவசரமாகப் புறப்பட்டு விட்டாய்?''

''நண்பன் ஒருவனுடன் வெளியே போகிறேன். தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான இடத்தை இன்று வாங்கப் போகிறேன்!'' உற்சாகமாகப் பதில் வந்தது டொனால்ட்டிடமிருந்து.

''அப்படியா? ஜாக்கிரதையாகப் போய்வா! பெஸ்ட் ஒப் லக்!''

''தாங்க்யூ!''

''உன் நண்பனை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கவில்லையே நீ.''

''அவனது பெயர் ஜோர்ஜ். ஒரு இரசாயனவியல் விஞ்ஞானி. அவன்தான் எனக்கு ஆலோசனைகள் தருகிறான். வெளியில் காரோடு காத்திருக்கிறான். இன்று அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது. இன்னொருநாள் அவனை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.''

''ஓ.கே!''

டொனால்ட் புறப்பட்டுபோனான். அதன்பிறகு அவன் திரும்பவேயில்லை. என்னவானான் என்பதும் தெரியவில்லை. உயிரோடு இருக்கிறானா? இறந்துவிட்டனா? என்பது கூடத் தெரியவில்லை. பணத்துக்காக டொனால்ட்டை அவனது நண்பன் கொலை செய்திருக்கலாம் என்ற ஊகத்தை அடிப்படையாக வைத்து பொலிஸார் தேடுதல்களை நடத்தினர்.

ஆனால் டொனால்டையோ, ஜோர்ஜையோ கண்டு பிடிக்க இயலவில்லை. ஜோர்ஜ் என்ற நபரை டொனால்ட்டுடன் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லாததால், 'யார் அந்த ஜோர்ஜ்?' என்ற கேள்வியுடன் அந்த வழக்கு முடிவுறாமலே நின்று விட்டது.

* * *

ஏறத்தாழ நான்கு வருடங்கள் கழித்து, 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம். லண்டன் நகரின் தென்பகுதியில் அமைந்திருந்த உல்லாச விடுதியொன்றில் உற்சாகம் களைகட்டியிருந்தது. செல்வந்தர்கள் பெருமளவில் வந்து ஒன்றுகூடி உல்லாசமாக இருந்து விட்டுப் போகும் உல்லாச விடுதி அது.

அன்றைய தினம் அந்த விடுதியில் பல பணக்காரப் பெண்கள் நிறைந்திருந்தனர். அனைவரும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். சிலவாரங்களாக அந்த விடுதியில் தங்கியிருந்து தமது பொழுதை உல்லாசமாகக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

பெரும்பாலும் எல்லாப் பெண்களும் இளம் வாலிபர்களைத் தமக்குக் 'கம்பெனி' கொடுப்பதற்காக அழைத்து வந்திருந்தனர். அந்த இளம் வாலிபர்களோடு அவர்கள் அடித்த ஆபாசக் கூத்துக்களால் அந்த உல்லாச விடுதி களைகட்டியிருந்தது.

அங்கு நடனமாடிக் கொண்டிருந்தவர்களில் டுரான்ட் டெஹோனும் ஒருத்தி. அவளது கணவன் பெரும் வியாபாரப்புள்ளி. மாரடைப்பால் கணவன் காலமானதும் டெஹோன்தான் வியாபாரங்களைக் கவனித்து வருகிறாள். செல்வத்தைக் குவித்து வைத்திருந்தாலும் இன்னும் வியாபார நிலையங்களைப் புதிதாக ஆரம்பித்து பணம் சேர்க்க வேண்டும் என்று பேராசை அவளுக்கு.

டெஹோனுடன் நடனமாடிக் கொண்டிருந்த இளைஞன் அவளைக் கிளர்ச்சியின் உச்சத்துக்குக் கொண்டு போயிருந்தான். அவனது கைகள் அவளது உடலில் புகுந்து விளையாடின.

உச்ச மயக்கத்தில் இருந்த டெஹோனை அணைத்தவாறு வெளியே அழைத்துப் போனான் அந்த இளைஞன்.

* * *

ஊரின் ஒதுக்குப் புறமான பகுதியில் அமைந்திருந்த சிறிய மர வீடு ஒன்றுக்கு டெஹோனை அழைத்து வந்திருந்தான் அவன்.

போதை மயக்கத்திலிருந்தாலும் தெளிவாகவே அவள் அவனுடன் உரையாடினாள்.

''நாம் புதிதாக ஆரம்பிக்கப் போகும் தொழிற்சாலையைப் பற்றி இன்னும் நீ கூறவில்லையே ?''

அந்த இளைஞன் மெல்லிய புன்னகையோடு பதில் கூறினான்.

''நமது தொழிற்சாலைக்கான அடிப்படை மூலப் பொருட்களை இங்கேதான் சேகரித்து வைத்திருக்கிறேன். ஆரம்பத்தில் சிறிதாக ஆரம்பித்துப் பின்னர் பெரிய அளவாக்கிக் கொள்ளலாம்.''

''தொழிற்சாலை அமையவிருக்கும் இடம் இதுதானா...?''

''ஆமாம். காணி உரிமையாளரிடம் முன்பணம் மட்டுமே கொடுத்திருக்கிறேன். மீதிப்பணம் மூன்றுலட்சம் டொலர்களும் தயார் தானே?''

''இதோ பையில் இருக்கின்றன!'' என்றவாறே அவனது தோள்களில் சாய்ந்து அவனை அணைத்துக் கொண்டாள் டெஹோன். அடுத்து அங்கு அரங்கேறிய காட்சிகள் அவளை சொர்க்கத்துக்கே இட்டுச் சென்றன. வயது ஏறி விட்டாலும் உடலைக் கட்டுக் கோப்பாகவே வைத்திருந்தாள் அவள். தனது தாகம் தீரும் வரை அவன் அவளை ஓய்வெடுக்கவிடவில்லை. களைப்பு மிகுதியால் அசந்து தூங்கிப் போனாள் அவள்.

அவள் உறங்குவதை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பின்னர் மெதுவாக எழுந்து சென்று கூரிய கத்தி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். மறுகையில் கண்ணாடிக் குவளை ஒன்றையும் எடுத்துக் கொண்டு டெஹோனை நெருங்கினான்.

அவளது தொண்டையைக் கிழித்தது அவனின் கத்தி. வலியால் துடித்து எழுந்தவளினால் அதிகநேரம் உயிரைத்தக்க வைத்துக் கொள்ள இயலவில்லை. அவனின் அசுரபலம் டெஹோனின் உயிர்ப்போராட்டத்தை சுலபமாக அடக்கி விட்டது.

கழுத்திலிருந்து வழிந்த இரத்தத்தை குவளையில் ஏந்திக் கொண்டு கதிரையில் வந்தமர்ந்தான் அவன். மெதுவாக ரசித்து ருசித்துப் பருக ஆரம்பித்தான்.

* * *

டெஹோன் காணாமல் போனது பற்றி அவளது தோழி லேன் பொலிஸில் புகார் கொடுத்திருந்தாள். டெஹோனுடன் இருந்த இளைஞன் யார் என்பதைக் கண்டுபிடிக்க பொலிஸார் தீவிரமாக முயன்று கொண்டிருந்தனர்.

டெஹோனுடன் இருந்த இளைஞனைப்பற்றிய சரியான அடையாளங்களைக் கூற ஒருவராலும் இயலவில்லை. எனினும் புதிய தொழிற்சாலை ஒன்றைத் தனது நண்பனுடன் சேர்ந்து விரைவில் ஆரம்பிக்கப்போவதாக அவள் கூறிக் கொண்டிருந்ததாக லேன் தெரிவித்தாள்.

அந்த 'நண்பன்' தான் பணத்துக்காக டெஹோனைக் கடத்திச் சென்றிருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்தது. அந்த அடிப்படையில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டபோதும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தேடும் வகை தெரியாமல் தடுமாறிப் போனார்கள் பொலிஸார்.

* * *

சிலவாரங்களுக்குப் பின்னர் நகரின் ஒதுக்குப்புறப்பகுதியில் இருந்த வீட்டு வளவிலிருந்து எலும்புகள் சில கண்டெடுக்கப்பட்டன.

நாய் ஒன்று அந்த இடத்தை மோப்பம் பிடித்துக் கிளறியிருந்தது. தோண்டத்தோண்ட ஒரு முழுமனிதனின் எலும்புகளும் கிடைத்தன.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது அங்கிருந்த மரவீடு ஒன்றிலிருந்தும் சில தடயங்கள் கிடைத்தன. அண்மையில் ஏற்பட்ட இரத்தக் கறைகளும் அங்கு தென்பட்டன.

அனைத்துத் தடயங்களும் பொலிஸாரின் இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டன. அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து அங்கு கிடைத்த எலும்புகள் பெண் ஒருவருக்குச் சொந்தமானவை என்பது தெரியவந்தது. இரத்த, டீ.என்.ஏ.பரிசோதனைகள் அந்தப்பெண் டெஹோன்தான் என்பதை உறுதிப்படுத்தின.

டெஹோனைக் கொன்று அவளது உடலை அமிலத்தினுள் போட்டு, சதைகள் அரிக்கப்பட்டபின்னர் எலும்புகளை மட்டும் புதைத்திருக்கிறான் கொலையாளி.

அந்த மரவீட்டினுள் மேலும் பொலிஸார்சோதனைகளை மேற்கொண்டனர். அப்போது கொலையாளியை அடையாளம்காட்டக் கூடிய சில தடயங்கள் அவர்களுக்குக் கிடைத்தன.

அங்கு கிடைத்த ஒருபையில் கொலையாளியால் இதுவரை கொல்லப்பட்டவர்களின் விவரங்களும் இருந்தன. அந்தக் கொலையாளியின் பெயர் ஜோர்ஜ் அவன் ஒரு இளம் இரசாயனவியல் விஞ்ஞானி.

பெரும் பணக்காரர்களுடன் நட்பு வைத்து, புதிய தொழிற்சாலைகளை தொடங்குவதாக ஏமாற்றி அவர்களைக் கொலை செய்து பணத்தைக் கொள்ளையடித்து வந்திருக்கிறான். தன்னால் அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் விவரம், அவர்களைக் கொலை செய்த முறை என்பவற்றைக் கூட அவன் அந்த பையில் விலாவாரியாகக் குறித்து வைத்திருந்தான்.

உடனடியாக ஜோர்ஜைக் கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் இறங்கினர். ஆனால் அந்தக் குரூர விஞ்ஞானி தலைமறைவாகி விட்டான்.

தன்னைப் பொலிஸார் வளைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டதும் நாட்டை விட்டுத் தப்பி விட்டான் அவன். அதன்பின் அவனைக் கைது செய்ய மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. இன்று கூட உலகின் ஏதோ ஒரு மூலையில் அவன் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடும்.

> அவளது தொண்டையைக் கிழித்தது அவனின் கத்தி. கழுத்திலிருந்து வழிந்த இரத்தத்தை குவளையில் ஏந்திக் கொண்டு கதிரையில் வந்தமர்ந்தான் அவன். மெதுவாக ரசித்து ருசித்துப் பருக ஆரம்பித்தான்.

## சோகத்தைச் சொன்னால் அழுதுவிடும் ரோபோ!

மனிதத் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் காலம் இது. கடினமான செயல்களைச் செய்விக்கவும் அவசியமான தேவைகளுக்காகவும் அதிகளவில் ரோபோக்கள் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றன.

அண்மையில் தென் கொரியாவில் வடிவமைக்கப்பட்ட ஏ.எம்.ஐ என்ற ஆர்ட்டிபிஷல் இண்டலிஜன்ஸ் மல்ட்டி மீடியா இன்னோவேடிவ் ரோபோவானது மனிதர்கள் சொல்வதை உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்ற பதில்களைத் தனது செய்கைகள் மூலம் வெளிக்காட்டுகிறது.

அத்துடன் இந்த ரோபோ எவ்வளவு தூரத்திலிருந்து தன்னிடம் பேசுகிறார்கள் என்பதையும் கணக்கிட்டு விடுகிறது, நடக்கும்போது இடையில் பொருட்கள் அல்லது தடைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைக் கணித்து ஒதுங்கிச் செல்லும்.

தலையில் 'ஹெல்மட்' மாட்டியது போல் தோற்றமளிக்கும் இந்த ரோபோவால் எப்படி நாம் சொல்வதைப் புரிந்து கொண்டு செய்கைகளால் வெளிப்படுத்த முடியும் என்று யோசிக்கின்றீர்களா?



இதற்காக, இந்த ரோபோவின் மார்பில் பல சென்ஸார் சிஸ்டம்ஸ் கொண்ட திரை உள்ளது.

மகிழ்ச்சியான செய்திகளைச் சொன்னால் சிரிப்பதும் சோகமான செய்தியைச் சொன்னால் அழுவதும் இந்தத் திரையில் உள்ள உருவம் செய்யும்.

மனிதர்களைவிட இந்த ரோபோக்களுடன் நட்புரிமை கொண்டு பழகலாம் போல் இருக்கிறதல்லவா?

காலப் போக்கில் இயந்திரமனிதன் இன்னும் என்னென்ன கைங்கரியங்களை நமக்குச் செய்துதரப் போகின்றதோ?

''டிரைவரும் கிளீனரும் சேர்ந்து நடத்தும் கடை இது என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''டிரை கிளினர்ஸ் என்ற பெயரை வைத்துத்தான்''



# ஆஸ்துமா நோயாளர்களுக்கு அதிக பாதுகாப்பு 'இன்ஹேலர்'

**கே:** வளரும் பிள்ளைகளின் அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்கு என்ன முறைகளைக் கையாளலாம்?

**ப:** பிள்ளையின் வளர்ச்சி தாயின் கருப்பையில் ஆரம்பமாகிறது. எனவே தாய் கர்ப்பமாக இருக்கும் காலத்தில் நல்ல போஷாக்குள்ள உணவை உண்பது மட்டுமல்லாமல் அளவான உடற் பயிற்சியும் அளவான ஓய்வும் முக்கியமாகும். இது சிசுவுக்கான இரத்த ஓட்டத்தைக் கூட்டி அதன் வளர்ச்சிக்கு உதவும். இந்தக் காலத்தில் தாய் கோபப்படுதலோ உணர்ச்சிவசப்படுவதோ அல்லது கவலைப்படுவதோ கூடாது. நல்ல விடயங்களைச் சிந்தித்து நல்ல விடயங்களை வாசித்து மனதைச் சாந்தமாக வைத்திருக்க வேண்டும். பிறந்த பிள்ளைக்குத் தாய்ப்பால் கொடுத்து வருதல் அதன் எல்லாவித வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியாக இருக்கும். பிள்ளைகளின் அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவற்றின் வளர்ச்சி உணவில் மட்டுமல்ல பெற்றோர்களினதும் அவர்களைச் சூழவுள்ளவர்களினதும் நடத்தையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சிறு குழந்தைகள் பெரியவர்களை நல்லவர்கள், எல்லாம் வல்லவர்கள் என்று நினைத்துக் கொள்வார்கள். தமக்கு ஏற்படும் எந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றும் வல்லமை பெரியவர்களுக்கு உண்டு என நினைத்துக் கொள்வார்கள். குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் பயப்பட்டாலோ அல்லது பதற்றப்பட்டாலோ குழந்தைகளின் சிந்தனை ஓட்டம் குழப்பமடையும். பெரியவர்கள் தமக்குள்ளே சண்டை போட்டுக் கொள்வதைக் குழந்தைகள் காணும்பொழுது அவர்களால் அதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் போகும். இது பிற்காலத்தில் அவர்களின் ஆளுமையிலும் செயற்திறனிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். சிறுவர்களுக்கு முன்னால் தீயவற்றைப் பேசினால் அல்லது தீய செயல்களைச் செய்தால் அவர்கள் அதை சரியானவை என நினைத்துக் கொள்வார்கள். அதாவது அவர்களுக்கு சரியானவற்றையும் பிழையானவற்றையும் பிரித்தறியும் திறன் குறைந்து போகும். எனவே பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உணவு மட்டும் போதாது. பெரியவர்களின் நல்ல நடத்தையும் மிக முக்கியமாகும். பிள்ளைகள் வளர்ந்துவரும் காலங்களில் பெரியவர்களைப் பார்த்துப் புதிது புதிதாகச் சில காரியங்களைச் செய்ய முனைவார்கள். உதாரணமாகத் தமது உணவைத்தாமே அள்ளி உண்ண முனைவார்கள். உடைகளைத் தாமே போட்டுக் கழற்றுவதற்கும் முனை வார்கள். இப்படி ஏதாவது செயல்கள் செய்ய முற்பட்டால் அதற்குத் தடங்கல் ஏதும் செய்யாமல் அதனை ஊக்கப் படுத்தி விடுதல் அவசியமாகும். இது அவர்களின் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்க்கப் பெரிதும் உதவும். எனவே ஒரு பிள்ளையின் பூரண வளர்ச்சி பெரியவர்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

> **இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன்.**
> **நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—**
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> **'சுடர் ஒளி'**
> **36/2, பிரெட்றிகா வீதி,**
> **கொழும்பு — 06.**

**கே:** எனக்கு இப்பொழுது 38 வயது. கடந்த 10 வருடங்களாக எனக்கு ஆஸ்துமா நோய் இருந்து வருகிறது. இதற்காக முன்பு மாத்திரைகள் பாவித்து வந்தேன். தற்பொழுது டாக்டர்களின் ஆலோசனைக்கமைய உறிஞ்சுகின்ற மருந்து (மருந்தை உறிஞ்சி நேரடியாக சுவாசப்பைக்குள் எடுத்துக் கொள்ளுதல்) பாவித்து வருகிறேன். இதனைப் பாவிக்கத் துவங்கியதும் நல்ல சுகம் தெரிகிறது. நீண்ட காலத்திற்கு இந்த உறிஞ்சி எடுக்கும் மருந்தைப் பாவித்து வந்தால் ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா?

**ப:** நீங்கள் உறிஞ்சுகின்ற மருந்து என்று குறிப்பிட்டதை இன்ஹேலர் (Inhaler) என்று சொல்லுவார்கள். இந்த முறை மூலம் மருந்தை எடுக்கும் பொழுது அந்த மருந்துகள் நேரடியாக சுவாசப் பையை அடைவதால் இதன் பக்கவிளைவுகள் மிக மிகக் குறைவானதாகவே இருக்கிறது. இதனை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பாகப் பாவிக்க முடியும். மாத்திரைகளைப் பாவிக்கும் பொழுது இவை உடலின் எல்லா அங்கங்களையும் சென்றடைகின்றன. மருந்தின் ஒரு சிறு பகுதி மாத்திரமே சுவாசப்பையைச் சென்றடைந்து தொழிற்படுகிறது. எனவே மாத்திரைகளைப் பாவிப்பதனால் ஏற்படும் பக்க விளைவுகள் அதிகமாகும். இலங்கையில் 10,000 இற்கும் அதிகமான ஆஸ்துமா நோயாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் இன்னமும் மாத்திரைகளையே பாவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்த நோய் சரியாகக் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பதுடன் பல பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. உறிஞ்சுகின்ற மருந்துகளைப் பாவிக்கும் போது மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய சரியான அளவுகளில் சரியான முறையில் நீண்ட காலம் தொடர்ச்சியாகப் பாவித்து வந்தால் மாத்திரமே நோயை நல்ல முறையில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடியும்.

**கே:** வளர்முக நாடுகளில் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் பெரும்பாலும் நுண்ணங்கிகளின் அல்லது கிருமிகளின் தொற்றுதலினாலேயே ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் கிருமிகளைக் கொன்றொழித்து நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

**ப:** மனிதனின் உடலிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல நுண்ணங்கிகள் மனிதனுக்குப் பல நன்மையான விளைவுகளை ஏற்படுத்திக் கொண் டிருக்கின்றன. இந்த நன்மை பயக்கும் நுண்ணங்கிகளுக்குத் தாயகக் கோட்பாடு இருக்கிறது. அதாவது மனிதனின் உடலின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான நன்மை பயக்கும் நுண்ணங்கிகள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றன. இவை நோயை விளைவிக்கும் தீய நுண்ணங்கிகள் தமது பாரம்பரிய பிரதேசத்தில் குடியேறுவதை எதிர்த்துப் போராடுகின்றன. இதன் மூலம் நோய் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. இந்த போராட்டத்தில் தீய கிருமிகள் வெற்றி பெறுமாயின் அவை மனிதனின் உடலி னுள்ளே புகுந்து விடும். இந்த உட்புகுந்த நோய்க் கிருமிகளை எதிர்த்து மனித னின் நோய் எதிர்ப்புச் சக்தி போராடும். இந்தப் போராட்டத்திலும் தீய கிருமிகள் வெற்றி பெறுமாயின் மனிதனுக்கு நோய் ஏற்படும்.

எனவே நுண்ணங்கிகளின் தொற்றுதலைத் தவிர்ப்பதன் மூலமும் மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுவதன் மூலமும் நோய் ஏற்படாமல் தடுக்க முடியும். தீய நுண்ணங்கிகளின் தொற்றுதலைத் தவிர்ப்பதற்கு கொதித்து ஆறிய நீரைப் பருகுதல், சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத அல்லது பாதுகாக்கப்படாத உணவை உட்கொள்வதைத் தவிர்த்தல், மலசல கூடப் பாவனையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு அறிவுறுத்துதல், ஒருவருக்குத் தொற்றுநோய் ஏற்பட்டால் தாமதிக்காது மருத்துவ சிகிச்சை பெறுதல், தேவை ஏற்படின் நோயாளியைத் தனிமைப்படுத்துதல் போன்ற வழிமுறைகளைக் கையாளலாம். மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுவதற்கு நல்ல போஷாக்குள்ள உணவுவகைகளை உட்கொள்ளுதல், உடற்பயிற்சி செய்து வருதல், புகைத்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களைத் தவிர்த்தல். சில தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல் போன்றவற்றைச் செய்யலாம்.

**கே:** எனது மகனுக்கு இப்பொழுது ஒரு வயது பூர்த்தியாகிறது. அவனின் மேல் உதட்டுக்கு அருகே கடும் சிவப்பு நிறத்தில் 1cm விட்டமுள்ள ஒரு கட்டி காணப்படுகிறது. அவனுக்கு ஒரு மாதமாக இருக்கும் பொழுது சிறிதாகத் தென்பட்ட இந்தக் கட்டி இப்பொழுது சற்றுப் பெருத்துள்ளது. டாக்டர்களுக்குக் காட்டிய பொழுது மருந்து ஏதும் தேவையில்லை. காலப்போக்கில் அது மாறிவிடும் என்று சொன்னார்கள். இன்னும் அது மாறவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

**ப:—** நீங்கள் குறிப்பிட்டிருக்கும் அந்தக் கட்டி எந்த ஆபத்தையும் விளைவிக்காது. இதை 'ஸ்ரோபெறி நீவஸ்' என்று சொல்லுவார்கள். இது காலப்போக்கில் சிறியதாக வந்து எந்த அடையாளமும் இல்லாமல் மறைந்துபோகும். இதற்குச் சிலசமயம் ஏழு வருடங்கள் கூட ஆகலாம். இந்தக் கட்டியில் காயம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காயம் ஏற்பட்டால் குருதிப் பெருக்கோ அல்லது நிரந்தரமான அடையாளங்களோ ஏற்பட வாய்ப்புண்டு.

**கே:** ஒரு மனிதனில் எவ்வளவு இரத்தம் இருக்கிறது?

**ப:** ஒரு மனிதனில் இருக்கும் இரத்தத்தின் அளவு அவனது உடல் நிறையில் தங்கியுள்ளது. ஒவ்வொரு உடல் நிறைக்கும் 75 ml குருதி என்ற விகிதத் தில் இது காணப்படும். உதாரணமாக 10 kg நிறையுள்ள ஒரு குழந்தையினுள் இருக்கும் குருதியின் அளவு 750 ml ஆகும். 60kg நிறையுடைய ஒருவரில் காணப்படும் குருதியின் அளவு 75 x 60 =4500ml ஆகும்.

# ராசி பலன்

**05.08.2001 முதல் 11.08.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

சூரியன், செவ்வாயால் நன்மை கிடைக்கும். சனி, புதன், குருவால் பெரிதாக நன்மை இல்லை. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் பெரிதாக இருக்காது. வீடு, வாகனங்களால் செலவு இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி அளிக்கும். பிரயாண வாய்ப்புக்கள் பிரகாசமாகும். திருமணவாய்ப்புக்கள் தாமதமாகலாம். உடல்சுகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் அமைதி இல்லை.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

புதன், சனி ஆகிய கிரகங்களால் பெரிதாக நன்மை கிடைக்கும். சுக்கிரன், குருமத்திமமான பலனையே தரும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு ஆரோக்கியமானதாக இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பும் உண்டு. உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில் துறை முன்னேறும். பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

புதன், சூரியன், சனி ஆகிய கிரகங்களால் நன்மை கிடைக்கும். குரு, செவ்வாயால் பெரிதாக உதவி இல்லை. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் மன ஒருமைப்பாடு இருக்காது. வீடு, வாகனங்களால் மத்திம பலனே. குழந்தைகளின் செயல் திறன் முன் மாதிரி யாய் இருக்கும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். பிர யாண வாய்ப்பும் தாமதமாகலாம். தொழில் துறையில் சில பின்னடைவு இருக்கும்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

செவ்வாய், குரு, சனி ஆகிய கிரகங்கள் மத்திம பலனைத் தரும். புதன், சந்திரனால் நன்மை கிடைக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். உடல் நிலை நன்றாக இருக்கும். நண்பர்க ளால் செலவு இருக்கும். தொழில் துறையில் பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

செவ்வாய், சனி, குருவால் நன்மை கிடைக்கும். சூரியன், புதன் மத்திமமான பலனைத் தரும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாக னங்களால் லாபம் இருக்கும். குழந்தைகள் சொற்கேட்பர். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில்துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்பும் உருவாகும். இடமாற்றம் உண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

சனி, சுக்கிரன், சூரியனால் நன்மை கிடைக்கும் மற்றைய கிரகங்கள் மத்திம பலனைத் தரும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு இருக்கும். புத்திரச் சிறப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில் துறையில் சாதனை செய்யலாம். நண்பர்களால் உதவி உண்டு.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

சனி, சுக்கிரன், புதனால் நன்மை கிடைக்கும். மற்றையவை மத்திம பலனைத் தரும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் பெரிதாக ஆர்வம் இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது சிரமம். திருமண வாய்ப்பு உண்டு, பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில்துறை முன்னேற்றம் காணும்.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சூரியன், சந்திரன், சனி, புதனால் நன்மை கிடைக்கும். மற்றையவை மத்திமமான பலனையே தரும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி அளிக்காது. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறை முன்னேறும்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம்1.**

செவ்வாய், சூரியன், குரு, சுக்கிரனால் நன்மை கிடைக்கும். மற்றையவையால் மத்திம பலனே. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். திருமணவாய்ப்பு பிரகாசமாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சனி, சந்திரன், ராகு, கேதுவால் பெரிய அளவில் நன்மை கிடைக்கும். மற்றையவற்றால் மத்திம பலனே. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு இருக்கும். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். திருமண வாய்ப்பு தாமதமாக லாம். பிரயாண வாய்ப்பைப் பின்போடலாம். உடல் நிலை, நன்றாக இருக்கும். தொழில் துறையில் பின்னடைவு இருக்கும்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

புதன், சனி, குரு, கேது நன்மை செய்வார்கள். மற்றைய கிரகங்கள் மத்திமமான பலனையே தரும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி அளிக்காது. உடல் நிலை நன்றாக இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

சந்திரன், செவ்வாய், சனி, கேதுவால் நன்மை கிடைக்கும். மற்றைய கிரகங்களால் மத்திமமான பலனே. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். புத்திரர்களைக் கட்டுப்படுத்துவது கடினம். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். உடல் நிலை நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் பிரச்சினை வரலாம்.



# இதுவரை எவர் மனதையும் திருடாத அழகு மயில்!

தமிழ்த் திரையுலகில் கவர்ச்சிப் போட்டி நிலவும் இக்கால கட்டத்தில் கவர்ச்சி என்ற பக்கமே தலை வைத்துப் படுக்காதவர் நடிகை கௌசல்யா.

அதே நேரம் ''அந்தப் பொண்ணு இழுத்துப் போர்த்திக் கொள்ளத்தான் லாயக்கு'' என்று மற்றவர்களிடம் பெயர் வாங்காமலும் நடித்து நல்ல பெயர் எடுத்துக்கொண்டிருப்பவர்.

'நேருக்கு நேர்' படத்தில் நடித்ததன் மூலம் ''அவள் வருவாளா! எம் உடைந்து போன நெஞ்சை ஒட்ட வைக்க அவள் வருவாளா?'' என்று கேட்டனர் ரசிகர்கள்.

தொடர்ந்து வந்த 'சொல்லாமலே' கௌசல்யாவின் பெயர் சொல்ல வைத்தது. புயல் காற்றாய் வீசி விட்டு ஓயாமல் திரையுலகில் அமைதியான தென்றலாக வலம் வந்து கொண்டிருப்பவர் கௌசல்யா.

கவர்ச்சி அலைகளின் தாக்கத்தினால் அவ்வப்போது ஒதுங்கி இருந்தாலும் கௌசல்யாவின் படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

'தாலி காத்த காளியம்மன்', 'குங்குமப் பொட்டு கவுண்டர்' என்பன சமீபத்தில் கௌசல்யாவின் பெயர் சொல்லியவை.

கே:— நீங்கள் நடிக்கும் படங்களில் பெரும் பாலானவை இரண்டு கதாநாயகிகள் நடிக்கும் படமாக இருக்கிறதே?

ப:— ஆமாம். ஆனாலும் எனது கரெக்டருக்கு முக்கியத்துவம் இருக்கும் கதைகளையே தேர்ந்தெடுக்கிறேன்.

கே:— டைரக்டர் சிவாவை நீங்கள் காதலிப்பதாகவும் அதனால் தான் 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ' படத்தை அவர் இழுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறதே!

ப:— இது அப்பட்டமான பொய். நான் எல்லோருடனும் சகஜமாகச் சிரித்துப் பேசுவேன். அவருடனும் அப்படித்தான் பழகினேன்.

ஆனால் அதனைக் காதல் என்று கூறி பரபரப்பாக்கி விட்டார்கள். தெளிவாகச் சொல்கிறேன். இதுவரைக்கும் யாரையும் காதலித்தது கிடையாது.

கே:— முதலில் மறுப்பவர்களது காதல் விவகாரம் கல்யாணத்தில் முடிந்திருப்பது கண் கூடு. அது போன்று உங்கள் விவகாரமும் அமையுமா?

ப:— நான் இப்பொழுது எதைச் சொன்னாலும் பூசி மெழுகுவதாகத்தான் தெரியும். அதனால் பொறுத்திருந்து பாருங்கள். காதல், கல்யாணம் எல்லாம் ஆறு வருஷத்துக்குப் பிறகு தான்.

கே:— இந்த கிசு கிசுவினால் தான் மலையாளப்படங்களில் அதிக கவனம் செலுத்தினீர்களா?

ப:— அப்படியில்லை. கிடைக்கும் வாய்ப்புகள் எந்த மொழியிலாக இருந்தாலும் பயன்படுத்தத் தவறமாட்டேன். அதுமட்டுமல்ல, தமிழைவிட மலையாளத் திரையுலகில் எனக்கு அதிக வரவேற்பு கிடைக்கிறது.

மலையாளத்தில் கலாபமணி ஸாருக்கு ஜோடியாக நடித்த படம் 'கருமாரி குட்டன்'. இது நூறு நாட்களையும் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. இது தமிழில் ஸ்ரீதேவி நடித்த பதினாறு வயதினிலே படத்தின் கதை, ஒரு சில மாற்றங்களுடன் வெளிவந்து நன் றாக ஓடிக் கொண்டிருக்கிறது. மலை யாளத்து மயிலு நான்.

கே:— கவர்ச்சியாக நடிக்கவே மாட்டீர்களா? என ஏங்கிக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?

ப:— நான் இப்பொழுதும் கவர்ச்சியாகத்தான் நடித்துக் கொண்டிருக்கிறேன். சேலை கட்டினால் கவர்ச்சியில்லை என்று யார் சொன்னது? இன்னும் சொல்லப் போனால் கவுனை விட கவர்ச்சியானது சேலைதான்.

கே:— 6 வருடங்கள் கழித்துத்தான் காதல், கல்யாணம் எல்லாம் என்று சொன்னீர்கள். உங்கள் திருமணம் காதல் திருமணமாகத்தான் இருக்குமா?

ப:— நிச்சயமாகச் சொல்ல முடியாது. உண்மையில் மனந்திறந்து கூறுகிறேன். நான் இரகசியமாக திருமணம் செய்து கொள்ளமாட்டேன். ஆனால் இப்போது காதல் கத்தரிக்காய் என்று கதைகட்டாதீர்கள். நான் சாதிக்க வேண்டியவைகள் நிறைய இருக்கிறது. நல்ல பெயர் சொல்லும் வேடங்களில் நடிக்க வேண்டும்.

—ஷாம்

## "கதை வேண்டும்!" ஜோதிகா பிடிவாதம்

''புதுமுக நடிகர்களுடனும் நடிக்கத் தயார். ஆனால் கதை என்னைச் சுற்றியிருக்க வேண்டும்'' இதுதான் ஜோதிகா வெளியிட்டுள்ள ஸ்டேட்மென்ட். இதைக் கேட்ட சில தயாரிப்பாளர்கள் ''கதையிருந்தால் இப்போது அவர் வந்து போவது போல் கவர்ச்சிப் பொம்மையாக வந்து போக முடியாது'' என்று கூறியிருக்கிறார்கள்.



ஜோதிகா
படம்—'பூவெல்லாம் உன் வாசம்'



கஸ்தூரி, கௌசல்யா, வினிதா

## விஜயகாந்த் அங்கலாய்ப்பு

'நரசிம்மா' படத்திற்கு இஷா கோபிகரை ஒப்பந்தம் செய்தவர் விஜயகாந்த். அவரின் மனைவி மறுத்த போதும், வாய்ப்பில்லாது மும்பையில் சுற்றிக் கொண்டிருந்த இஷாவை பிடிவாதமாக சென்னைக்கு கொண்டு வந்து 'நரசிம்மா' நாயகியாக்கினார்.

இப்போது படமும் வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது. வழக்கமான விஜயகாந்த் படம் தான் என் றாலும் இஷா நடிப்பு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இதனால் கொதித்துப் போயுள்ளாராம் விஜயகாந்த். பார்ப்பதற்கு லட்சணமாக இருக்கிறார். எப்படியாவது நடிப்பைச் சொல்லிக் கொடுத்து நடிக்க வைத்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் இப்படியாகி விட்டது. பேசாமல் தமிழ் நடிகைகளை நடிக்க வைத்திருக்கலாம் என்று தனக்கு நெருங்கியவர்களிடம் அங்கலாய்த்து வருகிறாராம்.



குஷ்பூ, விஜயகாந்த்

## வேண்டாம் முகம் சுளிப்பு விந்தியா தெனாவல்!

குடும்பப்பாங்கான கதாநாயகியாக அறிமுகமாகி ஒற்றைப் பாடலுக்கு ஆடும் அளவுக்குப் போய்விட்டவர் விந்தியா.

இடையில் இரண்டு கதாநாயகிகளுள் ஒருவராகவும் நடித்துவருகிறார். 'என் புருஷன் குழந்தை மாதிரி' படத்தில் விந்தியா தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தி நடித்திருந்தாலும் பெயர் கிடைத்ததென்னமோ இன்னொரு கதாநாயகியாக நடித்த தேவயானிக்கே.

தாராளமாகத் திறமை காட்டியிருந்தும் கூட அதிக படங்களில் நடிக்காமைக்கு காரணம் கேட்டால், ''முதல் படம் எடுபடாததற்கு கிளாமர் இல்லாதது தான் காரணம் என்று நினைத்தேன். அதனால்தான் அடுத்து வரும் படங்களில் கவர்ச்சியில் கொஞ்சம் தாராளமாக நடித்தேன். என்னால் இவ்வளவுதான் செய்ய முடியும். ரசிகர்களின் முகச் சுளிப்புக்கு இடம் வைக்கக் கூடாது'' என்று கோபத்துடன் கூறுகிறார் விந்தியா.



## 'பவன்' நடிகரின் மறுபக்கம்

## ஒரு ரசிகை மனைவியானபோது...!

சினிமா நட்சத்திரங்கள் சிலரின் சொந்த வாழ்விலும் சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெற்று அடடா! திரைக்கதை போலவே இருக்கிறதே என்று சொல்ல வைத்துவிடுகிறது.

அப்படியொரு கதைதான் இதுவும். 'சிரஞ்சீவி' தெலுங்கு சூப்பர் ஸ்டார். இவரின் படங்கள் அவ்வப்போது தமிழிலும் தலை காட்டுகிறது. அதனால் தமிழ் ரசிகர்களுக்கு பரிச்சயமானவர். இவருடைய தம்பி பவன் கல்யாண். தெலுங்கில் அண்ணனுக்கு நேர் எதிராக மென்மையான காதல் கதைகளில் நடித்துப் புகழ் பெற்றவர். சில வருடங்களுக்கு முன்னர் படப்பிடிப்பு ஒன்றில் இளம் கல்லூரி மாணவியொருவர் பவன் கல்யாணைச் சந்தித்தார். ரசிகை என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்த ரசிகையைக் கண்ட மாத்திரத்திலேயே பவனின் இதயத்தில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு. உள்ளுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்தது. 'கண்டேன் காதலியை' என்று அவரது மனம் துள்ளிக் குதித்தது. அந்தப் பெண்ணின் விலாசத்தைத் தேடித் தருமாறு துப்பறியும் நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டார். அடுத்த நாளே விலாசம் கிடைத்தது. அந்தப் பெண்ணுடைய குடும்பம் ஆசாரமானது. வயது பதினெட்டு. வீடு வந்ததும் தனது அண்ணனிடம் காதலைத் தெரிவித்தார் பவன் கல்யாண். அண்ணனும் சம்மதம் தெரிவித்தார். சில நாட்களின் பின்னர் சிரஞ்சீவி குடும்பத்தினர் குறிப்பிட்ட கல்லூரி மாணவியின் வீட்டிற்கு வந்து பெண் கேட்டனர்.

அவர்களுக்கோ இன்ப அதிர்ச்சி. முதலில் யோசித்தாலும் ஒரு மாத கால அவகாசத்தின் பின்னர் தேடி வந்த அதிஷ்டத்தை ஏற்றுக் கொண்டனர். பிரபல நடிகர் ஒருவரை மணந்ததில் அந்தக் கல்லூரிப் பெண்ணோ மகிழ்ச்சியில் திளைத்தார். இரண்டு வருடங்கள் மணவாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. தாம்பத்தியத்தின் அடையாளமாக ஒரு பெண் குழந்தையும் பிறந்தது.

இப்படியிருக்கையில் தான் பவன் கல்யாண் பாதை மாற ஆரம்பித்தார். தன்னுடன் நடிக்கும் நடிகையை ஆழமாகக் காதலிக்க ஆரம்பித்தார். வீட்டுக்குச் செல்வதைத் தவிர்த்தார். திடீரென்று ஒருநாள் தன்மனைவியிடம் ''அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்றார். இந்த விஷயம் அண்ணன் சிரஞ்சீவியின் காதுகளுக்கு எட்டியது. தானே நேரில் சென்று பெண் கேட்டுச் செய்து வைத்த திருமணம் என்பதனால் இந்தப் பிரச்சினையைத் தானே தலையிட்டுத் தீர்த்து வைக்க விரும்பினார் அண்ணன் சிரஞ்சீவி.

தம்பி நடித்துக் கொண்டிருந்த படத்தின் படப்பிடிப்புத் தளத்திற்குச் சென்று 'வில்லன்'களைப் பந்தாடுவது போல தம்பியை இரத்தம் சொட்டச் சொட்ட அடித்துவிட்டாராம்.

விஷயம் இப்போது ரசிகர்களுக்கும் அம்பலமாகியிருக்கிறது.

# சாக்ஷி சர்ச்சைக்குரியவரா?



அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்கிக் கொள்பவர் சாக்ஷி. கால்ஷீட் குளறுபடி, சொன்ன திகதிகளில் படப்பிடிப்பில் கலந்து கொள்ளாமை என்ற வழக்கமான நடிகைகளுக்கே உரிய குறை பாடுகளுடன் தனக்காகத் தங்கையை ஷூட்டிங்கிற்கு அனுப்பிய ஆள் மாறாட்டக் கதையும் சேர்ந்து கொண்டதால், சாக்ஷியை சர்ச்சைக்குரியவர் என்று நினைக்க ஆரம்பித்து விட்டனராம். ஆனால் வியப்புக்குரிய உண்மை என்னவென்றால் காக்ஷியின் முன்னேற்றத்தில் பொறாமை கொண்ட ஒரு

சிலர் செய்யும் மறைமுக சதிகள்தான் சாக்ஷியைப் பற்றிய சர்ச்சைகளாம்.

## இனி இவர்கள்....!

பி.எல்.தேனப்பனின் தயாரிப்பில் கமல்ஹாசன் நடிக்கும் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குகிறார். இதில் இரட்டை வேடங்களில் கமல்ஹாசன் நடிக்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைக்கிறார். நாயகியாக நடிப்பதற்கு ஐஸ்வர்யாராயைக் கேட்டுள்ளனர்.

* * *

'மனம் விரும்புதே உன்னை' படத்தை இயக்கிய சிவச்சந்திரன் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்கும் படத்திற்கு 'ஜோக்கர்' என்று பெயரிட்டுள்ளார்.

* * *

'சிட்டிசன்' படத்தின் இயக்குநருக்கு ஒரு தெலுங்குப் படமொன்றை இயக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பெரும்தொகையை அட்வான்ஸாகப் பெற்றுள்ளார்.

## சுவாசத்திற்கும் போட்டி!

தமிழ்த் திரையுலகில் 'சுவாசத்திற்கும்' போட்டி நிலவ ஆரம்பித்துள்ளது. குஞ்சுமோன் மகனை நடிக்க வைத்து 'சுவாசத்தைத்' தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

பல சின்னத்திரைத் தொடர்களைத் தந்த குட்டி பத்மினியும் 'சுவாசத்தை' தலைப்பாகக் கொண்டு ஒரு படத்தைத் தயாரிக்கிறார்.

படத்துக்கு 'காதலே சுவாசம்' என்று பெயரிடப் பட்டுள்ளது.



## கவர்ச்சிக்கு எல்லை! மும்தாஜிற்கு இல்லை!!



கிறங்கடிக்கும் கவர்ச்சியினால் தமிழ்த் திரையுலகை உலுக்கிக் கொண்டிருப்பவர் மும்தாஜ். 'மும்தாஜ்' படத்தில் இவர் அடிதடியில் இறங்கிவிட்டார் என்று பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தன. இந்தச் செய்தி மும்தாஜை கவர்ச்சி நாயகியாக ஒப்பந்தம் செய்ய நினைத் திருந்த தயாரிப்பாளர்களை மிகவும் பாதித்து விட்டதாம். பழைய நினைப்பில் தாங்கள் ஏதும் வாலாட்டப்போக, மும்தாஜ் படப் பிடிப்பில் பழகிய கராட்டிபயிற்சிகளை பயன்படுத்தி விட்டால்,என்ன செய்வது? இதனால் வேறுகவர்ச்சி நடிகைகளைத் தேடி ஓடுகின்றனராம். இப்போது மும்தாஜ் ''நான் கதா நாயகியாக நடித்தாலும் கவர்ச்சி நடிகைதான். எனது தாராளமயக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை'' என்று கூறியிருக்கிறார்.

## அண்ணியாகிறார் அபிராமி



மலையாளத் திரையுலகிலிருந்து தமிழ்த் திரையுலகிற்கு வந்து மளமள வென்று முன்னேறிக் கொண்டிருக்கிறார் அபிராமி. இவருக்குப் போட்டியாக இருந்த திவ்யா உன்னி கிசுகிசுக்களில் சிக்கித் திணறிக் கொண்டிருக்க, அபிராமியோ நல்ல பாத்திரங்களில் நடித்து அசத்திக் கொண்டிருக்கிறார். 'சமுத்திரம்' படத்தில் சரத்குமாரின் மனைவியாகவும் முரளி, மனோஜிற்கு அண்ணியாகவும் நடிக்கிறார்.

## சகோதரிகள் அமைக்கும் காதல்.Com

அக்காமாரைப் பின்பற்றி தமிழ் சினிமாவில் அடி எடுத்து வைத்தவர்கள் மோனலும் ஜோதிகாவும்.மோனலின் அக்கா சிம்ரன் தனது வருங் காலக் கணவர் ராஜு சுந்தரம் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு வளைய வந்து கொண்டிருக்கிறார்.

ஜோதிகாவின் அக்கா நக்மாவோ பல கிசுகிசுக்களில் சிக்குப்பட்டு இப்போது கங்குலியிடம் தஞ்சமடைந்திருக்கிறார்.

அக்காமார் வழி இப்படியிருக்க, சகோதரிகளான தங்கைமாரும் தாங்களும் சளைத்தவர்களல்ல, என்று நிரூபித்து வருகிறார்கள்.

சிம்ரனின் சகோதரி மோனல் கோடம்பாக்கத்தின் புதிய இளமை வரவு. 'சிம்ரனின் தங்கை' என்று சொன்னால் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு சட்டென்று புரிந்துவிடும். அறிமுகமான 'பார்வை ஒன்றே போதும்' படத்தின் ஹீரோவுடன் சுற்றி வருகிறார். எதற்கும் கவலைப்படாமல் பகிரங்கமாகச் செய்யும் துணிச்சல் மோனலிடம் நிறையவே உண்டு. ஜோதிகாவும் அடிக்கடி மும்பைக்குச் சென்று காதலித்து வருகிறார். நல்ல பெயரெடுத்து வந்தவர் படப்பிடிப்புக்கு டாட்டா காட்டி விட்டு காதலரைச் சந்தித்து வருவதனால் அவரின் காதல் விவகாரம் கசிய ஆரம்பித்திருக்கிறது.

சகோதரிகள் அமைத்துள்ள இந்த காதல் .comஇனால் கலங்கிப் போயிருப்பவர்கள் தயாரிப்பாளர்கள் தான்.



மோனல்

## பத்திப் படத்தில் மந்த்ரா



நடிகை ராதிகாவின் மனேஜர் டி.கண்ணதாசன் ''ஆடி 18'' என்ற பெயரில் புதிய படமொன்றைத் தயாரிக்கிறார். இதில் பிரேமா என்ற பெயரில் பிரபல கன்னட நடிகை அம்மனாக நடிக்கிறார்.

இவருடன் ரிஷி, மும்தாஜ், மந்த்ரா, பேபி ஸ்ருதி, ரவிக்குமார், வாசு விக்ரம், ரியாஸ்கான், டெல்லி கணேஷ் ஆகியோரும் நடிக்கிறார்கள். 12 அடி நீளமுள்ள ராஜ நாகம் ஒன்றும் நடிக்கிறது.

இப்படத்தின் பாடல்களை காளிதாசன்எழுதியுள்ளார். இசை— சங்கர் கணேஷ்.

## திரை மறைவில்



''அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுன்னு நினைச்சேன். இப்படி பண்ணிடுச்சே'' இப்படி ஒளிமயமான நடிகையைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறார் அழுல் பேபியான 'பாஸ்' நடிகர். கமலின் படத்தில் 'பாஸ்' நடிகருக்கு ஜோடியாக அம்மணி நடிக்க மறுத்ததுதான் நடிகருக்குக் கோபமாம்.

**

'ரன்' நடிகை இமேஜைப் பற்றிக் கவலைப்படாமல் தெலுங்கில் கண்டபடி கவர்ச்சியாக நடித்து வருகிறார். காதலர் கண்டிஷன் போட்டும் அம்மணி அதைக் காதில் போட்டுக் கொள்ள வில்லையாம்.

முதலில் உழைப்பு அதற்குப் பின்னர்தான் காதல் என்று தத்துவம் பேச ஆரம் பித்து விட்டாராம் காதலரோ என்ன செய்வது? என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டி ருக்க 'ரன்' நடிகை தனது அடுத்த கட்ட நடவடிக்கையாக கடைசித் தங்கையை களத்தில் இறக்க முடிவு செய்துள்ளாராம். தம்பியும் நடிப்பதற்கு விருப்பம் தெரிவித் துள்ளாராம். 'ரன்' நடிகை குடும்ப சகிதம் கலைச் சேவைக்குத் தயாராகி விட்டார்.

**

''பாழாய்ப்போன காதலில் சிக்காது இருந்தால் இந்நேரம் ஏழெட்டுப் படங்களை யாவதுமுடித்திருப்பேன்'' என்று கூறி வருகிறார் 'வல்லி' நடிகை.

**

நடன நடிகர் பத்திரிகையாளர்களைக் கண்டால் காத தூரம் ஓடுகிறார். ஏன் தெரியுமா? நடிகரைக் கண்டு விட்டால் போதும் நிருபர்கள் 'பிஷ்' நடிகை எங்கே ஸார்? என்று கேட்கிறார்களாம்.

**

'அழகி' படத்தை எடுத்து வருகின்றார் பட்சமான ஒளிப்பதிவாளர். இதில் கதாநாயகியாக நடிப்பவர் இந்தி நடிகையான கறுப்பழகி.

இவருடன் புதிதாகக்கல்யாணமான நடிகையும் நடிக்கிறார். படவிளம்பரங் களில் கறுப்பழகிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாம். இதனைக்கண்ட நடிகையின் கணவர் '' நீ கவலைப் படாதே நான் எடுக்கும் புதிய படத்தில் உன்னை அட்ட காசமாகப்போட்டு விளம்பரப்படுத்தி விடுகிறேன்'' என்று மனைவியை ஆறுதல்படுத்தி யுள்ளாராம்.

**

காதல்'வேதம்'பாடிக்கொண்டிருக்கும் வில்வித்தை நடிகர் அடுத்து புத்தரின் போதனைகளைக்கேட்டு மனம் திருந்திய அசோக அரசனின் பெயர் கொண்ட படத்தில் நடிக்கப் போகிறார். கதாநாயகியாக தனக்கு விருப்பமானவரை சிபாரிசு செய்தாராம் நடிகர். அன்பை ஆலயமாகக்கொண்ட பெயரில் படங்களைத்தயாரித்து வரும் தயாரிப்பாளர் ஏற்கனவே வில்வித்தை நடிகரின் தில்லு முல்லுகளை அறிந்திருந்ததனால், '' தம்பி படத்தின் கதாநாயகன் நீங்கள் தான். அதற்குரிய வேலைகளை மட்டும் பார்த்தால் போதும். மற்ற வேலைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறி நடிகருக்கு ஆரம்பத்திலேயே கட்டுப்பாடு போட்டு விட்டாராம்.

**

பரபரப்பாக வெளிவந்த சிட்டிசனின் நிலையைக்கண்டு கலங்கிப் போயுள்ளவர்களில் ஆளவந்தாரும் ஒருவராம். புதிய முயற்சிகளை எடுத்தவுடன் மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்று சமாதானம் வேறு கூறினாராம்.

**இது வரை.....**

றொபேட்டும் வில்லியமும் தடயவேட்டைகளில் தீவிரமாக இறங்குகிறார்கள். அனற்றுடன் தொடர்புகொண்டு துப்பு ஏதாவது கிடைக்கிறதா என்று முயற்சிக்கிறார்கள். வழக்கு ஒன்றில் வாதாடுவதற்காக கோர்ட்டுக்குச் செல்லவேண்டிய சுமரா களைப்பு மிகுதியால் உறங்கிப்போகிறாள். தாமதமாகப் புறப்படும் அவளை பசியும் அலுப்பும் வாட்டுகின்றன.

இனி.....

கோர்ட் வாசலை அவள் எட்டிய போது நேரம் ஒன்பது மணி. கோர்ட் கூடி விட்டது. தனது அலுவலகத்திற்குக் கூடப் போகாமல் நேரே அங்கே வந்திருந்தாள். அவளது மண்டையில் ஏதும் ஏறும் நிலைமை இல்லை. புயல்போலப் புகுந்த அவளது வரவில் பல முகங்கள் மலர்ந்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை.

கர்ச்சிக்கத் தயாராக வந்த அரச சட்டத் தரணிக்கு இவளைக் காணவில்லை என்கிற ஏக்கம் பிறந்திருந்தது. இவள் இல்லாவிட்டால் இன்று அவன் பசிக்குத் தீனி கிடைக்காதே. அவள் என்றைக்குமே இவ்வாறு பிந்தியது கிடையாது. எனவே தான் அவன் சற்று யோசனையில் ஆழ்ந்திருந்தான். தனிப்பட்ட பிரச்சியையில் அவளது நிலைமையையும் அவன் அறிந்திருந்தான்.

சுமராவைக் கண்டதும் பிரகாசமாக மலர்ந்த முதல் முகம் அவனுடையது தான் என்றால் அது உண்மை தான். ஆனால் வழமைபோல சிங்காரமாக நுழையாமல் அடித்துப் போட்ட பாம்பினைப்போல தலையைத் தொங்கப் போட்டபடி அவள் நுழைந்தது சப்பென்றுதான் இருந்தது. 'இன்றைக்கு இவள் வாதாடும் மனநிலையில் இல்லை. சூடாக விவாதிக்காமல் கேஸில் வெல்வது ஒன்றும் பிரமாதம் இல்லையே!' எனக் கலங்கினான் அவன்.

சுமராவின் கோர்ட் ஆடைகள் மிகவும் எடுப்பாக இருந்தாலும் ஆள்பாதி ஆடை பாதி என்கிற விடயம் பொய்த்துப் புஸ்வாணமாகியிருந்தது. அவள் நிமிர்ந்து சபையைப் பார்த்தபோது அவள் முகத்தில் உற்சாகம் தென்படவில்லை. விழிகள் ஒளி இழந்து காணப்பட்டன.

அதுவரை குற்றவாளிக் கூண்டில் சோர்வுடன் இருந்த மைக்கேல் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். நம்பிக்கை ஒளி அவன் விழிகளில் தென்படத் தொடங்கியது. சுமராவின் மன நிலையையோ சிக்கல்களையோ சிறையில் இருந்த அவன் அறிந்திருக்க நியாயம் இல்லை. வழக்கிற்கு

## சுடர் ஒளி தொடர் கதை

இரண்டொரு நாட்கள் முன்னதாக அவனைச் சிறையில் சந்திக்க அவள் வந்திருக்க வேண்டும். அதில் அவள் தவறியதும், இன்று வரப் பிந்தியதும் மைக்கேலின் ஏக்கத்தை வளர்த்து விட்டிருந்தன.

அவள் நிமிர்ந்து நீதிபதியின் முகத்தைப் பார்க்கத் தயங்கினாள். தாமதித்து வந்து நீதிமன்றத்தை அவமதித்தவள் ஆகி நிற்கிறாள் அல்லவா? நீதிபதி தனது ஆசனத்துக்கு வரும்போது அனைவரும் மௌனமாக எழுந்து நிற்பார்களே. அவர் அமர்ந்த பின்னர்தானே மற்றையவர்கள் அமருகிறார்கள். அதற்குப் பிறகு சபைக்குள் நுழைவது பண்பு ஆகாதுதான்.

ஆனாலும் தனது கட்சிக்காரருக்காக வாதாட வேண்டிய இக்கட்டில் அவள் வந்திருக்கிறாள். தனது வாதங்கள் எடுபட்டால் கூட இந்தக் கௌரவப் பிரச்சினை நீதிபதியை உறுத்திக் கொண்டுதான் இருக்கும் என்பது திண்ணம். இதனால் தனது கட்சிக்காரர் பாதிக்கப்படலாமோ என்கிற ஏக்கம் வலுத்தது.

கோர்ட்டில் அனைவரின் விழிகளும் தன்மீது குத்தி நிற்கின்றன என்கின்ற குற்ற உணர்வில் நெளிந்தாள் அவள். அத்தோடு அவசரத்தில் தான் அணிந்துவந்த ஆடைகளில் என்ன குறையோ ஏதோ என்றெல்லாம் இப்போதுதான் ஏக்கம் வலுக்கிறது.

ஜூரர்களின் பக்கம் அவள் பார்வை திரும்பியது. அங்கே

**இதழ் — 11**



# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

அவளுக்குத் தெரிந்த வர்கள் இருவர் இருந்தனர். அந்த கல்லூரி அதிபரும், வங்கி முகாமையாளரும்தான் அவர்கள். ஏனையவர்கள் புதியவர்களாக இருந்தனர். எனவே அங்கும் அனுதாபம் கிடைக்காது. சட்டத்தின் ஓட்டைகளை அவள் அறிவாள். நீதி என்பது எப்படிக் கிடைக்கும் என்பதும் உலகறிந்த உண்மை.

அந்த ஜூரர்களும் தனது தாமதம் பற்றித் தப்பான கணிப்பையே பெற்றிருப்பார்கள் எனக் கலங்கினாள். பார்வையாளர் பகுதியில் ஜெபன் இருந்தான். அவனைக் கண்டதும் பஸ் கொள்ளைச் சம்பவம் மனக் கண் முன் ஓடத் தொடங்கியது. தொடர்ந்து ருஷனின் நினைவுகள் இதயத்தைப் பிசைந்தன. அடிவயிற்றை ஒரு புதிய வலி கிள்ளியது. கையைக் கொடுத்து நீவிவிட கோர்ட் றூம் இடம் இல்லை. எனவே தவித்தாள். நெளிந்தாள். அவ்வளவே இயலும்.

றொபேட்டும் வில்லியமும் கூட கண்ணில்பட்டார்கள். அவர்களும் மைக்கேலுக்கு எதிரானவர்கள் என்பது அவளுக்குச் சங்கடமாக இருந்தது. தொழிலில் இது எல்லாம் சகஜம் எனத் தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

விவாதம் சூடாகவே ஆரம்பித்து விட்டது. அந்தக் கொலையை மைக்கேல்தான் செய்தான் என்கிற வாதம் ஆணித்தரமானதுதான். அதைச் சுலபமாக நிரூபிக்க அரச சட்டத்தரணி றோமன் வாதாடிவிட்டான். அவனது வாதம் முடிவுறும் தறுவாயில் "யார் இந்த மைக்கேல்?" என்ற கேள் வியை அவன் தொடுத் தான்.

பதிலையும் அவனே சொல்ல ஆரம்பித்தான். அரச சட்டத்தரணி அல்லவா? அதிகாரங்கள் அதிகம்.

"இவன் — இந்த மைக்கேல் பாடசாலைக் காலத்துக் கிரிமினல். இப்போது நாற்பத்தைந்தைத் தாண்டவிருக்கும் இவன், பதினைந்தில் புரிந்த பாடசாலைக் காலப் பாலியல் வல்லுறவு இன்றும் பேசப்படுகிறது. அன்றுமுதல் அடுக்கடுக்காக எத்தனை விதவிதமான குற்றச்...."

"ஒப்ஜெக்ஷன் யுவர் ஆனர்...!" தன்னை மறந்து கத்தினாள் சுமரா. "இது வரலாறு பாடும் இடம் அல்ல. இந்த வழக்கில் பழங்கதை தேவையில்லை! அவை எல்லாம் தண்டனை நிறைவேற்றப்பட்டு முடிந்த சமாச்சாரங்கள்."

அவளது கத்தல் சுவரில் பட்டு எதிரொலித்தது. ஆளுயர ரத்தை விட பலமடங்கு உயரமான சுவர்களால் சூழப்பட்ட மண்டபம் அது. தலைக்கு மேல் அத்தனை உயரமும் ஏனோ? என நினைக்கத் தோன்றும் அந்த அமைப் பின் மகத்துவம் சுமராவின் கத்தலின் எதிரொலிப்பில் புரிந்தது.

எங்கும் நிசப்தம். அனைவரும் ஒருகணம் சுமராவைப் பார்த்துக் கொண்டனர். மறுகணம் அனைவர் பார்வையும் நீதியரசரிடம் திரும்பியது. அவர் என்ன சொல்லப் போகிறார்?

சுமராவும் அப்பொழுதுதான் துணிந்தவள்போல் அவர் பக்கம் திரும்பினாள். அவர் முகத்தில் கர்ணகடூரம் நிலவியது. எள்ளும் கொள்ளும் வெடித்தமாதிரி இருந்தது.

"டூ மச்! என்ன கத்தல் இது? முதலில் சுமரா இதற்கு மன்னிப்புக் கேட்டாக வேண்டும்!" என்றார் நீதிபதி. நிலைமையையும் தவறையும் உணர்ந்து அவள் பணிவாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். முதற் கோணல்; தலைகுனிவு. ஆனால் வேறு வழி இல்லை.

அவளைக் கோர்ட்டை விட்டு உடனடியாக வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தாக வேண்டும். ஆனால் அந்த வழக்கின் முக்கியத்துவம் கருதி அவ்வாறு செய்யவில்லை என்றார் நீதிபதி. அத்தோடு இந்த விவகாரம் வழக்கு முடிந்தபின் கவனத்திற்கு எடுக்கப்படும் என்றார். மேலும் இது வில்லியமுக்குத் தலைகுனிவாகவே இருந்தது. சுமராவுக்கு அடி பலமாக விழுந்தால் அவன்பாடும் திண்டாட்டம்தானே!

"அரச சட்டத்தரணியின் வாதங்கள் குறிப்பிட்ட வழக்கின் எல்லையை விட்டு வெளியே போகக் கூடாது" என்றார் நீதிபதி. அந்த அறிவிப்புச் சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் வெளியாகியதில் றோமனுக்கோ அதிர்ச்சி. காதுகளை நம்ப இயலவில்லை மீண்டும் எப்படி, எவரிடம் உறுதிசெய்து கொள்வது?

சுமராவும் நீதிபதியின் அறிவிப்பில் திகைத்துத்தான் போனாள். 'சரிவர வாதாடினால் என்னதான் இருந்தாலும் தன் கட்சிக்காரருக்கு நியாயம் கிடைக்கும்' என்கின்ற நம்பிக்கை இப்போது சுமராவிடம் பிறந்தது. விரக்தி சற்று விடை பெற்றது. ஆனால் அடிவயிற்றில் வலி பிராணனை வாங்கியது.

வில்லியம் சற்று நெஞ்சை நிமிர்த்தி இருந்தது றொபேட்டிற்கு எரிச்சலாக இருந்தது. "கட்சி மாறுகிறானா ராஸ்கல். பெண்டாட்டி தாசன்" என்றெல்லாம் மனதுக்குள் திட்டிக்கொண்டான்.

'வாழ்க்கையில் முதல் அடி இது' என நினைத்துக் கொண்டான் றோமன். அவனது முகம் இறுகியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இந்த இளம் பெண்ணால் அந்த முதிர்ந்த சட்டத் தரணிக்கு இப்படியோர் அடியா?

எலியைப் பார்க்கும் பூனையைப்போல சுமராவை விழுங்கத் தயார் என்றவாறு பார்த்துக் கொண்டிருந்தான் றோமன். அவனது அரசியல் செல்வாக்கும் வாதிடும் திறனும் கொண்டிருக்கும் வலிமை எதனையும் சாதிக்கும் என்பதுதான் உண்மை. வழக்கில் எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அடுத்தவர்களின் திறமை கணிக்கப்படலாம்.

வழமையாகவே சவாலான கேஸ்களை கையாளும் சுமரா இன்று ஒரு புதிய சாதனையை எட்டித்தான் விட்டாள் என பலரும் நினைத்தார்கள். தட்டிக் கேட்க ஆளில்லாததால் தான் வாதிடுவதெல்லாம் சட்டம் என நினைக்கும் றோமனுக்கு சுமராவின் கட்டுக்கு மீறிய கத்தல் தந்த அடி கொஞ்ச நஞ்சமல்ல.

அவனது வாதங்கள் இனி அவளைப் பழிவாங்குபவையாகவே அமையும். அதில் தாக்குப் பிடிக்க இயலாமல் தலைகுனியப் போகும் அவளது நிலைமை பரிதாபம்.

மைக்கேலின் தெம்பு மேலும் ஒருபடி உச்சம் கண்டிருந்தது. விசாரணைகள் மீண்டும் தொடர்ந்தன. சரமாரியாக சுமரா கேட்ட கேள்விகள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. கோர்ட் படி ஏறாமல் வீட்டில் வைத்து நோட்டரி வேலை பார்க்கத்தான் அவள் லாயக்கு என நினைத்தவர்களுக்கு அவளது இளமைத் துடிப்புடனான குறுக்குவிசாரணைக் கேள்விகள் புதினமாகத்தான் இருந்தன.

அனைவரும் வாய் பிளந்து அவளையே பார்த்தபடி இருந்தனர். அன்றைய கதாநாயகியாக அவள் அங்கே நின்றுகொண்டிருந்தாள். சற்றுத் திணறித்தான் போனான் றோமன். அவனிடம் சொல்லடிபட்டு காலா காலமாக நொந்திருந்த சட்டவாதிகள் பலருக்கும் இன்று கொஞ்சம் திருப்தி; உள்ளூர சந்தோஷம்.

சுமரா கேட்ட ஆதாரங்கள் இதோ வருகின்றன எனக் காக்க வைத்த றோமனால் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. யாரோ அவனைக் காலைவாரி இருந்தார்கள். அவன் தவியாய்த் தவித்தான். வாசலை அடிக்கடி பார்த்துக்கொண்டான். நேரமாகியும் அவன் எதிர்பார்த்த எவரும் வரவில்லை.

வாதங்கள் முற்றுப்பெற்ற நிலையில் ஜூரர்கள் ஆலோசனையில் கலந்தனர். நீதிபதி தனது தீர்ப்பைச் சொல்லமுன்னர் வழக்கை அடுத்த தவணைக்கு ஒத்தி வைப்பாரா? என் கின்ற கேள்வி எழுந்தது. ஜூரர்களின் அறிக்கையை வாசித்துக்கொண்டிருந்த நீதிபதி எதையோ சொல்ல வாயெடுக்கிறார். அக் கணம் சுமராவின் அலறல் அந்த ஹோலைக் கிழிக்கிறது. வேதனை தாங்காமல் அடி வயிற்றைப் பொத்தியபடி அலறியவள் தடாலென மயங்கிச் சாய்ந்தாள்.

— தொடரும்

---

# வாசகர் இதயம் பேசுகிறது



பத்திரிகையின் முகமே (முகப்பு) — அதன் உள்ள(டக்க)த்தைக் காட்டுகிறதே. விளையாட்டுச் செய்தி உட்பட அனைத்து அம்சங்களும் அருமை. ஆகமொத்தத்தில் சுடர் இடர்களை மாற்றட்டும்! "ஒளி" சூரிய ஒளியாகட்டும்!

ஜே. எம். ரி. றொட்றிகோ,
கொக்குவில் கிழக்கு

தரமான ஆக்கங்களைத் தெவிட்டாத வகையில் அள்ளி வழங்கும் 'சுடர் ஒளி'யே! வடபுலத் தகவல்களை வாரி வழங்குவதில் உனக்கு நிகர் யாருமில்லை. வலிகாமத்தானுக்கு நன்றிகள் பற்பல. பித்தன் பதில்களுக்கு சபாஷ் போட்டுத்தான் ஆகவேண்டும்.

எஸ்.டி., வவுனியா.

வாரந்தோறும் புதுப் பொலிவுடன் எம் கைகளில் தவழும் 'சுடர் ஒளி'யே. நீ தாங்கி வரும் அரசியல் அம்பலம், தேரடி அரட்டை, ஆந்தையாரின் க்ரைம் டயறி என்பன மிகப்பிரமாதம். "போரா சமாதானமா" எனும் தலைப்பில் வெளி வந்த கட்டுரை அரசின் நிலைப்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

எஸ்.டிலுக்ஷன், கொழும்பு — 06.

உனது பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். உன் சேவை பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துக்கள். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் மக்களை யோசிக்க வைக்கின்றன. குறிப்பாக மலையகக் கண்ணோட்டம், வடபுலத்தில், காண்டீபம், பக்கத்து வீடு என அத்தனை அம்சங்களும் தாங்கி வரும் சுடருக்கு எனது நன்றி. உனது சேவை தொடர வாழ்த்துக்கள்.

இ.கோபு, இணுவையூர்.

வர வரச் சுடர் ஒளி பரபரப்பான செய்திகளுடன் விறுவிறுப்பாக வெளி வருகிறது. வாசகர்கள் வரவேற்பை பாசமுடன் பெற்றுவிட்டதென்பதை ஆசையுடன் அறிவிக்கும் வாசகன் இவன்.

அ.அரசரெத்தினம், சேனையூர் — 06.

'சுடர் ஒளியை' தொடர்ந்து வாசித்துக் கொண்டுவருகிறேன். தரமாக உள்ளது. தொடர்ந்தும் இது போன்று தரமான விடயங்களைத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

ரிசாட், உக்குவளை.

சுடர் விட்டு பிரகாசிக்கும் சுடர் ஒளியே நீ வாரம் ஒருமுறை சுமந்து வரும் எல்லா அம்சங்களும் சுவையானது.

டி.நிக்சன், புத்தூர்.

இனிய சுடர் ஒளியே உனது ஆக்கங்கள் பிரமாதம்! உன்னை ஒவ்வொரு வாரமும் காணும் பொழுது எனது உள்ளம் பூரிப்படைகிறது.

சி.லவன், புன்னாலைக் கட்டுவன்.

சுடர் ஒளியே உன்னில் பிரசுரமாகும் சிறுகதை, தொடர்கதை, ஸ்போர்ட்ஸ், பெண்கள் பகுதிகள் பிரமாதமாக உள்ளன. எனது பாராட்டுதல்கள்!

அஹமட், ஏறாவூர்.

நடிப்புலக மேதை சிவாஜி கணேசனின் படத்தை அட்டையில் பிரசுரித்து, அஞ்சலி செய்த சுடர் ஒளியே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விடயங்களை வாசகர்களுக்கு அள்ளித் தருவதில் முன்னிற்கும் உன் பணி வளரட்டும்!

ம.அருந்ததியன், மீராவோடை.

சுடர் ஒளி பல்வேறுபட்ட எழுத்தாளர்களது எழுத்துக்கு உந்து சக்தியாகி களம் அமைத்துக் கொடுக்கிறது. நீண்டதொரு நம்பிக்கையின் ஒளி நட்சத்திரமே வாழ்க நீ.

எம்.சுயர்சன், கோண்டாவில்.

சுடர் ஒளியில் மாணவர்களுக்கெனத் தனிப்பக்கம் ஒதுக்கி 'இளஞ்சுடர்' எனப் பெயரிட்டு வாரா வாரம் மாணவர்களின் அறிவுப் பசி போக்குவதற்கு நன்றி.

அ.சஞ்சீவ், நெல்லியடி.

சுடர் ஒளி பெண்கள் பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் வாழ்க்கையை இலகுவாகக் கொண்டு செல்லத் துணை புரிகிறது. நன்றி!

ம.செண்பகவல்லி, நுகேகொடை.

பிரபாகரனின் தொலைபேசியை ஒட்டுக் கேட்க நவீன கருவி வருவிக்கப்பட உள்ளதாமே! சுடச் சுடத் தகவல்கள் தரும் சுடர் ஒளிக்கு நன்றிகள்!

எஸ்.மதுராந்தகி, மாங்குளம்.

மருத்துவ ஆலோசனைப் பகுதியில் அளிக்கப்படும் பதில்கள் நோயற்றுப் பாதுகாப்பாக இருக்க உதவுகிறது. கலை நிகழ்வு களை உடனுக்குடன் வெளிப்படுத்தும் கலை அமுதம், கலைப்பிரியர்களுக்கு சிறந்த வரப்பிரசாதமாக உள்ளது.

பா.நவேந்திரன், செட்டிகுளம்.

**சுடர் ஒளி சிறுகதை**

# அடையாளம்

உடுவில் அரவிந்தன்



மாலை வெயில் மஞ்சள் நிறச்சாயத்தை மலை வேம்புகளின் உச்சியிலே தடவிக் கொண்டிருந்த அமைதியான வேளையிலேதான் நான் அவனைக் கண்டேன். பரமேஸ்வரன் கோவிலுக்கு எதிராகவுள்ள வெளியின் ஓரத்தில் கால்களை ஊன்றி நின்ற சீமெந்துக் கட்டிலில் தளர்வாக அமர்ந்திருந்தான்.

அதற்கு முன்னர் அவனைச் சந்தித்திருப்பதற்கான எந்தவிதமான சலனமும் என் நெஞ்சில் எழவில்லை. இவ்வளவு பேர் படிக்கும் இடத்தில் அவனுடைய முகத்தை ஞாபகம் வைத்திருப்பதற்கான சாத்தியங்களும் மிகக் குறைவு.

மெல்ல வந்து ஈரமாக்கிப்போகும் அலையைப்போல அவனைப்பற்றிய நினைவுகள் என்னை அடிக்கடி உரசுவதற்கு அவன் ஏதோ ஒருவகையில் இங்கு பிரபலம் பெற்றிருக்கவேண்டும். இல்லையேல் என்னுடைய நெருங்கிய நண்பனாக இருக்க வேண்டும். இரண்டுமே இல்லை.

இருப்பினும், அவனிடமுள்ள எது என்னை ஈர்த்தது? அவலங்கள் நிரம்பிய இராப்பொழுது அணுகிக்கொண்டிருக்கும் வேளையில் தனிமையாகப் படித்துக் கொண்டிருக்கும் அவனைப்பற்றிய ஆச்சரிய உணர்வுதான் காரணமா? என்பதை அறிய முடியாதபடி வினாவொன்று என்னுள்ளத்தில் எழுந்து நின்றது.

நினைவுகளைப் புறந்தள்ளியபடி நெருங்கினேன். நிமிர்ந்தவன் தன்விழிகளைத் தயக்கமாக என்மீது படரவிட்டான். என்னுடைய சிநேக உணர்வைப் புன்முறுவலாக மாற்றீடு செய்தபடி பக்கத்தில் அமர்ந்தேன்.

சபேசனுடன் அன்று தொடங்கிய அறிமுகம் நட்புறவாக இறுகி, அவன் என்வீட்டுக்குப் படிக்க வருமளவுக்கு நீண்டது.

இவ்வளவுக்கும் நான் இறுதி வருட மாணவன். சபேசன் அப்போதுதான் ஆரம்ப அடி வைத்தவன்.

அவனுடைய குடும்ப நிலைமை என் மனவயலை அடிக்கடி உழுதுபார்க்கும். இழப்புக்கள் நிரம்பிய எங்கள் தேசத்தில் அவனுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் உண்மையில் மிக அதிகம்தான். எண்பத்தேழில் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் தந்தையையும், முன்னேறிப் பாய்ந்த எறிகணையில் தாயையும், செம்மணிப் பக்கமாகத் தம்பியையும் தொலைத்தவன்.

அந்தத் துயரங்களை மனக்குழியில் புதைத்துப் புதைத்து, அழுத்தங்களின் விளைவாக எல்லாவற்றிலுமிருந்தே ஒதுங்கியிருந்தான். அவனிடமிருந்த ஒழுக்கமே என்னை வெகுவாக ஈர்த்ததெனலாம். சபேசனுடன் அளவளாவும்போதெல்லாம் கல்வி தொடர்பான தேடலில் மட்டுமே நாட்டமுள்ளவனாகத் தன்னை இனங் காட்டினான். எங்களால் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு எழுச்சி நிகழ்விலும் அவன் பங்குபற்றுவதில்லை. எங்களைச் சூழ்ந்துள்ள நெருக்குதல்களின் போது நாம் பீறிட்டுக் கிளம்பிய சந்தர்ப்பங்களிலும், அவற்றுக்கெதிராகக் குரல் கொடுக்கும்போதும் அவன் வெளியிலேயே தன்னை நிலைநிறுத்திக் கொண்டான்.

நான் இது தொடர்பாக அவனுடன் விவாதிக்கும்போது, எஞ்சிய தங்கைக்காக வாழவேண்டிய அவசியம் பற்றிய வலியுறுத்தல்கள் அவனிடமிருந்து மென்மையாக வெளிப்படும்.

சபேசனுடைய நோக்கமெல்லாம் விரைவாகப் படித்து முடித்து, நல்ல வேலையில் அமர்ந்து நிறைய உழைக்கவேண்டும் என்பதாகவே இருந்தது.

பரந்த பாலை வெளியில் கண்ணுக்கெட்டாத எல்லையில் சிறு புள்ளிபோலத் தெரியும் வேலை வாய்ப்புப் பற்றிய கனவுப் பூக்களெல்லாம் கருகிய நிலையிலேயே நாம் இருக்கிறோம் என்பது அவனுக்குப் புரியாது. அவனுடைய எதிர்பார்ப்பைக் குலைக்க விரும்பாமல் அவன் கூறுவதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன்.

இன்று மாலை, விளங்காத சில வினாக்களுக்கான விடைகளைத் தேடி என்னிடம் வந்திருந்தான் சபேசன்.

வழக்கம்போல சைக்கிளை மாமரத்துடன் சரித்தவன், தயக்கமான பார்வையை நகர்த்தினான். முன் விறாந்தையில் நின்ற என்னுடைய சைக்கிளைப் பார்த்ததும் ஒளிரும் விழிகளுடன் கால்களைப் பெயர்த்தான்.

அவன் உள்ளே ஏறியதும் உற்சாக மூட்டும் நோக்கில் புன்னகையை விரித்தேன். முகத்திலிருந்த இறுக்கத்தைத் தளர்த்தாமல் தன்னுடைய வாயை மட்டும் இலேசாகக் கோணினான்.

'நீ என்ன பாடுபட்டாலும் என்னிடம் சிரிப்பைத் தோற்றுவிக்க முடியாது' என்று சவால் விடுவதைப் போலக் கண்களைக் குறுக்கி என்னை உற்றுப்பார்த்தவன், கையிலேயிருந்த தாளை நீட்டினான்.

சபேசனைப் பார்க்கும் போதெல்லாம் என்னுடைய விழிகள் தன்னிச்சையாக அவனுடைய இடது மணிக்கட்டுப் பகுதியைத் துளைக்கும். எறிகணைச் சிதறலொன்று அங்கு மிக அழுத்தமாகத் தடம் பதித்திருந்தது. இவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டும் அவனுடைய கை துண்டாடப்படாத அதிசயம் பற்றி நான் வியப்படைவதுண்டு.

கையிலிருந்த தாளை ஏறிட்டேன். சபேசன் என்னிடம் வரும்போது நிச்சயமாகத் தூயகணிதம் சார்ந்த வினாவுடன் வருவான் என்பது எனக்குத் தெரியும். திரும்பத் திரும்ப வரைந்தாலும் சரியாக அமையாத ஓவியம் போல, ஏனோ அவனுக்கு அதில் ஒரு திருப்தியின்மை. இவ்வளவுக்கும் நான் ஏதோ தூயகணிதத்தில் கரை கண்டவனில்லை. என்றாலும், சபேசனைவிட மூன்று வருடங்கள் மூத்தவன் என்றவகையிலும், விசேட பாடமாக தூயகணிதத்தைப் படிப்பவன் என்பதாலும் எனக்கு ஓரளவு தெரியும்.

விடையைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். நின்று நிமிர்ந்தபோது, முன்னர் இல்லாத திருப்தி சபேசனுடைய முகத்திலே பரவியதைக் காணமுடிந்தது.

சேற்றில் ஆழப் புதைந்து கிடக்கும் கல்லைப் போலச் சலனமற்றிருக்கும் அவனை மேலே கொண்டுவர எண்ணிக் கதையின் போக்கை மாற்றினேன்.

''சபேசன் வாற மாதம் எனக்கு பைனல் எக்ஸாம். அதோட என்ர கம்பஸ் வாழ்க்கை சரி. இனி இந்தச் சந்தோஷங்கள் திரும்பி வராது'' பேனா மூடியால் காதைக் குடைந்து கொண்டிருந்தவன் விருட்டென்று நிமிர்ந்தான்.

''எனக்கென்னவோ இங்க படிக்கிறது சந்தோஷம் மாதிரித் தெரியேல்லை'' கைலாசபதி அரங்கில் விடுபட்ட காகிதக் கணைபோல அவனுடைய வார்த்தைகள் வெகுவேகமாக வெளிவந்தன.

பேனாவை மூடியினுள்ளே திணித்தவன் மீண்டும் அமைதியாகக் கூறினான்.

''நாங்கள் எங்கட தனித்துவத்தை விட்டு விலத்திப் போறமாதிரி இருக்கு...''

கடதாசிப்பூ முள்ளொன்று செருப்பையும் தாண்டிக் காலில் ஏறியது போலிருந்தது எனக்கு.

''தனித்துவம்...! சபேசன் இவ்வளவு இழப்புக்களைச் சந்திச்ச நீர் எங்களை விட்டுத் தள்ளி நிற்கிறதிலை நியாயம் இருக்கலாம். ஆனால் நியாயப்படுத்திறதுக்கான அடிப்படைச் சிந்தனை உம்மட்ட மாறுபட்டிருக்கு.''

என்னையுமறியாமல் குரலிலே ஒட்டிக்கொண்ட கடுமையை எண்ணி வருந்தினேன். ஏனென்றால், சபேசனின் முகம் சட்டென்று கூம்பிவிட்டது. தளர்ந்த குரலில் மெதுவாகச் சொன்னான்.

''அவங்களோட கொழுவிறது நல்லதில்லை அண்ணை. அதால எங்களுக்குத்தான் நட்டம். நீங்கள் அவங்களோட பிரச்சினைப்பட்டுப் போட்டு ஒளிச்சுத்திரிஞ்சது எனக்குத் தெரியும்.''

''நானாக வலியச்சண்டைக்குப் போகேல்லையே!'' அடுத்து வந்த நிமிடங்களை மௌனப் பறவை விழுங்கியது. அதே வேளை எதிரேயிருந்த என் தங்கையின் அறைக் கதவுத் திரைச் சீலை இலேசாக அசைந்ததையும் நான் அவதானிக்கத் தவறவில்லை. சபேசன் வந்து அமரும் போதெல்லாம் அந்தச் சலனம் ஏற்படுவதுண்டு.

சிலவேளை அது காற்றின் வேலையாகவும் இருக்கலாம்.

சிந்தனை நாடா அறுந்ததை தலையை நிமிர்த்துவதன் மூலம் உணர்த்தியவன் கையிலிருந்த தாள்களை மடித்தான்.

''அண்ணை நீங்கள் என்னிலை இவ்வளவு அக்கறையாக இருக்கிறீங்கள். அதுக்கு நான் கடமைப்பட்டவன். ஆனாலும் உங்களோட ஒத்துழைக்க ஏலாமல் கிடக்கு. என்னை நம்பியிருக்கிற தங்கச்சியை அநாதையாக விட நான் தயாராக இல்லை.''

''எல்லோரும் சேர்ந்துதானே...'' என்னுடைய வார்த்தைகளைச் செவிவழியாக உண்ண விரும்பாதவன் போல எழுந்தான்.

''நான் போட்டுவாறன் அண்ணை'' வெளியேறி இருளில் அமிழ்ந்து போனான்.

மாமரத்தின் தாழ்வான கிளையொன்றில் உறங்கத் தொடங்கியிருந்த பறவைகள் சலனப்பட்டு ஓய்ந்தன.

சபேசனுடைய வருகையால் என்னுள்ளே கிளறி விடப்பட்ட எண்ணங்கள் மழைபட்ட சருகாக மெல்ல மெல்ல அடங்கத் தொடங்கின. எதிர்நோக்கும் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்கள், தொடரும் இரவின் அகோர ஆட்சி என்பவற்றால் ஏற்பட்ட மன நெருடல்களுடன் எழுந்தேன்.

நள்ளிரவுக்குச் சற்று முன்பாகப் பாயிலே சரிந்தேன். இரவின் அமைதியோடுநேரம் நகர்ந்து கொண்டிருந்தது. வழக்கமாகக் கேட்கும் வேட்டு ஒலி யைக் கேட்காவிட்டால் உறக்கம் வராது போலிருக்கவே அந்த ஒலிக்கான எதிர்பார்ப்பில் நான் கிடந்தேன். பாயின் நரம்புகள் என் முதுகைக் குடைந்தன.

இமைப் பறவையின் சிறகுகள் சோர்ந்து தளரும்போது, வெகுதொலைவில் வேட்டுக்கள் ஒலித்து என் உணர்வுகளை உலுப்பின.

ஆரவாரமிட்டவை அடங்கிப்போக, ஒரு சுடலைக் குருவி மட்டும் அவலமாக அழுது கொண்டு போனது.

தொடர்ந்த அமைதியில் இரவு மெல்ல கரைந்தது.

விடியல்.

மன உளைச்சலையும், உடல் அலுப்பையும் ஆற்றுவது போலிருக்கவே உற்சாகமாக எழுந்தேன்.

தடைதாண்டும் ஓட்டத்தில் சின்னக்கம்பி எட்டைக் கடந்து வீதிக்கு வந்தேன்.

செம்மண் தடவிய காய்கறி மூட்டைகள் சந்தைப்பக்கம் நகர, இடையிடையே வெள்ளை உடைகள் வீதியிலே கல கலத்தன. காலைப் பொழுதின் வழக்கமான இனிய தூண்டலால் நெகிழ்ந்த இதயத்துடன் பயணித்த என்னை அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் சீருடைகள் வரவேற்றன.

அவர்களுக்கு முன்னால் கொட்டப்பட்ட கத்தரிக்காய்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சாக்கினுள் அடைந்து கொண்டிருந்த பரமசிவத்தாரைப் பார்க்கப் பரிதாபம் மேலிட்டது.

என்னைப் பற்றி அறிவதற்குத் தொடரப் போகும் மிரட்டல்களை எதிர்பார்த்தபடி இறங்கினேன்.

அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தவனின் பார்வையில் வரண்ட புழுதி கலந்திருந்தது.

''ஒக்கம...!''

அழுத்தமான தடவல்களுடன் அவன் என்னைப் போகவிட்டான். நான் நகராமல் பரமசிவத்தாருடன் இணைந்து கத்தரிக்காய்களைப் பொறுக்கினேன்.

''நீ விடு தம்பி. நான் பொறுக்கிறன். கோதாரியிலை போவாங்கள் நான் குண்டைக் கொண்டு போறனெண்டு நினைச்சிட்டாங்கள். எனக்கு வாற கொதிக்கு..... பரதேசியள்!''

தொண்டைக்குள் கரகரத்த சளியை தூவென்று துப்பினார். ''இந்த இடத்திலை கனகாலத்துக்குப் பிறகு மறிக்கிறாங்கள். நேற்றும் சத்தம் கேட்டது. ஏதும் புதினமே ஐயா?'' சாக்கின் வாயைக் கோர்த்தபடி கேட்டேன்.

''நேற்று இவ்விடத்திலை கடும் அடிபாடு. உந்த முடக்குக்கு அங்காலை ஒரு இயக்கப் பெடியன்ர பிரேதம் கிடக்கு''

என் மனம் வெகுவாகக் கனத்துப் போக, மெதுவாகச் சைக்கிளை எடுத்தேன்.

வளைவிலே திரும்பியபோது, ஒன்றிரண்டுபேர் 'அதைப்' பார்த்தபடி நிற்பது தெரிந்தது. இதயம் தாவிக்குதிக்க 'அதை' நெருங்கினேன்.

மேலாடை கிழிக்கப்பட்ட நிலையில் மல்லாந்து கிடந்தது அந்தச் சடலம். முகம் கோரமாகச் சிதைக்கப்பட்டிருக்க, அதன் வாய்க்குள் வீதியோரத்துப் புழுதி மண் நிரம்பியிருந்தது.

தலையிலும், நெஞ்சிலும் இருதுளைகள் விழிதிறந்திருந்தன. அவற்றில் வடிந்து உறைந்த இரத்தத்தை இலையான்கள் சுரண்டிக் கொண்டிருந்தன. முறிந்து திரும்பிய இடது கையினுள் கைக் குண்டொன்று கிடந்தது. அதைப்பார்த்த என் விழிகள் பெரிதாக விரிந்தன.

இடது கையின் மணிக்கட்டில் மிகத் தெளிவாகத் தெரிந்தது அந்தத் தழும்பு.

(யாவும் கற்பனை)

## மன்னருக்கு மகன் எழுதிய கடிதம்

ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் சிக்கனத்திற்கும், கண்டிப்புக்கும் பெயர் பெற்றவர். தம்மைப் போலவே பிள்ளையும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தார் மன்னர்.

ஆனால் அவர் மகன் வேல்ஸ் இளவரசரோ ஊதாரிச் செலவு செய்பவராக இருந்தார்.

பள்ளியில் பயிலும் போதே இந்தப் பழக்கம் அவரைப் பற்றிக் கொண்டு விட்டது.

ஒரு முறை அவர் தம் தந்தையாருக்குக் கடிதம் எழுதினார். அதில் தமக்கு அனுப்பும் பணத்தைக் கொஞ்சம் கூட்டும்படியாகவும், தமக்குப் பணத் தேவை அதிகமாயிருப்பதாயும் குறிப்பிட்டிருந்தார்.

தந்தையாருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே ஒரு கடிதம் எழுதினார்.

''உன் ஊதாரிப் பழக்க வழக்கங்களை மாற்றி பண விஷயத்தில் ஒரு வணிகனைப்போல நீ நடந்து கொள்ளா விட்டால் உருப்பட முடியாது'' என்று எழுதினார்.

பிள்ளையிடமிருந்து தந்தைக்குப் பதில் கடிதம் வந்தது.

''உங்கள் ஆலோசனைப்படி ஒரு வணிகனைப்போல் நடந்து கொள்கிறேன். இப்பொழுதுகூட உங்கள் கடிதத்தை ஒருவருக்கு 25 பவுண்களுக்கு விற்று விட்டேன் என்று எழுதியிருந்தார்.

கடிதத்தைப் படித்த தந்தை அப்படியே அதிர்ந்து விட்டார்.

கணவன்: அரைப்படி ரவையைக் கூடப்போட்டு உப்புமா கிண்டி இருக்கலாம்.

மனைவி: ஏன்.....? உப்புமா அவ்வளவு நல்லாய் இருக்குதா?

கணவன்: அதிகம் உப்பாய் இருக்குது எண்டு சொல்ல வந்தேன்!





கணவருடன் ஹெலன்

# தவறி விழுந்தார் வயது குறைந்தார்



மகன், மகளுடன் ஹெலன்

**ம**ருத்துவ உலகின் புரியாத மர்மமாக இருப்பவர் ''ஹெலன் டாரஸ் டெயின்'' என்ற பெண்மணி. இவர் 20ம் நூற்றாண்டின் 'Medical mystry' ஆக வர்ணிக்கப்படுகிறார்.

இவர் 35 ஆண்டுகளாகக் ''கோமா'' நிலையில் இருந்து மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கிறார்.

1965 ஆம் ஆண்டு தனது வீட்டுக்கு ஏணியில் ஏறி வர்ணம் (Paint) அடித்துக் கொண்டிருக்கும் போது ஏணியிலிருந்து தவறி விழுந்தார். இதனால் சீமெந்துத் தரையில் தலை மோதி சுய உணர்வை இழந்தார்.

இது நடந்து 35 வருடங்களுக்குப் பின் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி இரவு இவருக்கு நினைவு திரும்பியுள்ளது. உடனேயே சாதாரண இயல்பு நிலைக்கு ஹெலன் திரும்பி விட்டார். ஆனாலும் அவரது உடல் முதுமையடையாமல் 1965 இல் இருந்தது போலவே இளமையாக இருக்கிறது. இது மருத்துவ உலகத்துக்கே புரியாத புதிராக இருக்கின்றது.

சாதாரணமாக இப்படிப்பட்டவர்களுக்கு மனதளவில் காலம் உணரப்படாதிருந்தாலும் உடல் வளர்ச்சி நீடித்து முதுமை வந்தே தீரும். ஆனால் ஹெலன் விடயத்தில் இது நடக்கவில்லை. 35 வருடங்களாகத் தனக்கு என்ன நடந்தது? என்றே தெரியவில்லை என்கிறார் ஹெலன்.

இவருக்கு விபத்து நேர்ந்தபோது அவரது மகன் சிப்பிற்கு வயது 15. மகள் தெல்மாவுக்கு வயது 8. இப்போது ஹெலனின் கணவரின் வயது 70. மகனின் வயது 50. மகளின் வயது 43. அத்துடன் நான்கு பேரன்களும் இவருக்கு இருக்கிறார்கள்.

இளமையான அம்மாவும், வயதான மகனும் அருகில் இருக்கும் போது, மகனது மகள் போல ஹெலன் காணப்படுகிறார்.

இழந்த வருடங்களை எண்ணிக் கவலைப்படும் ஹெலன் புதிய வாழ்க்கையில் நிறைய அனுசரித்துப் போக வேண்டியிருக்கிறது என்று அங்கலாய்க்கின்றார்.

'ஏஜிங்' (Aging) எனப்படும் முதுமைத் தோற்றம் ஹெலனின் உடலில் மட்டும் ஏன் ஏற்படவில்லை? என்பது புரியாத புதிர் என்கிறார்கள் டாக்டர்கள்!



# குறிக்கோளுடன் வாழும் புரட்சிப் பாடகி

**அ**மெரிக்காவில் லூசியானாவைச் சேர்ந்த 'பிரிட்னி ஸ்பியர்சை' இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு யார் என்று எவருக்குமே தெரியாது.

ஆனால் இன்று அவர் உலகின் முதல்தர பாடகி. உலகம் முழுவதிலும் அவரைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

''பேபி ஒன் மோ டைம்'' என்ற இவரது ஒலி—ஒளி இசை நாடா இரண்டு கோடியே எழுபது இலட்சத்துக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவில் திருமணத்துக்கு முன் செக்ஸ் என்பது சாதாரண விஷயமாக இருந்து வருகிறது. இந்த விடயத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட 'பிரிட்னி ஸ்பியர்ஸ்' அதனை முறியடிக்கும் வகையில் திருமணத்துக்குப் பின்னர்தான் ''செக்ஸ்'' என்ற கருத்தை வலியுறுத்திப் பாடி இசை நாடாக்களை விற்பனை செய்து வருகிறார். இதற்குப் பெரும் வரவேற்பும் உள்ளது.

தனது உடலில் ஒரு பகுதி கூட வெளியில் தெரியாத வண்ணம் உடை அணிந்து ஒளி நாடாவில் தோன்றும் இவருக்கு அமெரிக்காவில் ஏகப்பட்ட மதிப்பு. அமெரிக்க இரசிகர்களின் ஏகோபித்த ஆதரவை இவர் பெற்று விட்டார்.

இவர் மீது தொழில் அதிபர்களின் கண் விழுந்துள்ளது. ஒரு மாலைப் பொழுதைத் தங்களுடன் கழிப்பதற்கு 20 கோடி ரூபாய் வரை அள்ளி வழங்கத் தயாராக உள்ளனர்.

ஆனால் பிரிட்னி ஸ்பியர்ஸ் இவற்றைக் கண்டு கொள்ளாமல் அமெரிக்காவில் புரட்சிப் பாடகியாக விளங்குகிறார்.




பிரதீபா — பசீனா



# பெண்ணே நீ அழலாமா?

**அ**லுவலகங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு பல வழிகளிலும் பிரச்சினைகள் வந்துவிடுகின்றன.

அவை சிறிய விடயங் களாக இருக்கலாம். அல்லது பாரதூரமான பிரச்சினைகளாகவும் இருக்கலாம். பிரச்சினை களுக்கு முகம் கொடுக்கத் தெரியாத பெண்கள் மனம் தளர்ந்து விடுகிறார்கள். பலர் தம்மை அறியாமலே அழுதும் விடுவார்கள்.

அடக்க முடியாத கவலையாக இருந்தாலும் அலுவலகத்தில் அழாதீர் கள். மனதின் பாரம் குறைய வீட்டுக்குப் போய் அழுங்கள் .

அலுவலகத்தில் உங்களுக்கு உண்மையான ஆறுதல் கிடைக்காது. நல்ல நண்பர்கள் இருந்தால் அவர்களிடம் உங்கள் மனப்பாரத்தைக் கொட்டுங்கள். சுமை ஓரளவு இறங்கியதாக உணர்வீர்கள்.

எல்லோர் முன்னிலையிலும் அழுவதால் உங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புப் பறிக்கப் படுகிறது. எனவே எவ்வளவு தான் கஷ்டம் வந்தாலும் பொறுமையாக இருங்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள்.


வேலையில் தவறு நடந்து மேலதிகாரி கண்டித்தாரா? அப்படியாயின் தவறு எங்கே ஆரம்பமானது எனப்பார்த்து, அது இனி நிகழாது என்ற உறுதியைக் கொடுங்கள் .

செய்யாத குற்றத்துக்குப் பழி சுமத்தப்பட்டால் கவலைப்படாதீர்கள். நீங்கள் தவறு செய்யவில்லை என்பதை நிரூபிக்கத் தயாராகுங்கள்.

அலுவலகங்களுடன் ஒட்டிப் பிணைந்திருப்பவைதான் பகைமையும் பொறாமையும். அஞ்சாது உங்கள் மீது வீண் பழி சுமத்துவார்கள். பிற ஆட்களுடன் உங்களை இணைத்துப் பேசுவார்கள். இதனால் சூடாகாதீர்கள். அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதீர்கள். அதுவே உங்களைச் சீண்ட முயற்சிப்பவர்களுக்குச் சாதகமாகிவிடும் அதே வேளை இந்த வீண் பழிகளுக்கு ஆளாகாதீர்கள். திடமாக இருங்கள். ஆடைகளில் ஏதேனும் அசுத்தம் பட்டால் அருவருப்போடு துடைத்துக் கழுவிவிட மாட்டீர்களா? அதுபோல உங்கள் மனதையும் தயார்ப்படுத்துங்கள் .

உங்கள் மனச்சாட்சிக்கு நேர்மையாக நடந்து கொள் ளுங்கள். உறுதியாக இருங்கள். நீங்கள் அடையப்போகும் வெற்றியை யாரும் தட்டிப் பறிக்க முடியாது!

# அழகிய கைகள் வேண்டுமா?




**வீ**ட்டு வேலைகளில் பெண்கள் அதிகமாக ஈடுபடு வதால் அவர்களுடைய கைகள் இரண்டும் வரண்டு போய்க் காணப்படும். ஏ.சி. அறைக்குள் இருந்து வேலை செய்பவர்களுக்கும் தோல் வரட்சி ஏற்படுகிறது.

முகத்தைக் கவனம் எடுத்துப் பராமரிப்பது போல கைகளையும் நாம் கவனமாகப் பராமரிக்க வேண்டும். நீண்ட நேரம் தண்ணீரில் நின்று வேலை செய்யும் பெண்களின் கைகளுக்குக் கட்டாயம் மசாஜ் தேவை.

தேங்காய் எண்ணெய், பாலாடை, உடலிற்குப் பயன்படுத்தப்படும் லோஷன் (Body Lotion) இவற்றுள் ஏதாவது ஒன்றைக் கைவிரல் தொடக்கம் முழங்கை வரை தடவ வேண்டும்.

படத்தில் அம்புக்குறி மூலம் காட்டப்பட்டுள்ளவாறு விரலிலிருந்து முழங்கை வரை ஒவ்வொரு பகுதியை யும் 4—6 தடவைகள் மசாஜ் செய்ய வேண்டும்.

நகங்களுக்கு மசாஜ் பண்ணும் முன் நகப்பூச்சுக்க ளைத் தரமான ரிமூவர் மூலம் அகற்றிவிட வேண்டும். பின்பு நகங்களை அதன் தசைப்பகுதி வரை சீராக வெட்டிக் கொள்ள வேண்டும். நகங்களின் ஓரங்களில் அதிகமாக வெட்டுவதைத் தவிர்த்து விடுங்கள்.

நகங்களை வெட்டிய பின்பு பாலாடை யுடன் எலு மிச்சைச் சாற்றைக் கலந்து விரல்கள்மீதும், நகங்களின் மீதும் தடவுங்கள்.

பின்பு படத்தில் காட்டப்பட்டவாறு மசாஜ் செய்யுங்கள். இதனால் நகம் பொலிவடையும். விரல்களின் அழகு கூடும்.

மசாஜ் செய்த பின்பு குளிர்ந்த நீரினால் கைகளைக் கழுவுங்கள். கைகளில் வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்.

கைகள் வரண்டு போவதையும், ஒவ்வாத தன்மை யால் புண்கள் ஏற்படுவதையும் தவிர்க்க ஆடைகளைத் துவைக்கவும், பாத்திரங்களைக் கழுவவும் தரமான சலவைத் தூள்களைப் பாவியுங்கள்.

ஆரோக்கியம் கெடாது கைகளைப் பராமரிப்பதற்கு படத்தில் அம்புக்குறியிட்டவாறு மசாஜ் செய்யுங்கள்.

1. விரல்கள் தொடங்கி முழங்கைவரை மேல் நோக்கி மசாஜ் செய்ய வேண்டும்.
2. பெருவிரல், சுண்டுவிரல் அருகில் வட்டவடிவில்... கீழிருந்து மேல்நோக்கி முழுக் கைக்கும்.
3. உள்ளங்கைக்குள் வட்டிவடிவில்.
4. கையைத் திருப்பி வைத்து மேல்நோக்கி.
5. வளையல் வடிவில் கை முழுவதும்.
6. கைகளைக் கழுவுவது போல்.
7. ஸ்பிரிங் வடிவில் விரல்களுக்கு.
8. வட்டவடிவில் நகத்தின் மேற்புறத்தில்.

* தலைமுடி அடர்த்தியாக இருப்பவர்கள் எவ்வளவுதான் கவனம் எடுத்துப் பராமரித்தாலும் தலையில் பேனும், ஈரும் பெருகுவதை அவர்களால் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு இதோ சில ஆலோசனைகள்:—



# 'பேன்' தொல்லையா?

* உங்களுக்கு என்று தனியாக ஒரு சீப்பை வைத்துக் கொள்ளுங்கள். அதைத் தினமும் சவர்க்கார நீரினால் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும்.
* தலையணை உறைகளை அவ்வப்போது துவைத்துச் சுத்தமாக வைத்திருங்கள்.
* வாரத்தில் இரு தடவைகள் தலைக்கு ''மெடிகேடட் ஷாம்பு' போட்டுக் குளியுங்கள்.
* வேப்பிலைகளை நீரில் கொதிக்க வைத்து அந்த நீரால் தலையைக் கழுவினால் பேன், ஈர் ஒழியும்.
* இஞ்சியும், துளசியும் சம அளவு எடுத்து அரைத்துச் சாறு பிழிந்து, அதை படுக்கப் போகும் முன் தலை யில் பூசிவிடுங்கள். இரண்டு மேசைக்கரண்டி வெந்தயத்தை நீரில் முதல் நாள் இரவே ஊறப் போட வேண்டும். மறுநாள் காலையில் அதை அரைத்து தலையில் பூசி அரை மணித்தியாலம் ஊற வைக்க வேண்டும்.

பின்பு சிகைக்காய் போட்டுக் குளியுங்கள், இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்து இப்படிச் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# சர்வதேச சம்மேளனத்தின் தலைமைப் பதவி இலங்கைக்கு

## ஆசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவி கூறுகிறார்

சர்வதேச வலைப்பந்தாட்டச் சம்மேளனத்திற்குத் தலைவியாக இலங்கையைச் சேர்ந்த தமாரா தர்மகீர்த்தியின் பெயரை சிபார்சு செய்வதற்கு ஆசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ்வாறு ஆசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவி சிங் லிம் கூறினார்.



கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் ஆசிய வலைப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவி சிங் லிம்முடன் தமாரா தர்மகீர்த்தி ஹேரத் (வலது)

"ஆசியாவில் வலைப்பந்தாட்ட முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்களில் இருவர் முதன்மையானவர்கள். ஒருவர் தமாரா. மற்றவர் மலேஷிய வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவி. இவர்களில் தமாரா நிர்வாகத் துறையில் மிகவும் சிறந்து விளங்குகிறார்.

எனவே தமாராவை சர்வதேச சம்மேளனத்தின் தலைவியாக்குவதற்கு ஆசிய சம்மேளனம் முழுமையான ஆதரவை வழங்கும். வலைப்பந்தாட்டத்தில் ஆசிய பிராந்தியத்தை சக்திமிக்கதாக்குவதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்" எனவும் சிங் லிம் கூறினார்.

தமாரா தர்மகீர்த்தி ஹேரத் இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவியாவார்.

அவரது முயற்சியினாலேயே 5ஆவது ஆசிய வலைப்பந்தாட்டச் சாம்பியன்ஷிப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச வலைப்பந்தாட்டச் சம்மேளன நிர்வாகிகளின் தேர்வு இம்மாதம் சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது. இதில் தலைவியாகத் தெரிவு செய்யப்படுபவர் ஒருவருட காலத்திற்கு இப்பதவியை வகிப்பார். இப்பதவிக்கு இம்முறை கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய தலைவியாக நியூஸிலாந்தைச் சேர்ந்த ஷேர்லி டோஸன் விளங்குகிறார். இம்முறையும் அவர் தலைமைப் பதவிக்குப் போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தில் வாக்குரிமையுள்ள நாடுகளின் எண்ணிக்கை 47 ஆகும்.

# அண்டி ஃபிளவர் ஆண்டின் சிறந்த வீரர்

சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தினால் இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக ஸிம்பாப்வே வீரர் அண்டி ஃபிளவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

7 வீரர்களின் பெயர்கள் இவ்விருதுக்கு சிபாரிசு செய்யப்பட்டன. கிளென் மெக்ராத், ஷேரன் பொல்லொக், டெரன் கவ், இன்ஸமாம் உல் ஹக், சச்சின் டெண்டுல்கர், முத்தையா முரளிதரன் ஆகியோரே இவர்களாவர்.

ஸிம்பாப்வே அணியின் விக்கட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான அண்டி ஃபிளவர் டெஸ்ட் போட்டிகளில் 51.42 சராசரி ஓட்டங்களைக் கொண்டுள்ளார்.



அண்டி ஃபிளவர்

இந்த வருடத்தின் சிறந்த இளம் வீரராக அப்துல் ரஸ்ஸாக் சர்வதேச கிரிக் கெட் வீரர்களின் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த டெஸ்ட் அணியாக அவுஸ்திரேலிய அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# கனடா செல்லும் இலங்கைக்குழு

சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தின் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஆகஸ்ட் 3-12 வரை கனடாவின் எட்மன்டன் நகரில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் இலங்கையிலிருந்து 6 வீரர்களும் 6 வீராங்கனைகளும் பங்குபற்றுகின்றனர்.

இலங்கைக் குழுவின் தலைவியாக சுசந்திகா ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் நடைபெறுவது 8ஆவது சாம்பியன்ஷிப் போட்டிகளாகும். 7ஆவது போட்டிகள் 1997இல் கிறீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்றன. இதில் சுசந்திகா ஜயசிங்க 200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

கனடாவில் நடைபெறவுள்ள போட்டிகளில் தங்கப்பதக்கமொன்றைப் பெறுவதே தனது இலக்கு என அண்மைக்காலம் வரை சுசந்திகா கூறிவந்தார்.

கடந்த செப்டெம்பரில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளிலும் 200 மீற்றரில் சுசந்திகா வெண்கலப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டார். எனினும் தற்போது தனது கணுக்காலில் வலியேற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் சுசந்திகா.

"நான் மாத்திரமல்ல, மேலும் சில போட்டியாளர்களும் காயங்கள், உபாதைகளுக்குள்ளாகியுள்ளனர். எனவே நோயாளர்களைக் கொண்ட குழுவே கனடா செல்வது போல் உணர்கிறேன். ஆகையால் இம்முறை சிறந்த பெறுபேறுகளை எதிர் பார்க்க முடியாதுள்ளது." இவ்வாறு சுசந்திகா இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் கூறியிருந்தார்.

8ஆவது சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கைப் போட்டியாளர்களினதும் அவர்கள் பங்குபற்றும் போட்டி நிகழ்ச்சிகளினதும் விவரம்:



சுசந்திகா ஜயசிங்க 100, 200, 4x100 மீ.



தமயந்தி தர்ஷா 200, 400, 4x100 மீ.



சிறியானி குலவன்ஸ 100மீ.தடைதாண்டல்



நிம்மி டி சொய்ஸா 4x100 மீ.



பிரதீபா ஹேரத் 4x100 மீ.



அனோமா சூரியஆரச்சி 4x100 மீ.



சுகத் திலகரத்ன 400, 4x400மீ.



ரொஹான் பிரதீப் குமார 400, 4x400மீ.



ஹரிஜன் ரத்நாயக்க 400மீ.தடைதாண்டல்



ரங்க விமலவன்ஸ 4x400 மீ.



சுமேதா பெர்னாண்டோ 4x400 மீ.



சம்பத் அமரசேகர 4x400 மீ.

# கட்டுநாயக்க அனர்த்தத்தால் மலேஷிய பயணம் ரத்து!

மலேசியாவின் 70ஆவது மெய்வல்லுநர் போட்டிகள் ஜூலை 26-29 வரை நடைபெற்றன. பல நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களும் இதில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கையிலிருந்து 7 போட்டியாளர்களும் 5 உத்தியோகத்தர்களும் இதில் பங்கு பற்றவிருந்தனர்.

எனினும் கட்டுநாயக்காவில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் இலங்கைக் குழுவினர் உரிய காலத்தில் பயணம் மேற்கொள்ள முடியாமல் போனது. இவர்கள் ஜூலை 24ம் திகதி புறப்படவிருந்தனர். அன்று அதிகாலையே தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மறுநாள் மாலைவரை இவர்கள மலேசியா புறப்படுவதற்குக் காத்திருந்தனர். எனினும் அம்முயற்சி கைகூடவில்லை. இதையடுத்து இப்பயணம் ரத்துச் செய்யப்பட்டது.

அடுத்த வருடம் ஆசிய மெய்வல்லுநர் போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் மத்தியஸ்தர்களாக பணியாற்றுவதற்குப் பயிற்சிகளைப் பெறுவதற்காகவே 5 உத்தியோகஸ்தர்கள் மலேசியாவுக்கு அனுப்பப்படவிருந்தனர்.

இப்பயணம் ரத்துச்செய்யப்பட்டதையடுத்து சிங்கப்பூரில் இம்மாதம் நடைபெறவுள்ள போட்டியொன்றுக்கு இவர்கள் அனுப்பப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

# 3 ஆவது சுற்றில் அம்பாறை அணி

எவரெடி கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டிகளில் அம்பாறை லீக் அணி மூன்றாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

இச்சுற்றுப்போட்டி இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகிறது. 19 வயதுக்குட்பட்ட லீக் அணிகள் இதில் பங்குபற்றுகின்றன.




அம்பாறை லீக் அணி முதலாவது சுற்றில் மட்டக்களப்பு லீக் அணியை 5-1 கோல்களால் தோற்கடித்தது. இரண்டாவது சுற்றில் மன்னார் அணியை 6-5 கோல்களால் வெற்றி கொண்டது.

யாழ்ப்பாண லீக் முதலாவது சுற்றில் பருத்தித்துறை லீக்கை 3-1 கோல்களால் தோற்கடித்தது.

இச்சுற்றுப்போட்டியில் அநுராதபுரம், திருகோணமலை அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெறவில்லை.

இப்போட்டி திருகோணமலையில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. எனினும் அநுராதபுரம் அணி போட்டிக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் போட்டியின் வெற்றி திருகோணமலை அணிக்கு வழங்கப்பட்டது. திருகோணமலை அணி இரண்டாவது சுற்றில் யாழ் லீக்குடன் மோதவுள்ளது.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு (முறையே வென்ற அணி, எதிரணி, கோல்கள்)

| அணிகள் | | கோல்கள் |
|---|---|---|
| **முதலாம் சுற்று** | | |
| யாழ். | பருத்தித்துறை | 3-1 |
| மன்னார் | வவுனியா | 4-1 |
| அம்பாறை | மட்டக்களப்பு | 5-1 |
| **இரண்டாம் சுற்று** | | |
| மாத்தறை | களுத்துறை | 3-0 |
| தெஹிவளை | ஸ்ரீ ஜயவர்தனபுர | 4-1 |
| கண்டி | மாத்தளை | 8-0 |
| கம்பளை | நாவலப்பிட்டி | 2-0 |
| பதுளை | பண்டாரவளை | 10-1 |
| நீர்கொழும்பு | குருணாகலை | 3-1 |
| கேகாலை | மாவனல்லை | 2-0 |
| அம்பாறை | மன்னார் | 6-5 |
| புத்தளம் | சிலாபம் | 4-0 |
| ஹட்டன் | நுவரெலியா | 7-0 |

# விளையாட்டுத்துறை கற்கைநெறி

இலங்கை ஒலிம்பிக் குழுவினால் விளையாட்டுத்துறை தொடர்பான கற்கை நெறியொன்று அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 30 பேர் இதில் பங்குபற்றினர்.

இவர்களில் 25 பேர் தமிழ் பேசுவோர்களாவர். இத்தகைய கற்கைநெறியொன்றில் அதிகளவான தமிழ் பேசுவோர் கலந்து கொண்டமை இதுவே முதல்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கற்கைநெறி ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் கே. கணேஷ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இக்கருத்தரங்கை வவுனியாவில் நடத்துவதற்கே அவர் முயற்சித்த போதிலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அது அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டது. இவ்வாறு வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி சி. அண்ணாதுரை தெரிவித்தார்.

# மெய்வல்லுநர் போட்டிகளில் விருது பெற்றோர் விவரம்

இலங்கையின் 79ஆவது மெய்வல்லுநர் போட்டிகள் ஜூலை 20-22 வரை கொழும்பு சுகததாஸ அரங்கில் நடைபெற்றன. சுமார் 700 போட்டியாளர்கள் இதில் பங்குபற்றினர்.

இலங்கை ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ விழாவின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹான்ஸ் விஜேசூரிய கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

இப்போட்டிகளில் திறமைகாட்டியோருக்கு விசேட விருதுகளும் வழங்கப்பட்டன. அவ்விருதுகளினதும் வெற்றியாளர்களினதும் விவரம் வருமாறு:

**ஆண்களுக்கான விருதுகள்**

*வில்டன் பார்லீட் கிண்ணம்:*
ஹரிஜன் ரத்னாயக்க - 400மீ. தடை தாண்டல்

*கவர்னர் ஜெனரல் (ஜனாதிபதி) கிண்ணம்:*
ஷாந்த மெண்டிஸ் -3000 மீ. ஸ்ரீபல் சேஸ்

*டங்கன் வைட் கிண்ணம்:*
ஹரிஜன் ரத்னாயக்க -400 மீ. தடை தாண்டல்

*சி.சி. திஸாநாயக்க கிண்ணம்:*
பிரதீப் நிஷாந்த- ஈட்டி எறிதல்

*என்.எம். வாசகம் கிண்ணம்:*
துமிந்த டி சில்வா- நீளம் பாய்தல்

*ஹோர்லிக்ஸ் சவால் கிண்ணம்:*
ஆர்.பி.கே. பெர்னாண்டோ -400 மீற்றர்

**பெண்களுக்கான விருதுகள்**

*கொழும்பு கென்ரீன் கொமிட்டி கிண்ணம் :*
சிறியானி குலவன்ஸ- 100 மீ. தடைதாண்டல்

*சந்தி கன்னங்கர ஞாபகார்த்த கிண்ணம் :*
அனுஷா ஏக்கநாயக்க -400 மீற்றர்

*ஹுக்ஸ்லே வின்டேர்ஜனோ கிண்ணம்:*
உதேனி காஞ்சனமாலா -1500 மீற்றர்

*குளுக்கோலைன் கிண்ணம்:*
சிறியானி குலவன்ஸ -100 மீ. தடைதாண்டல்

*எச்.என்.பீ. கிண்ணம்:*
ஆன் மஹேஷி சில்வா -ஈட்டி எறிதல்

*த கிளைட் கிண்ணம்*
*(சிறந்த பெண்கள் அணிக்கானது):*
ட்ரெக் மாஸ்டர்ஸ்

*ஸ்டோன் என் ஸ்ரிங் கிண்ணம்*
(இரண்டாமிடம் பெறும் பெண்கள் அணிக்கானது): இலங்கை இராணுவம்.

## மாத்தளை ஸாஹிராவுக்கு முதலிடம்

மாத்தளை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கனிஷ்ட பிரிவு ஹொக்கி போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. 12 வயதுக்குட்பட்ட அணிகள் இதில் பங்குபற்றின.

இதில் மாத்தளை ஸாஹிரா கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. 11 பாடசாலைகள் இப்போட்டிகளில் பங்குபற்றின.

# எங்கும் செல்வோம்; எதிலும் வெல்வோம்
# கிழக்கில் விடுத்தது; தெற்கில் வெடித்தது

தேரடிக்கு வந்த டானியலும் லோகனும் நேராக சின்னாச்சியிடம் சென்று கையை நீட்டினர். சின்னாச்சியும் எதுவும் கூறாமல், சிரிப்புடன் இளைஞர்களுக்கு கைநிறையக் கடலையை அள்ளிக் கொடுத்தாள். வாங்கியவுடன் தேரடியில் அமர்ந்தனர் அவர்கள்.

ஏற்கெனவே அங்கு விநாசியரும், பரமலிங்கம் மாஸ்டரும் சின்னாச்சி கொடுத்த கடலையை கொறித்துக் கொண்டிருந்தனர்.

''சின்னாச்சிக்கு சந்தோஷம் எப்ப வருகுதோ, அப்ப எங்களுக்கு ஓசிக் கடலைக்குப் பஞ்சமில்லை'' அரட்டையை ஆரம்பித்தார் விநாசியர்.

''புலனாய்வு அடிக்கிற கூத்தைப் பார்த்தால் எங்களுக்கு அடிக்கடி ஓசிக் கடலை கிடைக்கும் போல இருக்கு'' குத்தலாகப் பேசினான் டானியல்.

''வடக்கிலை என்றும் கிழக்கிலை என்றும் மாறி மாறி சொல்லிச்சினம். கடைசியா காலுக்குள்ளை எல்லே நடந்திருக்கு'' என்றாள் சின்னாச்சி.

இவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்று புரிந்த மாஸ்டர், ''புலனாய்வு கோட்டை விடத்தொடங்கி கனகாலமாச்சு'' என்றார்.

டானியல் நேராக விடயத்துக்கு வந்தான்—

''கட்டுநாயக்கா விமானப்படைத்தளத் தாக்குதல் பல நாள்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்று ஆய்வாளர்கள் கருதுகினமாம். ஆனால் அரசின் புலனாய்வுப் பிரிவு இதை ஏன் கண்டுபிடிக்கவில்லை அல்லது கண்டு பிடிக்க முடியவில்லை என்பதுதான் இப்போது எழும் முக்கிய கேள்வியாம்.''

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கினால் எந்தப் பிரச்சினையும் வராது. அவரது கட்சி எம்.பிக்களில் எவரும் அவருக்கு ஆதரவு தரமாட்டினம் என்ற புலனாய்வுத் தகவல் தெரிவித்ததாக, அப்ப செய்திகள் வெளியாகியிருந்தன. அதை நம்பி எடுத்த நடவடிக்கை பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கானது. அப்பவே புலனாய்வுகள் புஸ்வாண மானதுதானே'' என்றான் லோகன்.

''ஆப்பிழுத்த குரங்குமாதிரி அவதிப்படுறது தெரிந்த கதைதானே'' என்றது சின்னாச்சியின் குரல்.

''இப்போது கூட யாழ்ப்பாணத்தைப் பிடிக்க விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக புலனாய்வுப் பிரிவினர் கூறியதையடுத்துத்தான், வடக்கில் விமானத் தாக்குதல்களை அரசு நடத்தியிருந்தது. ஆனால் அந்த விமானப் படை விமானங்களையே அழிக்கும் நடவடிக்கையை மட்டும் அவையாலை கண்டுபிடிக்க முடியவில்லை'' என்றார் விநாசியர்.

''இதில் இன்னொரு சிக்கலும் எழுந்திருக்காம். ஒரு இராணுவ நடவடிக்கையின்போது, புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடு திருப்திகரமாக அமைந்து விட்டால், பாதி வெற்றி கிடைத்தமாதிரியாம். ஆனால் இங்கு இருக்கிற நிலைமை; உள்ள கொஞ்ச நம்பிக்கையையும் குழி தோண்டிப் புதைக்கிற மாதிரி யெல்லே அமையுது'' என்றான் டானியல்.

அதோட இன்னொரு பிரச்சினையும் உருவாகலாம் என்று கூறப்படுகிறது என்று ஆரம்பித்த லோகன்.

''இவ்வளவு நாளும், புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்ததாக வெளிநாடுகளுக்கு நிறைய விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டு, தமக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியிருந்தினம்.

''ஆனால், அந்தப் புலனாய்வுகளில் ஓட்டைகள் இருப்பது அம்பலமாகி, அவற்றின் நம்பகத் தன்மைகள் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டால், அது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்'' என்று முடித்தான்.

''இதிலை இன்னொரு விஷயத்தை கவனித்தீர்களா?'' கேட்டபடியே காலை மாற்றிப் போட்டபடி தொடர்ந்தார் மாஸ்டர்.

''நோர்வேயின் சமாதான பேச்சுக்கான முயற்சி தொடங்கப்பட்டபோது, தெற்கில் தாக்குதல் நடவடிக்கை



## தேரடி அரட்டை

களை நடத்துவதில்லை என்று விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து உறுதி மொழி வழங்கப்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன அல்லவா?''

''அதிலிருந்து தெற்கில் தாக்குதல் நடவடிக்கைகள் பாரிய அளவில் இல்லாதிருந்ததும். உறுதிமொழி காப்பாற்றப்படுவதாகக் கருதப்பட்டது.''

''சமீபத்தில் வடக்கில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்துவதாகக் கூறி ஒரு தாக்குதல் நடவடிக்கையை படைத்தரப்பு மேற்கொண்டது.

''ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த விமானத் தாக்குதலுக்கு தமது அதிருப்தியை வெளியிட்டன.''

''இந்த நிலையில்தான், கட்டுநாயக்க விமானப் படைத்தள தாக்குதல் நிகழ்ந்துள்ளது.''

''தமது நீண்ட கால விரதத்தை புலிகள் முடித்துக் கொண்டே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகக் கருதப்படுகிறது.''

''சமாதான முயற்சியாக பேச்சில் இரு தரப்பும் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்திய சர்வதேச சமூகம், தற்போது அரசின் போக்கை உணர்ந்து அதிருப்தி கொண்டதாலேயே, விடுதலைப் புலிகள் தமது விரதத்தை முடித்திருப்பதாக ஊகங்கள் எழுந்துள்ளன. இந்த ஊகங்கள் உண்மையாக இருந்தால், அரசு பாடு அவதிதான்.'' பேச்சை நிறுத்தி மூச்சு வாங்கிக் கொண்டார் மாஸ்டர்.

''இந்தத் தாக்குதலின் போது விமான நிலையத்தில் இருந்த பொது மக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்படாமல் இருப்பதில் கவனம் எடுக்கப்பட்டிருப்பதாக, சுயாதீனச் செய்தி நிறுவனம் ஒன்று கூறியிருந்தது''

''அப்படி யாராவது உயிரிழந்திருந்தால், விடுதலைப் புலிகளுக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் அது சமயோசிதமாகத் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்திருந்தது.'' கேட்டதைச் சொன்னார் விநாசியர்.

''எது, எப்படியோ வரவு செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட முதற் கட்டமாக ஒதுக்கப்படும் ஒரு ஆண்டுக்கான இராணுவச் செலவு அளவை, ஒரு சில மணித்தியாலங்களில் அரசு இழந்திருக்கிறது. இதிலிருந்து மீள்வது யானை வாயில் சிக்கிய கரும்பை மீட்பது போலத்தான் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லுகினம்'' விவரித்தான் டானியல்.

''அது மட்டுமில்லை, பயணிகள் விமானங்கள் மற்றும் சரக்கு விமானங்கள் அழிந்ததால், அவற்றால் கிடைக்கும் வருமானமும் தடைப்பட்டுப் போச்சு, போதாக் குறைக்கு பிறநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வரவை இந்தத் தாக்குதல் கணிசமான அளவு குறைக்கக் கூடுமாம். அப்படிக் குறைத்தால், சுற்றுலாப் பயணிகளை நம்பி நடத்தப்படும் பல தொழில்கள் ஈயோட்டும் நிலைக்கு வரலாம். அது அரசுக்கு எதிரான மக்களின் நிலைப்பாடு ஒன்றை உருவாக்கவும் கூடுமாம்'' என்றார் லோகன்.

''கொஞ்ச நாளைக்கு முதல் மட்டக்களப்பு ப் பகுதியில் 'எங்கும் செல்வோம். எதிலும் வெல்வோம்' என்ற வாசகங்கள் தெருச் சுவர்களில் காணப்பட்டனவாம். எங்கும் என்பது கட்டுநாயக்காவை மட்டும் குறிக்குமா அல்லது வேறு முக்கிய இடங்களிலும் தொடருமா? என்பது தான் இப்போது எழுந்துள்ள மிக முக்கியமான கேள்வி.

''இந்தக் கேள்வி மீண்டும் ஒரு முறை எழாமல் இருக்க வேண்டுமானால், சமாதானம், அமைதி இங்கு தழைக்க உடனேயே நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை'' எழுந்தார் மாஸ்டர்.

''என்ன கிழவி, கதையைக் காணவில்லை'' கேட்டுக் கொண்டே எழுந்தான் லோகன்.

''நாங்கள் கதையை நம்பும் ஆள்கள் இல்லை'' என்றபடி கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

தேரடி கலைந்தது

—ஏகலைவன்

# தட்டிக் கேட்பாரின்றி தொடரும் சித்திரவதைகள்

சித்திரவதை சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஒன்று என்ற ஒப்பந்தத்தில் பெயரளவில் இலங்கை கையெழுத்திட்டுள்ளதே தவிர இலங்கையில் இந்தத் தடைச் சட்டம் அமுலாக்கப்பட்டு ஏழு ஆண்டுகளாகியும் எவருக்கு எதிராகவும் சித்திரவதைக் குற்றத்துக்காக ஒரு வழக்குக்கூடத் தொடரப்படவில்லை.

கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி தமிழ்மாறன் இப்படித் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் குடும்பப் புனர்வாழ்வு நிலையமும், மனித உரிமைகளுக்கான கற்கை நிலையமும் இணைந்து நடத்திய சித்திர வதையை தடுப்பது குறித்த கருத்தரங்கில் பங்கு கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தில் இடம் பெற்ற — கட்ட விழ்த்து விடப்பட்ட — மனித உரிமை மீறல்கள், சித்திர வதைத் தடைச் சட்டம் என்ற ஒப்பந்தத்தில் இலங்கையையும் ஒப்பமிடக் கட்டாயப்படுத்தி விட்டன.

ஆனால், ஒப்பந்தப்படி ஒழுக இலங்கை இன்றுவரை முயலவில்லை என்பது வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டிய உண்மை.

இலங்கையில் சிரேஷ்ட நீதியரசர்கள் கூட சித்திரவதை என்ற விடயத்தில் முன்னுக்குப்பின் முரணான விதத்தில் சட்டங்களை இயற்றி மனித உரிமைகளை குழி தோண்டிப் புதைப்பதற்குக் காரணமாகிவிடுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் சித்திரவதைக்கு எதிராக அந்த அரசுகள் கடைப்பிடிக்கும் சட்ட முறைகளை இலங்கையில் பிரயோகிக்க நீதியரசர்கள் பின்னடிக்கின்றனர்.

சித்திரவதையை இலங்கையில் இருந்து ஒழிப்பதற்குப் பாதிக்கப்பட்டவர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடரப் பின்னடிப்பது சித்திரவதை என்ற குற்றத்தை நியாயப்படுத்துவதாக அமைந்து விடுகிறது.

உடல், உள ரீதியாக நீண்ட காலப் பின்னடைவுகளை ஏற்படுத்தும் சித்திரவதை என்ற கொடூரத்தை முற்றாக ஒழிப்பதானால் பாதிக்கப்பட்டவர்களின் ஒத்துழைப்புக் கணிசமான அளவு தேவை.

இப்படி அவர் கூறினார்.

# உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க மாநாடு சென்னையில்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்திய ஒன்றியம் தமிழர்களுக்கான அடிப்படைக் கல்வி உயர்க் கல்வித் திட்டங்கள் குறித்தும் மொழி ஞாயிறு பாவாணர் நூற்றாண்டு மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த மாநாடு ஆகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெறுகிறது. சென்னையில் இடம் பெறவுள்ள இந்த மாநாட்டில் பல தமிழ் அறிஞர்கள் பங்கு கொள்ள உள்ளனர்.

ஒன்றியத்தின் தலைவர் மு.அந்தாலனார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளைத் தலைவர் திருமதி சு.செல்லையா, ஜெர்மன் கிளைத் தலைவர் புலவர் நா.சி.கமலநாதன், ஜெர்மன் கிளைச் செயலர் துரை.கணேசலிங்கம், பிரான்ஸ் கிளைத் தலைவர் அலன். ஆனந்தன், தமிழ் இணையப் பல்கலைக்கழக இயக்குனர் மு.பொன்னவைக்கோ, முன்னாள் துணைவேந்தர் ச.முத்துகுமாரன், மருத்துவர் செ.நெ.தெய்வநாயகம், முனைவர் தமிழப்பன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பேராசிரியர் சி.இராமமூர்த்தி, அருட் தந்தை இரா.ஜோசப் பவுல், திருக்குறள் தொண்டர் சிந்தனையாளர் மா.அர்த்தநாரி, திருகாந்தன் சுற்றுச் சூழல் இயக்கத்தைச் சேர்ந்த குரு.ஆறுமுகம், வரலாற்று ஆய்வாளர் சு.சௌந்தரராஜன், பேராசிரியர் சவரிமுத்து, வ.வேம்பையன், புலவர் கி.த.பச்சையப்பன், மூ.ஆறுமுகம், அமைப்பின் துணைத் தலைவர் சத்தியநாராயணன் முனைவர் ப.அறவாணன், முனைவர் பொற்கொடி, பெருங்கவிக்கோ வி.சேதுராமன், புலவர் ப.கி.பொன்னுசாமி, முனைவர் தமிழ் குடிமகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவர்.

நற்றமிழ் நாயகம் ஆ.முத்துகுமரன் வரவேற்புரையும் மருத்துவர் மு.குமரேசன் முன்னிலையும் நிகழ்த்துவர்.

இதேவேளை — எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மாநாடு தென் ஆபிரிக்காவில் உள்ள டேர்பன் நகரில் இடம் பெறவுள்ளது.

# ஆங்கில அறிவுக்கு நல்ல சந்தர்ப்பம்

Spoken English பாடநெறி கற்பிக்கும் பல்வேறு நிலையங்களிலும் Nalravi English Language நிலையம் தனக்கெனத் தனியிடம் பதித்துச் சேவையாற்றி வருகிறது.

இங்கு அலைமோதும் மாணவர்களின் எண்ணிக்கை கற்பித்தலின் ஆற்றலை மொழி பெயர்த்து நிற்கிறது. இங்கு Spoken English பாடநெறி கற்பிப்பதில் புதிய சகாப்தம் ஒன்றைப் பேணி வருகிறார் விரிவுரையாளர் கே. எம்.என். நல்ரவி. ஆங்கிலத்தில் பேசும் திறனை வளர்க்கவும் உண்மை அறிவை விருத்தி செய்யவும் விசேட சட்டதிட்டம் மூலம் கற்பிப்பதில் இவர் வல்லவர்.

இவரது ஒரு வகுப்பில் 25 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றனர். மூன்று முதல் ஆறு மாத காலத்துக்குள் அடிப்படை இலக்கணம், உட்பட பிழையின்றி ஆங்கிலம் எழுதவும், பேசவும் பயிற்சிகள் அளிக்கப்படும். பாடங்களை வீட்டில் சென்று மீட்டிக் கொள்ள Audio Cassettes ம் வழங்கப்படும்.

தொலைபேசி உரையாடல், குழு உரையாடல் மற்றும் சம்பாஷனைகளை ஆங்கிலத்தில் சுலபமாகப் பேச பயிற்சி அளிக்கப்படும்.

விரிவுரையாளருக்கும் மாணவர்களுக்கும் இடையில் இணையற்ற கல்வித் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு வகுப்புகள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆரம்பத்தில் வகுப்பில் ஆங்கில மொழியைத் தவிர வேறு மொழியில் பேசினால் தண்டப் பணமாக ஒரு சொல்லுக்கு இரண்டு ரூபா அறவிடப்படுகிறது. மாணவ தலைவர்களிடம் ஐந்து ரூபாவும், ஆசிரியரிடம் நூறு ரூபாவும் அறவிடப்படுகிறது. இந்த மாதிரியான சட்டதிட்டங்கள் மூலம் மிகக் குறைந்த நாள்களிலேயே ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடிய வாய்ப்புக் கிட்டி விடுகிறது.

விரிவுரையாளர் நல்ரவி இந்த பயிற்சி நெறிக்கு தன்னையே அர்ப்பணித்துக் கற்பித்து வருகிறார். விரைவில் Nalravi Overseas Education Centre என்ற வகுப்பை மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஆரம்பிக்க உள்ளார்.

இந்த ஆசிரியரிடம் ஆங்கிலம் கற்று நூறு வீதம் பயனடைந்த பல மாணவர்கள் ஐரோப்பிய நாடுகளில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




இலக்கங்களை இணைத்து மறைந்துள்ளதைக்கண்டுபிடியுங்கள். பின்னர் அதற்கு அழகாக வர்ணந்தீட்டுங்கள்.



## நான் விரும்பும் தொழில்

நான் விரும்பும் தொழில் ஆசிரியத்தொழில் ஆகும். நான் ஏன் இத் தொழிலை விரும்புகிறேன் என்றால். ஆசிரியத் தொழிலின் தன்மை, சமூகத்திற்குச் செய்யும் சேவை புத்தி ஜீவிகளை உருவாக்கும் திறமை இன்னும் பல காரணங்களால் நான் இத்தொழிலை விரும்புகிறேன். ''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்''

எனவே இத்தொழில் தெய்வீகத் தொழிலாகும். மேலும் கல்வி காற்றாலோ, தீயாலோ அழியாத செல்வமாகும். அச் செல்வத்தை வற்ற விடாமல் நீரூற்றுப் போல வாரி வழங்குபவர்கள் ஆசிரியர்கள்.

என்னைப் போல இளம் சமுதாயத்திற்கு அன்னை போல் பரிவு காட்டி கல்வி ஊட்டுபவர்கள் ஆசிரியர்கள் ஆவார்கள்.

எனவே நானும் ஆசிரியராக வந்து எனது ஆசிரியரைப் போல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நற்குணங்களுடைய ஆசிரியராகக் கடமையாற்றுவேன்.

பா. பாலுசங்கர் (வயது 13),
கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி
கல்கிசை.

## பூக்கள்



வண்ணவண்ண பூக்கள்
வடிவான பூக்கள்
எம்மைக் கவரும் பூக்கள்
எங்கும் நிறைந்த பூக்கள்
கண்ணைக் கவரும்
பூக்கள்
களிப்பூட்டும் பூக்கள்
எங்கும் நிறைந்த பூக்கள்
எல்லாம் இறைவன் தந்த
பூக்கள்

சிவகுமாரன் சயந்தன்
தரம் – G.C.E. (O/L)
யா/யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை



ஷர்மிலா

## இரு கிளிகள்


கா. யுகவேந்திரா, ஆண்டு –9 யாழ்ப்பாணம்.

ஒரு மலையடிவாரத்தில் கிளி ஒன்று கூடுகட்டி வாழ்ந்தது. அதற்கு இரண்டு குஞ்சுகள். தாய் சொல்வதைக்கேட்டு இரண்டு குஞ்சுகளும் சமத்தாக வளர்ந்தன. ஒரு நாள் தாய்க்கிளி குஞ்சுகளை விட்டு விட்டு இரைதேடச் சென்றது. வேடன் ஒருவன் இரண்டு கிளிகளையும் பிடித்தான். ஒன்று அவன் ஏமாந்த சமயம் பார்த்து தப்பி விட்டது. மற்றைய கிளி தப்ப முடியாமல் அவனிடம் மாட்டிக் கொண்டது. அடுத்து வந்த நாட்களில் வேடன் அந்த கிளிக்கு உணவு கொடுத்து அன்பாகப் பேசவும் கற்றுக் கொடுத்தான்.

வேடனிடம் இருந்து தப்பியகிளி தன் தாயையும் உடன் பிறந்த கிளியையும் பிரிந்த சோகத்தில் அழுது கொண்டிருந்தது. அவ்வழியே வந்த முனிவர் ஒருவர் அதை தன்னுடைய குடிலுக்கு எடுத்துச் சென்று அன்போடு வளர்த்தார். முனிவரும் கிளிக்கு பேசக் கற்றுக் கொடுத்தார். ஒருநாள் அந்நாட்டு அரசர் காட்டிற்கு வேட்டையாட வந்தார். ஒரு மானைத் துரத்தியதனால் நீண்டதூரம் ஓடிவந்த அரசருக்கு தண்ணீர் தாகமெடுத்தது. அங்கிருந்த வேடனின் குடிலுக்குச்சென்றார். வேடனுடைய குடிலுக்குள் இருந்த கிளி படபடவென்று சிறகை அடித்துக் கொண்டு,

''டேய்... யாரடா நீ... பிடியுங்கள். கொல்லுங்கள் இவனை'' என்று கத்தியது.

கிளியின் மரியாதைக் குறைவான பேச்சு அரசருக்கு கோபத்தை தந்தது.

சே! இந்த வீட்டில் போய் தண்ணீர் குடிப்பதா? நினைத்தபடியே வேகமாக வேடனின் குடிலை விட்டு வெளியேறினார்.

சிறிய தூரம் வந்த அரசரின் பார்வையில் தூய்மையே வடிவான அழகிய சிறிய குடில் ஒன்று கண்ணில் பட்டது. அது நிச்சயமாக முனிவரின் இருப்பிடமாகத்தான் இருக்கும் என நினைத்தார்.

தண்ணீர் தாகத்தால் தவித்த அரசர் அந்த குடிலை நோக்கிச் சென்றார். அங்கே இருந்த கிளி ''அரசே வாருங்கள்! உள்ளே வந்து அமருங்கள். முனிவரே அரச பெருமான் வந்துள்ளார்'' என்றது.

கிளியின் இனிமையான வரவேற்பில் மயங்கிய அரசர் ''கிளியே உன் பேச்சு மனதுக்கு எவ்வளவு சந்தோஷத்தை அளித்தது. சற்று முன் உன்னை போன்ற ஒரு கிளியைக் கண்டேன். அது எப்படி என்னை மரியாதை இல்லாமல் திட்டியது தெரியுமா? எனக்கு வந்த ஆத்திரத்தில் அதை கொன்றிருப்பேன். என்றார். ''அரசர் பெருமானே! தயவு செய்து கோபம் கொள்ள வேண்டாம். அந்தக்கிளி என் சகோதரன் தான். நல்லவர்களாக வளர்ந்த நாங்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் பிரிந்தோம். என்னை வளர்த்த முனிவர், இனிய சொற்களை பேசக்கற்றுக் கொடுத்தார். தம்பி வளரும் சூழ்நிலை வேறுமாதிரி உள்ளது. அச்சூழ்நிலைக்கேற்ப அவனது குணமும் மாறிவிட்டது. இதில் எந்த தவறும் இல்லை என்றது கிளி. கிளியின் அறிவான பதிலைக் கேட்டு வியந்தார் அரசர்.எவரும் கெட்டவர்களாக பிறப்பதில்லை. வளரும் சூழ்நிலை தான் அவர்களது குணங்கள் மாறக் காரணமாகஅமைகின்றது.

## சிறுவர் கைவண்ணம்



யூ.எல்.எம்.பாதிக்
ஆண்டு–7A
நெஸ்ரியா மத்திய கல்லூரி
சிலாபம்.



அ.சஞ்ஜீவ்
யா/டிறி பேக்கல்லூரி
ஆண்டு–7A
சாவகச்சேரி

## பொது அறிவுச்செய்திகள்

* சீனாவை முதன் முதலில் 'கெதே' என்றே அழைத்தனர்.

* எமது நாக்கில் சுவையை உணரக் கூடிய 9000 சுவையரும்புகள் உள்ளன.

* 'புன்னகை நாடு' என்றழைக்கப்படுவது தாய்லாந்து.

* உலகிலேயே நெருப்பால் சுலபமாக எரிக்க முடியாத நகரம் பொலிவியா நாட்டைச்சேர்ந்த லாபாஸ். இதற்குக் காரணம், இது கடல் மட்டத்திற்கு பலமடங்கு மேலே உள்ளதனால் எரிதலுக்குத் தேவையான ஒக்சிசன் குறைவு.

* மிருகங்களைப் பாதுகாத்து வளர்க்கும் மிருகக் காட்சிச்சாலைகள் இன்று உலகெங்கும் பரந்து காணப்படுகின்றன. முதன் முதலில் மிருகக் காட்சிச்சாலை ஒரு சீனச் சக்கரவர்த்தியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது.



## எனக்குத் தெரிந்த பாரதி

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றில் தோன்றாமை நன்று'' என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப புகழோடு வாழ்ந்து மறைந்தவர் கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

இந்தியாவிலே எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தார். இவருக்கு சுப்பிரமணியம் என்று பெற்றோர் பெயர் சூட்டினர்.

''ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா''
என என்போன்ற சிறுவர்களை தட்டிக் கொடுத்தார்.

''அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற
போதிலும் அச்ச
மென்பதில்லையே.''
என்று நமக்குத்துணிவை ஊட்டினார். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? என்ற நிலையை நீக்கி பெண்களாய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்ய வேண்டுமென பெண்கள் பெருமையை உலகறியச் செய்தார்.

''சாதிகள் இல்லையடி பாப்பா–
குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்
பாவம்''
என சாதிக் கொடுமையை நீக்கினார்.

இத்தகைய சுப்பிரமணிய பாரதியார் காட்டிய பாதையில் சென்று உயர்வோமாக.

வாழ்க பாரதியின் புகழ்!
வளர்க அவரது இன் சொற் கவிதைகள்.

கு.ருத்திரநாத்,
தரம் – 08
யா/ இந்துக்கல்லூரி.

## சிந்தனைக்கு..

''கற்றதனா லாய
பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்''

தூய அறிவு வடிவான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை.

பா.புகழ்மா,கிங்ஸ்ரன்
சர்வதேச பாடசாலை,
வெள்ளவத்தை.

## செவ்வாய்



சூரிய மண்டலத்தில் நான்காவதாக அமைந்துள்ள கோள். பூமிக்கு அருகிலுள்ளது. இதனால் சில இயல்புகள் பூமியை ஒத்துள்ளன. இதனை மார்ஸ் (Mars) என ஆங்கிலத்தில் அழைக்கின்றனர்.யுரேனியர்களின் காலத்தில் யுத்தத்திற்குரிய தேவதையாக மார்ஸ் கருதப்பட்டது. இந்தத் தெய்வத்தை வணங்கினால் தங்களுக்கு பிரச்சினைகள் அற்ற நல்வாழ்வு கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்.நைதரசன், காபனீரொட்சைட் (பெருமளவில்) ஒக்சிசன்(சிறிதளவு), ஆகன் போன்ற மூலகங்களைக் கொண்டது. இக் கோளிலும் உயிரினங்கள் வாழக் கூடிய சூழ்நிலைகள் இல்லை. அதற்குக் காரணம் மிகவும் குறைந்த வெப்பநிலையும் அதிகளவு காபனீரொட்சைட்டும் காணப்படுகின்றமையே.குறைந்த வெப்பநிலை கொண்டதனால்

## அறிவியல் விந்தைகள்

இதனை குளிர்ச்சியான கிரகம் என்றும் அழைக்கிறார்கள். மில்லியன் வருடங்களிற்கு முன்னர் அதிகளவு நீர் செவ்வாயில் இருந்த தாகவும் பின்னர் அவை காலப் போக்கில் படிகங்களாக மாறிய தாகவும் கூறப்படுகின்றது. சராசரி வெப்பநிலையாக –124°Cயிலிருந்து–24°C வரை நிலவுகிறது. 1976ஆம் ஆண்டு செயற்கை விண்கலம் ஒன்று தரையிறக்கப் பட்டது. வெப்பநிலையைக் கூட்டி, காபனீர் ஒட்சைட்டின் அளவைக் குறைத்தால் செவ்வாயிலும் உயிரினங்கள் வாழக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்று சமீபத்திய ஆராய்ச்சிகளின் முடிவுகள் தெரிவித்திருக்கின்றன.



* ஜேர்மனியில் உள்ளது ஸ்டட் கார்ட் எனும் நகரம். இங்கு நடமாடும் ஹோட்டல் ஒன்றை பஸ்ஸில் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த இரண்டடுக்கு பஸ் ஹோட்டலில் 26 பேர் சகல வசதிகளுடனும் தங்கி இருக்கக் கூடியதாக உள்ளது.

* அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு வடகிழக்கே 70 மைல் தூரத்தில் உள்ள 'பார்க்' நகரை முட்டை நகரம் என்று அழைக்கிறார்கள். இப்படி அழைப்பதற்குக் காரணம் இங்கு அதிகளவில் கோழிப் பண்ணைகள் காணப்படுகின்றன. தினமும் இந்நகரிலிருந்து 22 லட்சம் முட்டைகள் சேகரிக்கப்படுகின்றன.



* கேளிக்கைகளின் நகரம் என்று அழைக்கப்படுவது பாரிஸ். இது பிரான்ஸ் நாட்டிலுள்ளது. உலகிலேயே அதிகளவு ஆடையலங்காரப் போட்டிகள் நடைபெறுவதும் புதிய வகை அலங்காரங்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் பாரிஸில் தான். உலகப் புகழ் பெற்ற ஈபிள் கோபுரமும் இங்கேயே அமைந்துள்ளது.

# பலாலி பெரும் தளத்தினுள் புலிகள் ஊடுருவ முயற்சி!

## படையினரைக் கிலிகொள்ளச் செய்திருக்கும் ஈவினைச் சம்பவம்

''விழுந்தவர் அனைவரும் விதையாகிப் போனதால் விடுதலைப்போர் இன்றும் தொடர்கிறது...''

விடுதலைப் புலிகளால் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் காணப்பட்ட வாசகங்கள் இவை.

படையினரின் திடீர் சோதனையின் போது உயிரிழந்த இரு போராளிகளின் நினைவாக அவர்கள் கொல்லப்பட்டு சரியாக ஒரு மாதத்துக்குப் பின்னர் அதே நாளில் இந்தப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கணினி எழுத்தமைப்பு மூலம் அச்சிடப்பட்ட இதுபோன்ற பிரசுரங்களை புலிகள் பரவலாக வெளியிட்டு வருகின்றனர்.

கடைசியாக வெளியிடப்பட்ட பிரசுரத்தில் கடந்த ஜூன் 22 ஆம் திகதி திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே உயிரிழந்த கப்டன் மித்திரன் என்கின்ற தில்லைநாதன் தவச்செல்வன், மேஜர் சுதன் என்கின்ற அம்பிகை பவான் பரந்தாமன் ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தி வெளியிடப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் பல இடங்களிலும் இந்தப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இருவருமே யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட போராளிகள்.

அண்மைக் காலமாக குடாநாட்டில் ஊடுருவிச் செயற்பட்டு வரும் புலி உறுப்பினர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக ஈவினைப் பகுதியில் படையினர் சுற்றிவளைத்த ஒரு சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இரு போராளிகள் உயிரிழந்திருப்பதை புலிகளின் அறிவிப்பு ஊர்ஜிதம் செய்கிறது.

ஈவினையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் பாலையன் அல்லது நிமால் எனப்படும் வரப்பிரகாசம் சுரேந்திரன், பூவின்பன் எனப்படும் செல்வராசா நகுலேஸ்வரன் ஆகிய உறுப்பினர்கள் கிரனேட்டுகளை வெடிக்க வைத்து வீரமரணமடைந்ததாகப் புலிகளின் வானொலி அறிவித்திருக்கிறது.

யாழ். நகரின் கேந்திரப் பகுதிக்குள் ஊடுருவிப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதல் குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் தகவல் வெளியாகி இருந்தது. யாழ் நகரத் தாக்குதல் படைவட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருந்த போதிலும் ஈவினையில் நடந்திருக்கும் சம்பவம் வடபகுதிப் படைத்தலைமையகத்தினால் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் கவனத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் அறிந்த வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

வடக்கின் ஒரேயொரு மிகப் பெரிய கூட்டுப்படைத் தளமான பலாலி பெரும் தளத்தினைச் சூழ உள்ள அதி உச்சப் பாதுகாப்பு வலயம், வலி வடக்கில் புன்னாலைக் கட்டுவன் வரை நீண்டுள்ளது.

பலாலி அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தின் எல்லையில் — வடக்கு புன்னாலைக் கட்டுவனுக்கு அருகே — ஈவினை உள்ளது. பரந்த விளைநிலப் பிரதேசம் அது.

அங்குள்ள தோட்டங்களுக்குள் கிளைமோர்களுடன் ஊடுருவிய புலிகள் இருவரே கடந்த 21 ஆம் திகதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட சமயம் அவர்களது பிடியில் இருந்து தப்பமுடியாத நிலையில் தம்மிடம் இருந்த கிரனேட்டுக்களை வெடிக்க வைத்துத் தற்கொலை புரிந்து கொண்டனர்.

அவர்களது உடல்கள் கிடந்த இடத்துக்குச் சமீபமாக பாழடைந்த ஒரு வீட்டினுள் கிளைமோர் மற்றும் அதற்குரிய உபகரணங்களையும் படையினர் மீட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவிலியன் ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே படையினர் துரிதமாகச் செயற்பட்டு இந்த இரு புலி உறுப்பினர்களையும் சுற்றி வளைத்து முற்றுகையிட்டதாக வடபகுதிப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதி படைத் தலைமையகமும், விமானத்தளமும் அமைந்துள்ள பலாலி அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தின் எல்லைவரை கிளைமோர்கள் மற்றும் வெடிப் பொருள்களுடன் புலிகள் ஊடுருவி இருப்பது அதி உச்சப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கேள்விக்குரியதாக்கி விட்டது.

ஈவினையில் இருந்து வடக்கே ஓரிரு கிலோமீற்றர் தொலைவில் விமானத் தளத்தின் எல்லைப்பாதுகாப்பு வேலி இருக்கிறது. இந்தப் பிரதேசம், தொடராகப் பல காவல் நிலையங்களால் இடைவிடாது கண்காணிக்கப்படும் பகுதி.

அங்கு அடுத்தடுத்துப் பல படை முகாம்கள் உள்ளன. நூற்றுக்கணக்கான படையினர் குவிந்துள்ள பகுதி. ஈவினை புன்னாலைக் கட்டுவன் போன்ற கிராமங்களில் மக்கள் வசித்தாலும் படையினரின் எண்ணிக்கையே அங்கு அதிகம்.

அங்கு வசிப்போரின் விவரங்களைப் படையினர் அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்திருக்கின்றனர். புன்னாலைக் கட்டுவன், அச்செழு பகுதிகளில் படையினரின் புலனாய்வுச் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இடம் பெறுகின்றன.

இந்தக் கட்டுக் காவல் கள் அனைத்துமே பலாலி பெரும் தளத்தின் முக்கியத்துவம் கருதி மேற்கொள்ளப்படுபவை.




ஆனால் இத்தனை ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் பாதுகாப்பு வலயத்துக்கு மிக அண்மையான ஓர் இடத்தில் கண்ணிகளோடு புலிகள் ஊடுருவியிருப்பது யாழ். படைத் தலைமைக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக் கிறது.

பலாலி வீதி ஊடாக அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லும் வாகனங்களை இலக்கு வைத்துத் தாக்குவதற்காகவே ஈவினைப் பகுதியில் கண்ணி களுடன் புலிகள் ஒளிந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

தக்க சமயத்தில் தகவல் கிடைத்ததால் புலிகளின் தாக்குதல் ஒன்றை முறியடித்து விட்டதாகப் படையினர் திருப்திப்பட்டுக் கொண்டாலும் பலாலி பெரும் தளத்தினுள் இனி புலிகள் ஊடுருவும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் என்பதனையே ஈவினைச் சம்பவம் படைத்தரப்புக்கு உணர்த்தியிருக்கிறது.

பலாலி பெருந்தளப் பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்த வாரம் திடீரெனத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பது இதனையே காட்டுகிறது.

பலாலி வீதி ஊடாகத் தெல்லிப்பழையைத் தாண்டி அப்பால் செல்லும் வாகனங்கள் — இவைகளில் மிகப் பெரும்பாலானவை இராணுவ வாகனங்கள் — அனைத்து வாகனங்களும் கடும் சோதனையின் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றன. விமான நிலையத்துக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங் களும் தீவிர சோதனைக்குட் படுத்தப்படுகின்றன.

பலாலி தளத்துக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் வடக்கு புன்னாலைக் கட்டுவனில் கடந்த வாரம் முதல் புதிய நடைமுறைகளின் கீழ் சோதனைக்குள்ளாக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

சிவிலியன்கள் மற்றும் அதிகாரிகள் பயணம் செய்யும் வாகனங்களைச் சோதனைக்குள்ளாக்கும் அதே நடைமுறையின் கீழ் சீருடையினர் செல்லும் வாகனங்களும் புன்னாலைக் கட்டுவன் தடைமுகாமில் தடுத்து நிறுத்தப்பட்டுச் சோதிக்கப்படுகின்றன.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் அதி உச்சப் பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவி வியத்தகு அதிரடித் தாக்குதலை நடத்திய புலிப் போராளிகள் இராணுவ மற்றும் கொமாண்டோ படை யினரின் சீருடையுடனேயே விமானத் தளத்துக்குள் ஊடுருவியது தெரியவந்திருக் கிறது. இதை அடுத்து நாடு முழுவதிலும் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ மையங்களுக்குள் சென்று வரும் படை வாகனங்கள் மற்றும் படையினர் மீதும் விசேட கவனம் செலுத்துமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. இதனை அடுத்தே பலாலி பெரும் தளத்துக்குள் சென்று வரும் இராணுவ வாகனங்கள் உட் பட அனைத்து வாகனங் களும் அதி தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

இதேவேளை—

புன்னாலைக் கட்டுவன் வடக்கு சந்திக்கு அருகே தபால் நிலையத்துக்குச் சமீபமாகக் கடந்த 25 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் மற்றொரு கிளைமோர் கண்ணியை படையினர் மீட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஈவினைப் பகுதியில் கிளைமோர் கண்ணிகளுடன் இரு புலிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இடம்பெற்ற சில தினங்களுக்குள் படையினரின் தீவிர கண்காணிப்பின் கீழ் உள்ள பலாலி வீதியில் இந்தக் கிளைமோர்க் கண்ணி மீட்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் படையினர் தேடுதல்களைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

குடாநாட்டில் தொடராகப் பல கண்ணித் தாக்குதல்களை நடத்தப் புலிகள் தயாராகி வருவதை இந்தச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

— வலிகாமத்தான்

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | | | | | | | |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத்தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரைவிமர்சனம் | அரட்டை அரங்கம் | நீங்கள் கேட்ட பாடல் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டி. வி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டி. வி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | தித்திக்கும் ஓசை | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# சிவாஜிக்கு நினைவாலயம்: தமிழக அரசு அமைக்குமா?



'மீண்டும் முதல்மரியாதை' பொற் கிரீடத்துடன் தாதா பால்கே சாஹிப் சிவாஜி

நடிப்பின் இலக்கணமாகவும் நடிப்பின் உயிர்த்துடிப்பாகவும் விளங்கியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

கலை அன்னையின் தலை மகனாய், உலகின் ஒப்பாருமிக்காருமற்ற நடிப்பு மேதையாகத் திகழ்ந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

அந்த யுக புருஷனை ஈன்றெடுத்த தமிழ் மண்ணில் அவருக்கு நிரந்தரப் பெருமையும் புகழும் சேர்க்கத் தமிழக அரசு என்ன செய்யப் போகிறது?

நடிகர் சங்கம் விடுத்த வேண்டுகோளின் படி நினைவாலயம் அமைக்குமா? அந்த மாபெரும் கலைஞரின் பெயரால் ஆண்டு தோறும் கலைஞர்களுக்கு விருது வழங்குமா?

அம்மா ஆட்சியில் இரண்டும் நடந்தால் அதுவே வரலாறாகிவிடும்.

நடிப்புக்கென்றே வந்தவர் சிவாஜி. அவர் அரசியலில் புகுந்தால் கலைத்தாய் விடுவாளா? படுதோல்வி கண்டார். ஆனால், நடிப்புத்துறையில் சிகரத்தை அடைந்து இமய சாதனை புரிந்தார்.

அவரின் சிம்மக் குரல் ஓய்ந்துவிட்டது. ராஜ நடை நின்றுவிட்டது. விண்ணுலகம் சென்றுவிட்டார் என்ற செய்தி கடந்த



மக்கள் திலகத்துடன் நட்புப் பாராட்டும் நடிகர் திலகம்

ஜூலை 21 ஆம் திகதி உலகெங்கும் எதிரொலித்தது. அது கேட்டு கலங்காத கலை உள்ளங்கள் இல்லை. பனிக்காத கண்கள் இல்லை.

தமிழ்நாட்டு எம்.ஜி.ஆர் ஆந்திரத்து ராமராவ் ஆகியோர் கலை உலகில் இருந்து அரசியலுக்குச் சென்றவர்களே. அரசியலிலும் முதல் அமைச்சர்களாக இருந்து செல்வாக்குப் பெற்றவர்கள். அவர்களுடைய இறுதியாத்திரையைப் போல் அரசியல் புகழ் ஏதும் இல்லாத சிவாஜியின் இறுதி யாத்திரையில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டார்கள். சிவாஜியின் கலைத்துறை சிறப்புக்கு இதைவிட சான்று வேறு தேவையா?

நடிப்புலகின் மூன்று தலைமுறைகளைக் கண்ட நடிகர் திலகம் சிவாஜிகணேசன் 1928ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் திகதி விழுப்புரத்தில் பிறந்தார். இவரின் தந்தை சின்னையா மன்றாயர் ஓர் சுதந்திரப் போராட்ட வீரர். தாயார் ராஜாமணி அம்மாள். இத் தம்பதியின் நான்காவது மகனே சிவாஜி. இவருடைய பெயர் வி.சி.கணேசன்.

தமிழ்த் திரையுலகில் இவர் தடம் பதித்துச் சென்ற காலம் சுமார் ஐம்பது வருடங்கள். தமிழ்த் திரைப்படத் துறையைப் பொறுத்தவரை ''சிவாஜி சகாப்தம்'' என்று போற்றுமளவுக்கு நடிப்புத் துறையில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தி தனிக்காட்டு ராஜாவாக மிளிர்ந்தவர். இவர் நடிக்காத வேடங்கள் இல்லை. இவர் வாயால் மொழியப் பெற்று அழகு பெறாத தமிழ் சொற்கள் இல்லை.

இவர் 269 படங்களில் நடித்திருக்கிறார். சிவாஜிக்கு இள வயதிலேயே நடிப்புக் கலையின் வாசம் தொற்றி விட்டது. 10 வயதில் பொன்னுசாமிப் பிள்ளை நடத்தி வந்த ''பாலகான சபா'' எனும் நாடகக் கம்பனியில் சேர வைத்தது. சிறுவயதிலேயே இவர் பல நாடகங்களில் தனது அபார நடிப்புத் திறனை வெளிக்காட்டியிருந்தார்.

அறிஞர் அண்ணா எழுதிய ''சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்'' என்னும் நாடகத்தில் வீர சிவாஜியின் வேடத்தில் கணேசன் நடித்தார். இவருடைய நடிப்பின் சிறப்பைக் கண்டு பிரமித்தனர் பெரியாரும் அண்ணாவும். நாடக முடிவில் பேசிய ஈ.வே.ரா பெரியார் ''நான் இந்த மேடையில் வி.சி கணேசனைப் பார்க்கவில்லை. மராட்டிய வீரன் சிவாஜியையே கண்டேன்'' என்றார். அன்று முதல் வி.சி.கணேசன் சிவாஜிகணேசன் ஆனார்.

1952இல் கலைஞர் மு.கருணாநிதியின் கதை வசனத்தில் உருவான ''பராசக்தி'' சிவாஜியின் முதற்படமாகும். இதில் அவர் முதற் பேசிய வசனம் ''சக்ஸ்சஸ்'', ''சக்ஸ்சஸ்'', ''சக்ஸ்சஸ்'' அதாவது வெற்றி வெற்றி என்பதாகும். இதுவே அவரது வாழ்வில் நிஜமாகிப்போனது.

தனது முதற் படத்திலேயே முழுத்திறமையையும் காட்டியதால் அவர் புகழின் உச்சிக்கே சென்று விட்டார். இதன் பின் அவரது வளர்ச்சி துரிதகதியானது.

பராசக்தியை அடுத்து ''திரும்பிப் பார்'', ''தூக்குத் தூக்கி'', ''அன்பு'', ''மங்கையர் திலகம்'', ''பூம்புகார்'', ''வணங்காமுடி'', ''வீரபாண்டிய கட்ட பொம்மன்'', ''மனோகரா'', ''நவராத் திரி'', ''உத்தம புத்திரன்'' போன்ற படங்கள் சிறப்புப் பெற்றன. அவரின் அபார நடிப்பாற்றலுக் காகவும் அவர் பேசும் அழகு தமிழின் அடுக்கு மொழிக் காகவும், மாதக் கணக்காக ரசிகர்களை திரையரங்குகளிலேயே அந்தப் படங்கள் கட்டிப் போட்டன.

''பார்த்தால் பசி தீரும்'', ''பாசமலர்'', ''பாகப் பிரிவினை'', ''படிக்காத மேதை'', ''பாவமன்னிப்பு'' போன்ற ''பானா'' வரிசையில் அமைந்த படங்களோடு ''படையப்பா'' இவர் தமிழுக்குத் தந்த கடைசிப் படமாகும்.

இவருடைய அங்கங்கள் கூடப்பேச வல்லன, நடிக்க வல்லன என்பதற்கு ''தில்லானா மோகனாம்பாள்'', ''மிருதங்கச் சக்கரவர்த்தி'' போன்ற படங்கள் சான்று. நவராத்திரியில் ஒன்பது வேடங்களில் நடித்து நவரசங்களையும் நயம்படக் காட்டியது நடிப்பின் உச்ச நிலையாகும்.

தமிழ்த் திரையுலகில் இவருடைய பணி அளப்பரியது. இதற்கு இவர் நடித்த ஒவ்வொரு பாத்திரங்களுமே சான்று பகர்கின்றன.

சிவாஜி அன்றைய முன்னணி நடிக, நடிகைகள் அனைவரோடும் நடித்திருக்கிறார். ரஜினிகாந்த், கமல் ஆகியோருடனும் இளைய தலைமுறையினரான விஜய் போன்றோருடனும் நடித்துள்ளார். இவர் தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிப் படங்கள் சிலவற்றிலும் நடித்துள்ளார். சிவாஜியின் நடிப்பு இனம், மதம், மொழிகளைக் கடந்து அனைவரையும் ரசிக்க வைக்கும் வல்லமை பெற்றது.

சிவாஜி நிறை மனிதராகவே வாழ்ந்தார் எனினும் அவருக்கு நிறைவேறாத ஆசைகளும் இருந்தன.

ஈ.வே.ரா பெரியாரின் வேஷம் ஏற்று அவர் நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அது கை கூடாமல் போய்விட்டது. தனது மகன் வயிற்று பேத்தியின் கணவன் சுதாகரனைச் சிறையில் இருந்து மீட்டுத் தருவதாக வாக்களித்தார். அதனை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டார்.

உலகில் சிறந்த நடிகர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அவர்களுக்குள் உள்ள தனித்திறமைகளையெல்லாம் ஒன்று திரட்டினால் தான் ஒரு சிவாஜிக்கு இணையாக முடியும்'' என்றார் அறிஞர் அண்ணா. சிவாஜிக்குப் பல விருதுகளும், பட்டங்களும் வந்து குவிந்தன. நடிகர் திலகம், நடிப்புச் சக்கரவர்த்தி, கலைக்குருசில் என அவை தொடரும்.

1959ஆம் ஆண்டு சிவாஜி நடித்த



முதல்ப்படமான 'பராசக்கியில்'

வீரபாண்டிய கட்டபொம்மன். எகிப்தில் நடந்த ஆசிய ஆபிரிக்க பட விழாவில் சிவாஜிக்கு சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுக் கொடுத்தது.

இந்திய அரசின் ''பத்ம ஸ்ரீ'' விருதும் ''தாதா சா ஹேப் பால்கே'' விருதும் அணி செய்தன. பிரேஞ்சு அரசாங்கம் சிவாஜிக்கு 'செவாலியே' விருது வழங்கி அவரைக் கௌரவித்தது.

இலங்கை ரசிகர்கள் சார்பில் கொழும்பு மிட்டவுன் ரோட்டறிக் கழகம் சிவாஜி கணேசனை இலங்கைக்கு வர வழைத்து பண்டாரநாயக்கா சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் பொற் கிரீடம் அணிவித்து அவருக்கு மீண்டும் முதல் மரியாதை செய்தது. இதற்கு முன்நின்று உழைத்தவர் ரோட்டேரியன் கேதீஸ்வரன் ஆவார்.

சிவாஜி நடிப்புலகின் ஜீவநதி. மரணக் கடலோடு சங்கமித்துப் போன இந்த கால நதிக்காக கண்ணீர் விட்டனர் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி, இந்தியப் பிரதமர் வாஜ்பாய், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா போன்றோர், முக்கிய அரசியல் பிரமுகர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நடிகர்கள், ரசிகர்கள் ஆகியோரும் கலங்கிக் கதறினர்.

நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் பிரிவுத்துயர் தாங்காமல் இமயமலை கூட நெருப்புக் குழம்பைக் கக்கித் தனது பாணியில் அழுதிருக்கிறது.

சிவாஜியின் மரணச் செய்தி கேட்டு மாரடைப்பால் மரணமடைந்தவர்களும்



'திருவருட் செல்வர்' படத்தில் நடிகர் திலகம்

உள்ளார்.

சிவாஜியின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது ஒருபோதும்.

—கருடன்




'சிவா ஜிக்கு மீண்டும் முதல் மரியாதை' நிகழ்ச்சி B.M.I.C.H. இல் நடைபெற்ற போது நடிகர் திலகம் சிவாஜியுடன் அமைச்சர் பௌஸி, சிவாஜியின் துணைவியார் கமலாம்மாள், ரோட்டேரியன் கேதீஸ்வரன்.





''பாசமலர்'' படத்தில் நடிகர் திலகம்— நடிகையர் திலகம் சாவித்திரி— காதல் மன்னன் ஜெமினி கணேசன்



எகிப்திய ஜனாதிபதி நாசரின் இந்திய வருகையின் போது அவருடன் நாட்டிய பேரொளி பத்மினி நடிகர் திலகம்

# வத்தளை புனித அன்னம்மாள் ஆலய திருவிழா சிறப்பிதழ்

## தேவதாயாரை ஈன்ற ஆனாளுக்கு பெருவிழா

கத்தோலிக்க திருச்சபையில் புனித அன்னம்மாளுக்கு சிறப்பானதொரு இடமளிக்கப்பட்டு வருகிறது. புனித மரியாளுக்கு அடுத்தபடியாக கத்தோலிக்கர்கள் புனித அன்னம்மாளையே வழிபட்டு வருகிறார்கள்.

இலங்கையில் இப்புனிதைக்கு பல இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயங்களில் வத்தளையில் அமைக்கப்பட்டுள்ள ஆலயமும் விசேடமானதொரு இடத்தை வகித்து வருகிறது. இந்த ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்ட் மாதத்தில் வரும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் திருவிழா கொண்டாடப்படுகிறது.

தலவில்லு புனித அன்னாம்மாள் ஆலய வருடாந்த திரு விழாவுக்கு அடுத்தபடியாக வத்தளை அன்னம்மாள் ஆலய திரு விழாவே அதிக பக்தர்கள் கூடும் விழாவாக உள்ளது எனலாம்.

இயேசு கிறிஸ்துவை இவ்வுலகுக்கு அளித்த புனித தேவமாதாவின் தாயாரே இந்த புனித அன்னம்மாள். 'ஆனாள்' என அழைக்கப்பட்ட இந்த புனிதையின் பிறப்பிடம் இன்று லெபனான் என அழைக்கப்படும் இஸ்ரேல் எல்லையில் உள்ள செவொரிஸ் என்னும் சிற்றூராகும்.



'ஆனாள்' என்பதன் பொருள் 'வரப்பிரசாதம்' என்பதாகும். ஆனாளுக்கு 12 வயதாகும் பொழுது அவரது அன்னை இவ்வுல கிலிருந்து மறைந்தார். 20 வயதான பொழுது அவர் ஜோக்கிம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். 20 ஆண்டுகளின் பின்னர் இத்தம்பதியருக்குப் பெண் மகவு ஒன்று பிறந்தது. அந்த மகவே மரியாள் என அழைக்கப்பட்ட தேவ தாயார்.

தேவ தாயாரை ஈன்ற ஆனாளுக்கு (புனித அன்னம்மாள்) ஆகஸ்ட் 5 ஆம் திகதி வத்தளையில் திருவிழா நடைபெறுகிறது. ஆரம்ப காலத்தில் சிறு ஆலயமாக இருந்த வத்தளை புனித அன்னம்மாள் ஆலயம் இன்று கம்பீரமாக உயர்ந்து காட்சியளிக்கிறது.

கடந்த 27 ஆம் திகதி திருவிழா கொடியேற்றம் நடைபெற்றது. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஆகஸ்ட் 4ஆம் திகதி மாலை ஆராதனை (வெஸ்பர்ஸ்) விசேடமாக ஆலய முன்றலில் நடைபெறும். 5 ஆம் திகதி திருவிழா கொண்டாடப்படும்.

வத்தளையையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் கோலாகலமாகக் கொண்டாடும் பெருவிழாவாக புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா அமைந்துள்ளது.

**நாட்டில் சாந்தி, சமாதானம்**

**நிலவ; தாயே அருள்புரியும்!**


VIDEOSPATHY
உங்களுக்குத் தேவையான அனைத்து வகை English, Tamil, Hindi, Video Cassetts களுக்கும்
வத்தளை Gemunu Theatre அருகில்.......
No.128, Negombo Road, Wattala.

INTERNET பிரியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
செட்டியார் தெருவில்.....
VJ NET@CAFE
விசேட சலுகைகள்
- ஒரு நிமிடத்திற்கு ஒரு ரூபா மாத்திரமே அறவிடப்படும்.
- வெளி நாட்டில் உள்ளோருடன் குறைந்த செலவில் வீட்டிலிருந்தே உரையாடுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- சிறப்பான சலுகைகளும் இலவச Internet, E-mail போதனைகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- நிரந்தர அங்கத்தவர்களுக்கு மேலும் பல விஷேட வசதிகளும் செய்து தரப்படும்.
PIII, 866MHz
S.Configuration
128MB Ram
128kbps
மேலதிக விபரங்களுக்கு:
VJ ENTERPRISES (PVT) LTD
No. 292, Ground Floor, Sea Street, Colombo-11.
Tel:075-365267-8, 075-358634, 075-350113, Fax:452467
E-mail : vjenter@sltnet.lk, Web site : www.vjenter.net

சந்தித்து, ஆலோசனை செய்து வியாதியை நிர்ணயிக்கும் ஆய்வுகூடம்
YOGA LABORATORY
ஆலோசனையும் சேவையும்
Blood, Stool, Urine, E.C.G., X-ray போன்ற அனைத்துப் பரிசோதனைகளும் ஆய்வு செய்யப்படும்.
மு.ப. 6.30 - பி.ப. 10.00 வரை
NATHAN PHARMACY
251/A, Negombo Road, Wattala.
Tel: 075 - 341377, 941402.

வெள்ளவத்தையில்......
VAIGEE MEDICALS
மருந்து வகைகள், Groceries, Cosmetic, Fancy பொருட்கள், குழந்தைகளுக்கு தேவையான பாவனை பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டியது
VAIGEE MEDICALS
(Opp Wellawatte Police)
289A, Galle Road, Colombo-06.
Tel: 504950, 599270.

வத்தளையில்......
The Pharma West
மருந்து வகைகள், Groceries, Cosmetic, Fancy பொருட்கள், குழந்தைகளுக்கு தேவையான பாவனை பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டியது
The Pharma West
(Opp.St'Annes church)
223, Negombo Road, Wattala. T.P. 932933

NGJ New Gowry Jewellers
அணிந்ததுமே அழகு ஜொலிக்கும் வண்ண ஆபரணங்களின் தெரிவுக்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
33, Wattala Shopping Complex
Negombo Road, Wattala. T.P:935214

சகல விதமான மளிகைச் சாமான்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள.........
Suguna Stores (Opp. Wattala Petrol Shed)
207, Negombo Road, Wattala.
T.P:939158

ASF ALSAN STEEL FURNITURE
Manufacturers of High Quality Equipments & House hold furniture
Office / Work Shop:
No.55, Uswatha Road, Kandana, Sri Lanka.
Tel: 238650, 239964 Fax: 075-347136
Show Rooms:
No.108, St.Antony's, Mawatha, Colombo - 13. Tel: 458231
No.48, Negombo Road, Kandana. Tel: 238907

THANUSHA COMMUNICATION
* Local Calls
* Fax
* Internet
* Laminating
* IDD Calls
* Photo Copy
* E-mail
* Net Phone
* Tamil, English & Sinhala Typing
* Van for Hire
* Air Ticketing
24 Hours Sevice
No. 24, St. Anthony's Mawatha,
Colombo -13. T.P:- 074-610330-1

மளிகைச் சாமான், Ever Silver, Gift items, Fancy goods அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள........
Mayura Home Needs
24, Hekitta Road, Wattala
T.P : 932165

SONAS CERAMICS
புனித அன்னமாளின் திருப்பவனியை முன்னிட்டு விஷேட சலுகை!
தரமான Wall Tiles, Floor Tiles, இறக்குமதியாளர்களும் குளியலறைகளுக்குத் தேவையான அனைத்து வகை உபகரணங்களையும் விநியோகிப்பவர்களும்
260/A, Negombo Road, Wattala. Tel : 074-819315

# கதிர்காமத் தீர்த்தோற்சவ மலர்

## கருணைக் கதிர்வீசி அருள்பொழியும் கதிர்காமக்கந்தன்

கலியுகத் தெய்வமாகப் போற்றப்படுபவன் முருகன். இலங்கையில் உள்ள முருகன் தலங்களுள் சிறப்பாகப் போற்றப்படுவது கதிர்காமம்.

கதிர்காம வரலாறு பற்றி 'கந்த புராணம்' கூறுகிறது. கதிர்காமப் பெருமானைத் திருப்புகழ் தந்த அருணகிரிநாதர் மெய்யுருகிப் பாடியுள்ளார். கதிர்காம மடத்தின் இந்துக்களது நிர்வாகத்தின் கீழ் தெய்வானை அம்மன் கோயில், கந்தசுவாமி மூலஸ்தானம், கல்யாண மண்டபம், சுப்பிரமணியக் கோயில், லக்ஷ்மணப் பெருமாள் கோயில், சிவன் கோயில், வைரவர் கோயில், ஐயனார் கோயில், மாணிக்கப் பிள்ளையார், கதிரமலை, வள்ளிமலை ஆகிய கோயில்கள் இருந்தன. ஆனால் இன்று கதிர்காமத் தில் இந்துக்களின் கைவசம் ஓரிரு கோயில்கள் மட்டுமே உள்ளன.

கதிர்காம ஆலயம் 'தச நாமிகள்' என்று அழைக்கப்படும். சந்நியாசிகள் தொன்றுதொட்டு நடத்தி வந்தனர். கிடைக்கக்கூடிய வரலாற்று ஆய்வுகளின்படி முதன் முதலில் 'கல்யாண கிரி' என்பவரே தவம் செய்வதற்கு வட இந்தியாவிலிருந்து கதிர்காமத்துக்கு வந்தார்.

முருகப் பெருமானின் மந்திரம் பொறிக்கப்பட்ட யந்திரத்தைத் தயாரித்து இடைவிடாது 12 ஆண்டுகள் ''சடாட்சர மந்திரத்தை'' உச்சரித்தார். அந்த ஞானியால் சக்தி ஏற்றப்பட்ட யந்திரமே இப்பொழுது திருவிழாக் காலங்களின் போது யானை மீது வைக்கப்பட்டு திரு உலா வருகிறது.

நான்கு முக்கிய திருவிழாக்கள் கதிர்காமத்தில் நடைபெறுகின்றன. முதலாவது திருவிழா சித்திரைப் புத்தாண்டிலே நிகழ்கிறது. இரண்டாவது சிறப்பு மகோற்சவத்துக்கு முன்னோடியாக வள்ளியம்மையை மணம் முடித்ததற்கு என கன்னிக்கால் நடும் திருவிழா அமைகிறது. தொடர்ந்து ஆடி அல்லது ஆவணியில் பதினைந்து அல்லது பதினாறு நாட்களுக்கு மகோற்சவம் நிகழுகிறது. நான்காவதாக திருக்கார்த்திகை விளக்கீடு இடம் பெறுகிறது. இவ் வருடம் கதிர்காம தீர்த்தோற்சவம் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறுகிறது.



சிறப்பான விழாக்களாக இவை விளங்கினாலும், தினமும் இங்கு விழாக் கோலம்தான். பாரதத்திலிருந்தும், ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் தினமும் அடியார் கூட்டம் முருகப் பெருமானின் அருளினை நாடி வந்த வண்ணம் உள்ளனர்.

போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்தில் பக்தர்கள் பாத யாத்திரையாகக் காடு, மேடுகளைக் கடந்து ''கல்லும், முள்ளும் கடந்து கந்தனை வழிபடுவோம்'' எனப் பாடியபடி வந்தனர். ஆலயத் தொண்டுக்கே பல அடியார்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

மிகத் தொன்மைமிக்க இந்த ஆலயத்தில் பெரிய கோபுரமோ, ஆலய மண்டபங்களோ இல்லை. கருவறையில் விக்கிரகமில்லை. மந்திர உச்சாடனங்கள் இல்லை.

'கப்பூறாளைகள்' வாயைத் துணியால் கட்டி மௌனமாகப் பூசை நிகழ்த்துகின்றார்கள். திருவிழாக் காலத்தில் கருவறையில் இருக்கும் புனிதப் பெட்டி அலங்கரித்த யானை மீது திரு உலா வருகின்றது. ''மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது'' என்பதற்குக் கதிர்காம ஆலயம் சிறந்த எடுத்துக்காட்டு.

கதிர்காம உற்சவத்தினையொட்டி கொழும்பு நகரில் வேல்விழா நடைபெற்று வந்தது. கதிர்காமத்தில் இன, மத பேதமின்றி எல்லோரும் வணங்கி அருள் பெறும் இன்பநிலை வளர்கிறது.

''ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும் நின்னடியார் செய்கை பராப ரமே'' என்று தாயுமான சுவாமிகள் குறிப்பிடும் நிலையைக் கதிர்காமத்தில் காண முடிகிறது.


சங்கீதா ஜுவல்லஸ்
வெள்ளவத்தையில் பல வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்
Sangeetha Jewels
Dealers in 22 kt. Gold Jewellery.
Credit Card Accepted.
335C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 500682, 585321

OASISS Rest
Air Conditioned & Non A/C Rooms With T.V, Telephone & Attached Bathrooms
IDD Calls, Local Calls, Fax, Bridging Calls
No.135, Maliban Street, Colombo 11, Sri Lanka.
Tel : 338437, 433225, 074-716998

NEEPA JEWELLERS
Genuine 22 Ct. Gold

அற்புத கலை நயம் நீபாவின்
அதிசயத் தொழில் வலம்
அபூர்வ வடிவங்கள்
அத்தனையும் அழகிலும் அழகு
பரிசுத்தத் தங்கத்தில்
எந்நாளும் தெரிவது பொலிவு
தரித்து வாரீர்
நவரத்தினத்தின்
புதுமைகளைக் காணீர்
309-2/4, Galle Road, Colombo-06. Tel : 505942

R.T.K VIDEO VISION
Tamil, English Movies, Tamil Drama Cassette, VCD's and Audio Cassettes and CD's
No. 57, 57/1, Manning Place, Colombo - 06.
Tel : 505059
NEW BRANCH
Tamil, English, Hindi Movies, Tamil Drama Cassettes, VCD's and Audio Cassettes and CD's
No.59, Hampden Lane, Colombo-06. Tel:074-516240.

MIAMI RECEPTION HALL (PVT) LTD

இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ திருமண வைபவங்களுக்கு அனைத்து வசதிகளுடன் வாகன தரிப்பிடமும் கொண்ட ஒரே மண்டபம்
மியாமி திருமண மண்டபம்
இல. 33, அலெக்சான்ரா வீதி, கொழும்பு - 06.
தொலைபேசி : 504362 / 3, பெக்ஸ் : 94-1-440826
E-mail : mohdbros@cga.lk, albilal@sltne.lk

RETINA INSTITUTE OF BUSINESS STUDIES

Kids Computing
MS Office
Diploma in Computer Studies
Graphic Designing
Web Designing
Tofel
Spoken English Classes
2 1/2, Edward Lane, Colomo - 03.
Tel: 507781, 507782

R.T.K COMMUNICATION

Local Calls. • IDD Calls. • Fax. • Photo Copy. • Connecting Calls. • Laminating.
No.57A, Manning Place, Colombo-06.
Tel:074-519506, 074-517630
and
R.T.K HARDWARE
CEMENT, LIME, ASBESTOS, STEEL And BUILDING MATERIALS
No.57, Manning Place, Colombo-06. Tel : 597677

சுத்தமான சைவ உணவுகளை சுவையுடன் உண்டு திருப்தியடைய

Brinthavan Vegetarian Hotel
135, Malay Street, Colombo-02
T.P : 384303

RETINA RECRUITING
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஸ்தாபனம்
ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைகள்
Cyprus, Dubai, Qatar, Saudi-Arabia
மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் பெற்றுத் தருவோர்
RETINA RECRUITING
2 1/2, Edward Lane, Colombo - 03.
Tel: 507781, 507782


SINDARLLA BEAUTY FASHION
மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் வகைகள்
சிறந்த முறையில் நிறைந்த திருப்தியுடன்
தனது சேவையை செய்து வருகின்றது
மற்றும் கேக் வகைகள் மணப்பெண் அலங்காரம் என்பவற்றிற்கான பயிற்சிகள் நடைபெறுகின்றன
(புதிய வகுப்புகளும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்)
Mrs. Sreethran
Tel : 074-514298
7-7/4, Grount Floor, Orchard Building, Galle Road, Colombo-06.

# ஆசிய வலைப்பந்தாட்டத்தில் இலங்கை மீண்டும் சாம்பியன்

ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை மீண்டும் சாம்பியனாகியுள்ளது.

ஏற்கெனவே 1990இல் நடைபெற்ற இரண்டாவது ஆசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் 1997 இல் நடைபெற்ற நான்காவது ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியிலும் இலங்கை வெற்றி பெற்றது. தற்போது ஐந்தாவது சாம்பியன்ஷிப் போட்டியிலும் இலங்கை அணி சாம்பியனாகியுள்ளது.

5ஆவது சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜூலை 23முதல் 29 வரை கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றன.

8 நாடுகள் இதில் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் சிங்கப்பூர், இலங்கை அணிகள் மோதின.

மயிர்கூச்செறியும் விதத்தில் மிகவும் விறுவிறுப்பாக இப்போட்டி நடைபெற்றது. இதில் எந்த அணி வெற்றி பெறும் என்பதை போட்டியின் இறுதி நிமிடம் வரை அனுமானிக்க முடியாமல் இருந்தது.

முதலாவது சுற்றில் சிங்கப்பூர் 16—14 விகிதத்தில் வென்றது. இரண்டாவது சுற்றில் இலங்கைக்கு 14—13 விகிதத்தில் வெற்றி. மூன்றாவது சுற்றில் சிங்கப்பூர் 16—15 விகிதத்தில் மீண்டும் வெற்றி பெற்றது. மூன்றாவது சுற்று முடிவில் சிங்கப்பூர் 45 கோல்களையும் இலங்கை 43 கோல்களையும் பெற்றிருந்தன.



வெற்றிக் கிண்ணத்துடன் இலங்கை அணி வீராங்கனைகள்

2 புள்ளிகள் பின்னடைவில் இருந்ததால் தமது தாயக அணி தோல்வியுற்று விடுமோ என இலங்கை அணி ஆதரவாளர்கள் பதைபதைப்புடன் இருந்தனர். ஆனால் 4ஆவது சுற்றில் இலங்கை 12—9 கோல்களால் வெற்றியீட்டியது.

இதனால் இலங்கை அணிக்கு மொத்தமாக 55—54 கோல்கள் விகிதத்தில் வெற்றி கிடைத்தது.

இலங்கையின் சார்பில் தமயந்தி ஜயதிலக (தலைவி), ஹர்ஷனி விஜயலத், சந்தியா ஜெயசூரிய, ஜே.ஏ. ரட்ணா விக்டோரியா, காயத்ரி லங்காதிலக, சஷிகா ரணசிங்க சமரசிங்க, கிஷாந்தி ஜயகொடி ஆகியோர் இறுதிப் போட்டியில் விளையாடினர். நர்மதா விஜயரட்ண, அனோமா சிரியகாந்தி, சமிக்கா அபொன்ஸூ, நில்மினி மல்காந்தி தம்மிக்க, லாலினி பிரியங்கிகா ஆகியோர் இலங்கை அணியில் இடம் பெற்ற ஏனைய வீராங்கனைகளாவர்.

இவ்வெற்றியின் மூலம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



சிங்கப்பூர் வீராங்கனை ஒருவர் 'கோல்' போட முயற்சிப்பதையும் இலங்கை வீராங்கனைகள் அதைத் தடுக்க முனைவதையும் படத்தில் காணலாம்



## மயூரபதி அம்மன் தேர்

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேரேறி பக்தர்கள் புடை சூழ ஊர்வலம் வரும் காட்சி.



பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுகிறார்கள்.

— படங்கள்: த.வேலுசாமி




### கேள்விகள் ஆயிரம் கேளு பாப்பா

அதிகாரத் தரப்பினர் பொதுமக்களின் கருத்தை அறியும் முயற்சியில் ஈடுபடுவதை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்று தீர்மானிப்பதில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் சிக்கல்கள் ஏற்பட் டுள்ளனவாம்.

காங்கிரஸ்காரர் ஒருவர், ''எல்லோரும் சேர்ந்து பொதுவான முடிவை எடுப்போமே'' என்று தமிழ்க் கட்சிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் கூறினார். அப்பொழுது ஒரு நகரத்தின் பிதா ''மத்திய குழுவைக் கூட்டி தீர்மானம் எடுக்காமல் எங்களால் இங்கே முடிவு எடுக்கமுடியாது'' என்று சொல்லி விட்டாராம் .

இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று அந்தத் தமிழ்க் கட்சியின் நகர பிதாவும், சிரேஷ்ட தலைவர் ஒருவரும் சொல்கிறார்கள். ஆனால் சர்வஜன வாக்கெடுப்பிற்கு தாம் எதிர்ப்பு என்று நேர காலத்துடனேயே தேர்தல் ஆணையாளருக்கும் அவர்கள் அறிவித்து விட்டார்களாம். மத்திய குழுவைக் கூட்டி முடிவை எடுக்கப் போவதாக அவர்கள் கூறியது வெறும் பம்மாத்து என்று தற்பொழுது தெரிய வருகிறதாம்.

ஏற்கனவே தனித்து எடுத்து விட்ட முடிவுக்கு ஏன் மத்திய குழுக் கூட்டம் ? மத்திய குழுவை ஏமாற்றவா? அல்லது தேர்தல் ஆணையாளரை ஏமாற்றவா? ஏனைய தமிழ்க் கட்சிகளை ஏமாற்றவா?

இப்படிக் கேள்விகள் இப்போது உள்ளேயும் வெளியிலும் கேட்கப்படுகின்றனவாம்.

### எதற்கும் தயார்

அபிப்பிராயம் அறிய தேர்தல் நடத்துவதா, இல்லையா என்று அதிகார அம்மணிக்கு இப்போது மனக் குழப்பமாம். கூட இருக்கும் மந்திரிப் பட்டாளம் இரண்டு பட்டுக் கருத்துக் கூறி நடந்து கொள்வதால் தானாம் இந்த நிலை. போதாக்குறைக்கு எதிர்ப்புக் கட்சிக்காரர்களின் பலமும் அம்மணியின் மனக் குழப்பத்தை மேலும் அதிகரித்திருக்கிறதாம்.

இப்படித்தன் அம்மணியை அதிகமாக நேசிக்கும் வயோதிப அமைச்சர் ஒருவரும் தெரிவித்திருக்கிறாராம்.

''என்றாலும் அம்மணி உறுதியாக இருக்கிறார்'' என்று அவர் சர்டிபிக்கேட் வேறு கொடுக்கிறாராம்.

எல்லா நிலைகளையும் உஷார் நிலையில் வைக்கச் சொல்லி அம்மணியின் உத்தரவுகள் போயிருக்கின்றனவாம்.

விசேடமாக கலகத் தடுப்புக்காரர்களுக்கு விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று வகுப்புகளும் நடந்தனவாம்.

அபிப்பிராய தேர்தல் காலத்திலோ அதற்கு முன்போ யாரும் வாலாட்ட முடியாது என்று கூறுவது இதனால் தானாம்.

### அம்மணி கருணை யாருக்கு?

அதிகாரத் தரப்பினரின் கூட்டுக்குள் உள்ள பிரதான கட்சியின் செயலாளர் பதவிக்கு இப்போது கடும் போட்டி எழுந்துள்ளதாம்.

இதனால் புதிய செயலாளரைத் தெரிவு செய்வதற்கு இன்னும் சில நாட்கள் தாமதம் ஏற்படலாம் என்று தெரிகிறதாம்.

ஆளும் முன்னணிக்கு செயலாளரான அமைச்சரும், இப்பதவியில் கண் வைத்திருந்தார். ஆனால் இப்போது முடிவை மாற்றிக் கொண்டுள்ளாராம். ஆனால் இப் பதவியைக் கைப்பற்றும் முயற்சியில் தொடர்புடைய சகலரும் கரிசனை காட்டுகிறார்களாம்.

அந்தப் பட்டியலில் முஸ்லிம் தொழிற் சங்கவாதியும் இப்போது இணைந்துள்ளாராம். தனக்கே அப்பதவி தரப்பட வேண்டும் என்றும் தகுதியானவரும் சிரேஷ்ட உறுப்பினரும் தாமே என்றும் அவர் அவாவுடன் சொல்கிறாராம். ஆனால் அப்பதவி அவருக்குக் கிடைக்கும் என்பது சந்தேகம்தானாம்.

எல்லோருடைய ஆதரவும் இப்போதுள்ள கட்சி பிரதிச் செயலாளருக்கே இருந்து வருகிறதாம். அம்மணியின் கருணை யாருக்கு என்று தான் விளங்கவில்லையாம்.

### நன்றி சொல்ல வேண்டும்

அதிகாரப்பதவியில் இருந்து தனித்துவத் தலைவரைத் தூக்கி எறிந்ததால் கவலை கொண்டிருந்த தனித்துவக் கட்சியின் முக்கியஸ்தர்கள், அதற்காக இப்போது அதிகமாக சந்தோஷப்படுகிறார்களாம்.

அம்மணி அவரைத் தூக்கி எறிந்ததால் தான் தனித்துவக் கட்சிக்கு இப்போது மவுசு ஏற்பட்டிருக்கிறதாம்.

கூட்டங்களில் மக்கள் வெள்ளமாகத் திரண்டு வருகிறார்கள். கட்சி இப்போது உச்சத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்று தனித்துவக் கட்சியின் கல்விக்கான அதிகாரப் பதவியில் இருந்த முக்கியஸ்தர் விளக்குகிறாராம்.

முன்பு எம்மை ஏளனமாகப் பார்த்தவர்கள் இப்போது உரிமையுடன் எம்முடன் வந்து இணைந்து கொள்கிறார்கள். தூக்கி எறிந்து எம்மைப் பலப்படுத்தித் தந்ததற்கு அதிகார அம்மணி மீது நாம் கோபப்படக் கூடாது. அவருக்கு நன்றிதான் தெரிவிக்க வேண்டும் என்று தனித்துவக் கட்சி கூறுகிறதாம்.

### முட்டாளாகிப் போனேன்

இரண்டாவது முக்கிய பதவி வகிக்கும் அவருக்கு, அப்பதவிக்குரிய கௌரவத்துடன் பேசத் தெரியவில்லையாம். எப்போதும் முகத்தில் கடுகடுப்பு. ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதை மறந்து இன்னொரு பொதுக் கூட்டத்தில் முரணாகப் பேசுகிறார்.

ஆளும் கட்சித் தரப்பாரிடம் நம்பிக்கையை அவர் பெறவில்லை.

மகாநாயக்கர்களிடம் கூட போதிய மதிப்பு அவருக்கு இல்லை.

இப்படி அந்த முக்கிய பதவிக்குரிய முக்கியஸ்தர் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கிறாராம். அதிகார அம்மணிதான் இப்படிப் பலரிடமும் கூறி கவலைப்பட்டு வருகிறாராம்.

''நான் செய்ததிலேயே மகா முட்டாள்தனம் அந்த ஆளை அந்தப் பதவியில் அமர்த்தியதுதான்.''

இப்படி தன்னைத் தானே நொந்து கொண்டாராம் அதிகார அம்மணி.

பழகப் பழகப் பாலும் புளிக்கும். சும்மாவா சொன்னார்கள் பெரியோர்கள்!












இப்பத்திரிகை கொழும்பு -06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஓகஸ்ட் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.